## (ஊ) அரசாங்க நிதி

1969/70ஆம் நிதியாண்டில் (அதாவது 1969 ஒற்றோபர் தொடக்கம் 1970 செத்தெம்பர் வரை) அரசாங்க நிதித் தொழிற்பாட்டின் சுருக்கம், முன்னைய ஒன்பது நிதியாண்டுகளினதும் ஒப்பியல்பான தரவுகளுடன் 1969/70இற்கும் 1970/71இற்கும் உரிய மூல மதிப்பீடுகள் கீழே அட்டவணை II (ஊ) 1 இற் தரப்பட்டுள்ளன. 1969/70இற்கும் 1970/71இற்கும் உரிய தரவுகளின் விரிவான பகுப்பும் ஆய்வும் பின்தொடரும் உள்ளடக்கத்திலும் அட்டவணைகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

மீளப்பார்வையிடும் 1969/70இற்குரிய நிதியாண்டின் மொத்த வருவாய் ரூ. 27,360 இலட்சமாகும். அதேவேளையில் அதனின் மொத்தச் செலவு ரூ. 38,860 இலட்சமாகவிருந்தது. இறுதியில் குறிக்கப்பட்ட தொகை வாக்களிக்கப்பட்ட செலவாகிய ரூ. 36,850 இலட்சத்தையும் சில முன் கணக்குகளுக்கு[1] வழங்கப்பட்ட கொடுப்பனவுகளான ரூ. 2,010 இலட்சத்தையும் உள்ளடக்கும். வரவுசெலவுத்திட்டத்தில் ஏற்பட்ட பணக்குறையான ரூ. 11,500 இலட்சம் என்றுமேயில்லாத அளவு ரூ. 8,150 இலட்சங்கொண்ட உள்ளூர் அங்காடிக் கடன்பாடுகளாலும் ரூ. 3,390 இலட்சம் கொண்ட வெளிநாட்டு நிதியாலும் ரூ. 220 இலட்சங்கொண்ட உள்ளூர் அங்காடியல்லாக் கடன்பாடுகளாலும் (தேறிய நிருவாகக் கடன்பாடு) நிதி ஈடுசெய்யப்பட்டது. வரவுசெலவுத்திட்டப் பணக் குறையை நிதி உதவி செய்தபின் இந்த மூலங்களிலிருந்து பெற்ற ஒருசில தொகை (வெளிநாட்டு உதவி இணைக்கினை நிதிகளை உள்ளடக்கிய) பண நிலுவைகளை ரூ. 260 இலட்சத்தால் மிகையாகத் துணைசெய்தது. ரூ. 2,140 இலட்சங்கொண்ட கடன் மீளக் கொடுப்பனவுகள்[2] முதலியவற்றைக் கணக்கில் எடுக்கும்போது 1969/70இற்குரிய தேறிய பணக்குறை ரூ. 9,360 இலட்சமாக இருந்தது.

1969/70இற்குரிய மொத்தச் செலவு மூல வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலும் பார்க்க ரூ. 930 இலட்சத்தால் உயர்ந்திருந்தது. மீளெழும் செலவிலும் மூலதனச் செலவிலும் முறையே ரூ. 500 இலட்சம், ரூ. 580 இலட்சம் வீழ்ச்சிகள் ஏற்பட்ட நிலையிலும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டதற்கு இந்தாண்டின் மூலமதிப்பீடுகளில் ஏற்பாடு செய்யப்படாத ரூ. 2 010 இலட்சமுற்பணக் கணக்குக் கொடுப்பனவுகளின் முக்கிய விளைவே காரணமாகும். அதேவேளையில் முதலில் எதிர்பார்த்ததற்குக் குறைவாக மொத்த வருவாய் ரூ. 980 இலட்சமேயாகும். இதன் தொடர்பாக முதலில் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலாக வரவுசெலவுத்திட்டப் பணக்குறை ரூ. 1.910 இலட்ச அதிகரிப்பைக் காட்டியது. முன்பு எடுத்துரைத்ததற்கு மேலாக ரூ. 3,580 இலட்சத்தை உள்ளூர் அங்காடிக் கடன்பாடுகள் உதவி இப்பணக்குறையை நிதியீட்டஞ் செய்தது. அதேவேளையில் எதிர்பார்த்த வெளிநாட்டு நிதியில் ரூ. 1,630 இலட்சம் வீழ்ச்சி ஏற்பட்டது. வரவுசெலவுத்திட்ட வேளையில் முதலில் எதிர்பார்க்கப்படாத ரூ. 220 இலட்சம்கொண்ட நிருவாகக் கடன்பாடுகள் உள்ளூர் அங்காடிக் கடன்பாடுகளில் ஏற்பட்ட கூரிய அதிகரிப்பும் ஒன்றுசேர்ந்து வெளிநாட்டு நிதியில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடுசெய்து வரவுசெலவுத்திட்டத்தில் ஏற்பட்ட பணக்குறையை நிறைவுசெய்தது. அத்துடன் ரூ. 260 இலட்சத்தால் அரசாங்கத்தின் பண நிலுவைகளை உயரச் செய்தது.

1969/70இல் வரவுசெலவுத்திட்ட இயக்கங்களின் தேறிய விரிவுத்தாக்கம் ரூ. 4,280 இலட்சமாகும்.[3] இது முதலில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 800 இலட்சத்திலும் பார்க்கக் கூடியதாகயிருந்தது. தேறிய பொதுப்படுகடன் சென்ற ஆண்டின் இறுதி தொடக்கம் ரூ. 9,980 இலட்சத்தால் அதிகரித்து இந்நிதியாண்டின் இறுதியில் ரூ. 72,370 இலட்சமாக விளங்கியது.

---

1. 180 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.
2. அட்டவணை II (ஊ) 1 (உ) அடிக்குறிப்பைப் பார்க்கவும்.
3. அட்டவணை II (ஊ) 9ஐப் பார்க்கவும்.

## அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின்

| விடயங்கள் | 1960/61 | 1961/62 | 1962/63 | 1963/64 |
|---|---|---|---|---|
| 1. அரசிறை ... | **1,514** | **1,621** | **1,593** | **1,759** |
| 2. செலவு ... | 2,014 | 2,122 | 2,032 | 2,278 |
| 2. 1 மீண்டெழுஞ் செலவு (இ) ... | 1,578 | 1,626 | 1,643 | 1,891 |
| 2. 2 மூலதனச் செலவு (ஈ) ... | 421 | 481 | 403 | 403 |
| 2. 3 முற்பணக் கணக்குகளும் ஏனையவையும்... | 14 | 15 | – 14 | – 16 |
| 3. வரவு செலவுத்திட்டப் பணக்குறை ... | **500** | **501** | **439** | **519** |
| 4. படுகடன் மீளக் கொடுப்பனவு (உ) ... | **37** | **45** | **47** | **57** |
| 5. தேறிய பணக்குறை ... | **463** | **456** | **392** | **462** |
| 6. தேறிய பணக் குறையின் நிதியீட்டம் | | | | |
| 6.1 உள்நாட்டுக் அங்காடியல்லாக் கடன்பாடு ... | 29 | 105 | – 34 | – 2 |
| 6.2 உள்நாட்டு அங்காடிக் கடன்பாடு ... | 441 | 374 | 372 | 368 |
| 6.3 வெளிநாட்டு நிதி ... | 30 | 63 | 100 | 180 |
| 6.4 பண மிச்சங்களின் வீழ்ச்சி ... | ... | – 40 | ... | 45 |
| 7. தேறிய பணக்குறையின் நிதியீட்டம் .. | | | | |
| 7.1 உள்நாட்டு அங்காடியல்லாக் கடன்பாடு ... | 29 | 105 | – 34 | – 2 |
| 7.2 உள்நாட்டு அங்காடிக் கடன்பாடு ... | 409 | 339 | 333 | 323 |
| 7.3 வெளிநாட்டு நிதி ... | 24 | 53 | 92 | 95 |
| 7.4 பண மிச்சங்களின் வீழ்ச்சி ... | ... | – 40 | ... | 45 |
| 8. நிதித் தொழிற்பாட்டின் விரிவுத்தாக்கம் ... | **234** | **190** | **162** | **163** |
| 9. நிலுவையிலுள்ள பொதுப்படுகடன் (தேறிய) ... | **2,333** | **2,689** | **3,065** | **3,436** |

(அ) பின்னிணைப்பு II இன் அட்டவணைகள் 30 இலும் 32 இலும் உள்ள அடிக்குறிப்புகளிற் தரப்பட்டுள்ள காரணங்களுக்கமைய இவ்வெண்தொகைகள் அரசாங்கக் கணக்குகளிலிருந்து வேறுபடும்.

(ஆ) அரசாங்கத் திணைக்களங்களின் வெ. செ. உ. சா. செலவை ஒதுக்கிய பின்னர்.

(இ) 1968/69 தொடக்கம் மூலதனச் செலவாகப் பாகுபடுத்தப்பட்டு வந்த கடன்கரைப்பு நிதியக் கொடுப்பனவுகள் படுகடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவு பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் என்பன ஒப்பிடுவதற்காக மீண்டெழுஞ் செலவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

அட்டவணை II (உ) 1

**சுருக்கம் 1960/61 — 1970/71 (அ)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 | | 1970/71 |
| | | | | | உண்மையான (ஆ | தற்காலிகமான | உண்மையான |
| **1,816** | **1,833** | **1,955** | **2,156** | **2,497** | **2,834** | **2,736** | **2,878** |
| **2,337** | **2,515** | **2,677** | **3,007** | **3,445** | **3,793** | **3.886** | **4,058** |
| 1,893 | 1,976 | 2,012 | 2,321 | 2,544 | 2,923 | 2,873 | 3,089 |
| 471 | 528 | 625 | 714 | 852 | 870 | 8 \| 2 | 969 |
| - 28 | 10 | 42 | - 29 | 49 | — | 201 | — |
| **520** | **682** | **723** | **850** | **947** | **959** | **1,150** | **1,180** |
| **90** | **116** | **117** | **135** | **160** | **236** | **214** | **249** |
| **430** | **566** | **607** | **716** | **788** | **722** | **936** | **932** |
| 50 | 112 | 72 | 10 | 52 | — | 22 | — |
| 334 | 498 | 418 | 630 | 358 | 457 | 815 | 542 |
| 117 | 154 | 256 | 247 | 426 | 502 | 339 | 638 |
| 20 | - 82 | - 22 | - 36 | 111 | — | - 26 | — |
| 50 | 112 | 72 | 10 | 52 | — | 22 | — |
| 261 | 418 | 348 | 552 | 271 | 361 | 720 | 440 |
| 100 | 118 | 209 | 190 | 354 | 362 | 220 | 491 |
| 20 | - 82 | - 22 | - 36 | 111 | — | - 26 | — |
| **35** | **122** | **122** | **267** | **179** | **80** | **418** | **97** |
| **3,772** | **4,268** | **4,782** | **5,689** | **6,239** | **வி. கி.** | **7,237** | **வி. கி.** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஈ) தேசிய அபிவிருத்தி ஒதுக்குகளுக்கான செலவுக்கட்டணத்தையும் உள்ளடக்கும். நிறுவனங்களுக்கான உதவுதொகைகளையும் உள்ளடக்கும்.

(உ) கடன்கரைப்பு நிதியத்தின் கொடுப்பனவுகளையும் நேரடியாகத் திருப்பிக் கொடுப்பனவுகளையும் பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளையும் உள்ளடக்கும்.

1970/71 நிதியாண்டின் மதிப்பிடப்பட்ட வருவாயும், செலவும் முறையே ரூ. 28,780 இலட்சமாகவும், ரூ. 40,580 இலட்சமாகவும் விளங்கியது. ரூ. 5,420 இலட்சங்கொண்ட உள்ளூர் அங்காடிக் கடன்பாட்டினுலும் ரூ. 6,380 இலட்சங்கொண்ட வெளிநாட்டு நிதியினுலும் ரூ. 11,800 இலட்சம்கொண்ட பணக்குறை நிதியீட்டம் செய்யப்பட்டது. வரவுசெலவுத்திட்டத்தின் விரிவுத் தாக்கம் ரூ. 970 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு காலத்தில் (1962/63 தவிர்த்து) ஏற்பட்ட தளராத அதிகரிப்புப்பற்றி 1968, 1969 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த ஆண்டறிக்கைகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை II (ஊ) 1இற் காட்டப்பட்டுள்ளதற்கமைய 1969/70 வரை இப்போக்குத் தொடர்ந்தது. எனினும், 1960/61 இற்குப்பின் அரசாங்க வருவாய் 81 சதவீதத்தால் உயர அதன் செலவு 93 சதவீதத்தால் உயர்ந்தது. இதன் தொடர்பாக (மீண்டும் 1962/63 தவிர்த்து) அதிகரித்த செலவுத் தேவைகளுக்கு ஈடுசெய்யும் முறையில் வருவாயின் அதிகரிப்பு இல்லாததினுல் தொடர்ச்சியாகவும் படிப்படியாகவும் வரவுசெலவுத்திட்டத்திற் பணக்குறை ஏற்படக் காரணங்கள் இருந்தன. கடந்த ஐந்தாண்டுகளாக வரவுசெலவுத்திட்டப் பணக்குறைகள் சராசரி மட்டம் ரூ. 8,700 இலட்சமாக விளங்கியது. மாருக இதற்கு முந்திய ஐந்தாண்டுகளிற் பணக்குறைவுகள் சராசரி மட்டம் ரூ. 4,960 இலட்சமாக விளங்கியது.

கடந்த பத்தாண்டுகளாக ஆண்டொன்றுக்கு கூட்டுச் சராசரி 6.1 சதவீதத்தால் வருவாய் அதிகரித்து அதேவேளையில் ஆண்டொன்றுக்குக் கூட்டுச் சராசரிச் செலவு 6.8 சதவீதத்தாலும் மீண்டெழுஞ் செலவு 6.2 சதவீதத்தாலும் மூலதனச் செலவு 10.2 சதவீதத்தாலும் உயர்ந்தது. கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டு அதிகரிப்பின் சராசரி வீதம் இன்னும் கூடியிருந்தது. அந்தக் காலப்பகுதியில் ஆண்டொன்றுக்கு வருவாய் 8.3 சதவீதத்தாலும் செலவு 9.1 சதவீதத்தாலும் மீண்டெழுஞ் செலவு 7.7 சதவீதத்தாலும் மூலதனச் செலவு 8.9 சதவீதத்தாலும் உயர்ந்தது. இதிலிருந்து தெரிய வருவது யாதெனில் கடந்த பத்தாண்டுகளில் அரசாங்க வருவாயிலும் பார்க்க அரசாங்கச் செலவு விரைந்த வீதத்தில் அதிகரித்து இருப்பது என்பதேயாகும். இன்னும் கவனிக்க வேண்டியது யாதெனில் கடந்த ஐந்நாண்டுகளில் மூலதனச் செலவு அதிகரிப்பிலும் பார்க்க மீண்டெழுஞ் செலவின் அதிகரிப்பு வீதம் கூடியிருந்ததென்பதேயாகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து பெற்ற கடன்பாட்டினை அதிகரித்தே தொடர்ந்துவரும் வரவுசெலவுத்திட்டப் பணக்குறைக்கு நிதியீட்டஞ் செய்யப்பட்டது. அண்மைக்காலங்களில் வரவுசெலவுத்திட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டு மூலங்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒரு சிறப்புப் பண்பாகும். வரவுசெலவுத்திட்டப் பணக்குறைகளுக்கு நிதியீட்டஞ்செய்ய உதவப்பட்ட இம்மூலங்கள் 1960/61 தொடக்கம் படிப்படியாக அதிகரித்து 1968/69இல் 45 சதவீத மட்டத்தை அடைந்தது. சென்ருண்டுடன் ஒப்பிடுகையில் 1969/70இல் கிடைக்கத்தக்க வெளிநாட்டு மூலங்கள் ரூ. 870 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றதெனினும் இவ்வாண்டின் வரவுசெலவுத்திட்டப் பணக்குறையை நிதியீட்டஞ் செய்ய 29 சதவீதத்தால் உதவியது. கடந்த ஐந்தாண்டுகளாக வரவுசெலவுத்திட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டமொத்த வெளிநாட்டு மூலங்கள் ரூ. 14,220 இலட்சமாகவிருந்தது. மாருக இதற்கு முந்திய 1960/61 தொடங்கி 1964/65 முடிவடைந்த முன்னைய 5 ஆண்டு காலப்பிரிவுடன் ஒப்புநோக்குகையில் அப்பொழுது பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 4,180 இலட்சமெனத் தெரியவருகின்றது. மேலும் வரவுசெலவுத்திட்டப் பணக்குறையை நிதியீட்டஞ்செய்யப் பண்ட உதவியாகிய ரூ. 5,250 இலட்சத்தையும், திட்ட உதவியாகிய ரூ.1,130 இலட்சத்தையும் உள்ளடக்கி என்றுமேயில்லாதளவு ரூ. 6,380 இலட்சங்கொண்ட வெளிநாட்டு மூலங்கள் 1970/71 இல் எதிர்பார்க்கப்படுகிறது. 1960/61இல் 10 சதவீதமாகவிருந்து 1969/70இல் 21 சதவீதமாக உயர்ந்த மேல் நிற்கும் (தேறிய) பொதுப்படுகடனிலுள்ள

## அட்டவணை II (ஊ) 2

## அரசாங்கத்தின் அரசிறையும் செலவும் 1965/66 — 1970/71

### பொருந்தச் செய்தல்

பந்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 மூல மதி பீடுகள் | 1969/70 தற்காலிக மானவை | 1970/71 மூல மதிப் பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை தலைப்புகள் 1–16 வரை | **1,833.3** | **1,954.8** | **2,156.4** | **2,497 3** | **2,833.9** | **2,736.4** | **2,878.0** |
| கூட்டுக: உணவு விற்பனைகளிலிருந்து இலாபங்கள் (அ) ... | 210 0 | 263.6 | 282.4 | 291.6 | 261.7 | 259.1 | 155.3 |
| கழிக்க: அரிசி மானிய வரி(ஆ)... | 0.3 | 0.3 | 1.9 | 3 1 | 2.0 | 3.5 | 3.0 |
| 2. **மொத்த அரசிறை** ... | **2,043.0** | **2,218.1** | **2,436.9** | **2,785.8** | **3,093.6** | **2,992.0** | **3,030.3** |
| 3. **மீண்டெழுஞ் செலவு** ... (வாக்குகள் 1, 2, 4, 6) (இ) ... | **1,860.5** | **1,895.3** | **2,186.2** | **2,384.2** | **2,832.8** | **2,658.9** | **2,912.7** |
| கழிக்க: "தேறிய உணவு மானியம்" (ஈ) .. | 290.0 | 193 0 | 297.5 | 334.5 | 361.8 | 337.0 | 464.0 |
| கூட்டுக: உணவு விற்பனைகளின் மீதான நட்டங்கள் (உ) ... | 487.4 | 465.5 | 578.7 | 620.4 | 621.5 | 599.1 | 614.4 |
| கழிக்க: மீண்டெழும் வாக்குகளிலுள்ள மூலதன விடயங்கள் (ஊ) ... | 84.1 | 94.1 | 114.0 | 116 0 | 206.6 | 124.6 | 113.8 |
| கூட்டுக: மூலதன வாக்குகளிலுள்ள நடைமுறை விடயங்கள் (எ) .. | 22.8 | 23.2 | 39.1 | 58.2 | 56 8 | 53.5 | 60.0 |
| 4. **நடைமுறைக் கொடுப்பனவுகள்** | **1,996.8** | **2,096.7** | **2,392 4** | **2,612 3** | **2,942.7** | **2,849 8** | **3,009.3** |
| 5. **மூலதனச் செலவு** (வாக்குகள் 3, 5, 7) (இ) ... | **528.4** | **624.7** | **714.4** | **852.0** | **930.0** | **812.0** | **1,140.7** |
| கூட்டுக: மீண்டெழும் வாக்குகளிலுள்ள மூலதன விடயங்கள் (ஊ) ... | 84.1 | 94.1 | 114.0 | 116.0 | 206.6 | 124.6 | 113.8 |
| கழிக்க: மூலதன வாக்குகளிலுள்ள நடைமுறை விடயங்கள் (எ) ... | 22.8 | 23.2 | 39.1 | 58.2 | 56.8 | 53.5 | 60.0 |
| 6. **மூலதனக் கொடுப்பனவுகள்** ... | **589.7** | **695.4** | **789.2** | **909.8** | **1,079.8** | **883.1** | **1,194.5** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அ. கோதுமை மா, சீனி, மற்றும் சில உணவுப் பொருட்களின் விற்பனவிலிருந்து கிடைத்த இலாபங்கள்.

ஆ. மதிப்பிடப்படும் வருமானம் ஆண்டுக்கு ரூ. 12,000 உக்கு அதிகமாக உடையவர்களின் அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் மீது அறவிடப்படுகின்ற ஆண்டுக்கு 52 ரூபா கொண்டவொரு வரி.

இ. ஆழ்நிதி உதவு தொகைகளும், பொதுப்படுகடனுக்கான நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகளும் சர்வ தேச நிறுவனங்களுக்கான விசேட கொடுப்பனவுகளும், 1967/68 நீதியாண்டு வரை மீண்டெழுஞ் செலவிலிருந்தும் 1968/69 இலிருந்து மூலதனச் செலவிலிருந்தும் நீக்கப்பட்டன. 1969/70 ஆம் ஆண்டுக்கான மீண்டெழுஞ் செலவின் எண்தொகை, ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதி உதவுதொகைகளையும், வெளிநாட்டுப் படுகடனுக்கான நேரடித் திருப்பிக் கொடுப்பனவையும் பொறுத்தவரையிலரன அ. செ. உ. சா. கொள்வனவுச் செலவினை உள்ளடக்கவில்லை.

ஈ. சீனி, கோதுமை மா, குறிப்பிட்ட சில விடயங்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து வந்த இலாபத்தைக் கழித்து, அரிசி, வெங்காயம், உற்பத்தியாளர்களினதும், நுகர்ச்சியாளர்களினதும் மானியங்களை உள்ளடக்கும். அட்டவணை (ஊ) 7ஐப் பார்க்கவும்.

உ. அரிசி, வெங்காயம், மற்றும் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்கியதிலேற்பட்ட நட்டங்கள்.

ஊ. முக்கியமாக மூலதன வேலைகளின் பராமரிப்புச் செலவையும், மூலதன வேலைகளில் ஈடுபட்டவர்களின் சம்பளங்களையும் 1969/70 இல் மூலதன செலவைப் பொறுத்தவரையிலான அ. செ. உ. சா. கொள்வனவுச் செலவாகிய ரூ. 781 இலட்சத்தையும் உள்ளடக்கும்.

எ. முக்கியமாக மூலதன வாக்குப் பணங்களிலடங்கிய பாதுகாப்புச் செலவையும் நடைமுறை மாற்றல்களையும் உள்ளடக்கும்.

வெளிநாட்டுக் கடனின் உள்ளடக்கத்தில் படிப்படியாக வரவுசெலவுத்திட்டத் தேவைகளுக்கு வெளிநாட்டுநிதியில் யாம் எவ்வளவு தூரம் தங்கியிருக்கிறோமென்பதைப் பிரதிபலிக்கிறது.

அரசாங்கச் செலவு அதிகரிக்கும் காலப்பிரிவில் நிதியின் விரிவை கட்டுப் படுத்த வெளிநாட்டு வளங்களைப் பெருமளவு நாடிநின்றது. இப்போக்கு துணை செய்ததெனினும் 1969/70இல் நிதித் தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கத்தின் கூரிய அதிகரிப்புக்கு எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிலேற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணங்களில் ஒன்ருகும். அந்தாண்டில் தேறிய வெளிநின்ற கடன் ரூ. 9,980 இலட்சத்தால் அதிகரித்தது. உள்ளூர்க் கடனுகிய ரூ. 7,840 இலட்சமும் வெளிநாட்டுக் கடனுகிய ரூ. 1,140 இலட்சமும் இதனுள் அடங்கும். மீளப்பார்வையிடப்படும் இவ்வாண்டு முடிவில் (தேறிய) பொதுப்படுகடன் ரூ. 72,370 இலட்சமாக விளங்கியது. இது உள்ளூர்க் கடனுகிய ரூ. 56,860 இலட்சத்தையும் வெளிநாட்டுக் கடனுகிய ரூ. 15,510 இலட்சத்தையும் அடக்கியுள்ளது.

அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றித் திருத்தியமைக்கப்பட்ட பொருளாதாரத் தொழிற்பாட்டுப் பாகுபாட்டின் அடிப்படையிலான கடந்த சிலவாண்டுகளில் அரசாங்கத்தின் வரவுகளும் கொடுப்பனவுகளும் பற்றிய நுண்ணுய்வு பற்றி கடந்த அறிக்கையின் குறிப்பொன்றில் விவரமாக விளக்கப்பட்டுள்ளது.[1]

அரசாங்கக் கணக்குகளின் வருவாயிலும் செலவு எண்தொகையிலும் சில சீராக்கங்கள் செய்தபின் அரசாங்க வருவாயில் இருந்தும் செலவில் இருந்தும் நடைமுறை மூலதனக் கூறுகளைப் பெறத்தக்கதாய் இருந்தது. அரசாங்கக் கணக்குகளில் வெளியிடப்பட்ட எண்தொகைகளுடன் இவ்வெண்தொகைகள் பொருந்தக்கூடியனவாக ஆக்கப்பட்டுக் மேலுள்ள அட்டவணை II (ஊ) 2இற் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2. அரசிறை

கடந்த மூன்ருண்டுகளாக உயர்ச்சியடைந்து வந்த அரசாங்க அரசிறை வருமான அதிகரிப்பு விகிதம் 1969/70ஆம் ஆண்டில் ஓரளவு குறைவடைந்து 1969/70ஆம் ஆண்டின் அரசாங்க வருமானம் முறையே, 1966/67, 1967/68, 1968/69ஆம் நிதியாண்டுகளின் ரூ. 1,750 இலட்சம் அல்லது 9 சதவீதம், ரூ. 2,190 இலட்சம் அல்லது 10 சதவீதம், ரூ. 3,490 இலட்சம் அல்லது 14 சதவீதம் கொண்ட அதிகரிப்புகட்கெதிராக ரூ. 2 060 இலட்சம் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்தது.

1969 நவெம்பரில் அரசாங்க மின்சாரத் திணைக்களம், இலங்கைமின் சபையாக மாற்றப்பட்டதாலும், 1969/70இல் உண்மையான வருமானத்திலிருந்து அதன் எண்தொகைகள் நீக்கப்பட்டமையாலும் 1969/70இன் உண்மையான அரசிறை வரவுகளை அதற்கு முன்னைய ஆண்டுகளுடனும் அவ்வாண்டின் மூல மதிப்பீடுகளுடனும் ஒப்பிடமுடியாது. மறுபக்கத்தில் அரசாங்க இறக்குமதிகள்மீது செலுத்தப்படவேண்டிய வெ. செ. உ. சா. கொடுப்பனவினை உள்ளடக்கியமை, 1969/70ஆம் அரசாங்க வருமானத்திலும், 1970/71ஆம் ஆண்டின் மூலமதிப்பீட்டிலும், அதிகரிப்பினை ஏற்படுத்தும்போலக் காணப்பட்டது. இந்த இரண்டுவகை வருமானங்களின் குறைபாடுகளையும் தவிர்த்துச்செய்யப்படும் ஓர் அதிகபட்ச நடைமுறை ஒப்பீடும், 1969/70ஆம் ஆண்டின் அரசிறை வருவாய் அதிகரிப்பு வீதத்தில் ஒரு குறைவு ஏற்பட்டமையினையை புலப்படுத்துகின்றது.

கடந்த 9 ஆண்டுகளுக்கும் உரிய அரசாங்க வருமானங்களின் விவரங்கள் 1970/71இன் மூல மதிப்பீடுகளுடன் பின்னிணைப்பு 11 இன் அட்டவணை 35 இல் தரப்பட்டுள்ளன.

1. ''இலங்கை அரசாங்கத்தின் வரவுகள் கொடுப்பனவுகள்பற்றிய பொருளாதார தொழிற்பாட்டுப் பகுப்பாய்வுக் குறிப்பை''ப் பார்க்கவும். பக்கம் 186.

## அட்டவணை II (ஊ) 3

### அரசிறை 1968/69 — 1970/71 (அ)

பத்து இலட்சம் ரூபாய்கள்

| மூலங்கள் | 1968/69 | 1969/70 மூல மதிப்பீடுகள் | 1969/70 உண்மையானவை (தற்காலிகமானவை) | 1970/71 மூல மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| **1. நடைமுறைவரவுகள் ...** | **2,747.2** | **3,060.6** | **2,937.3** | **2,968.0** |
| **1.1. சொந்த, கூட்டுவருமானங்களிலிருந்து வரிகள்** | **343.9** | **330.0** | **441.1** | **425.0** |
| 1.1.1. வருமான வரி .. | 343.0 | 330.0 | 440.6 | 425.0 |
| 1.1.2. ஏனைய ... | 0 9 | — | 0.5 | — |
| **1.2. உற்பத்தியிலும், செலவிலும் மீதானவரிகள் ...** | **1,900.3** | **2,157.9** | **2,048.9** | **2,042.1** |
| 1.2.1. பொது விற்பனைகளும் மொத்த விற்பனை வரியும் | 111.0 | 282.0 | 247.4 | 293.8 |
| 1.2.2. தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள் ... | 278.3 | 264.9 | 275.8 | 300.8 |
| (அ) புகையிலை வரி ... | 219.7 | 220.0 | 218.3 | 242.5 |
| (ஆ) தேயிலை வரி .. | 42.3 | 30 8 | 41.6 | 38.9 |
| (இ) ஏனைய ... | 16.3 | 14.1 | 15.9 | 19.4 |
| 1.2.3. இறக்குமதித் தீர்வைகள் ... | 460 2 | 324.0 | 306.5 | 288.0 |
| (அ) காய்கறி உற்பத்திகள் ... | 27.3 | 23.5 | 25.7 | 40.8 |
| (ஆ) தயாரிக்கப்பட்ட உணவுவகைகள், குடிபானங்கள், புகையிலை முதலியன ... | 70.6 | 67.0 | 61.1 | 55.5 |
| (இ) கனிப்பொருள் உற்பத்திகள் ... | 154.8 | 39.0 | 39.4 | 8.0 |
| (ஈ) கைத்தொழில் இரசாயனத் தயாரிப்புக்கள் | 25.0 | 27.0 | 25.7 | 27.0 |
| (உ) செயற்கை பிசின், பிளாஸ்டிக் பொருட்கள் இரப்பர் முதலியன ... | 19.2 | 19.0 | 16.0 | 15.0 |
| (ஊ) கடதாசி தயாரிக்கும் பொருட்கள் முதலியன ... | 13.1 | 14.0 | 8.5 | 13.0 |
| (எ) புடவையும், புடவைப் பொருட்களும் .. | 29.4 | 35.0 | 18.0 | 28.5 |
| (ஏ) அடிப்படை உலோகமும், உலோகப் பொருட்களும் ... | 27.4 | 30.0 | 20.2 | 21.5 |
| (ஐ) இயந்திரம், இயந்திரப் பாவிப்புக்களும், மின்சார உபகரண்ங்கள் முதலியன .. | 37.4 | 28.0 | 31.8 | 31.5 |
| (ஒ) வாகனங்கள், விமானங்கள், தளங்கள் முதலியன ... | 27.9 | 18.0 | 31.4 | 27.0 |
| (ஓ) ஏனையவை ... | 20.8 | 18.5 | 19.8 | 12.2 |
| (ஔ) இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் | 7.3 | 5.0 | 8.9 | 8.0 |
| 1.2.4. அ. செ. உ. சா. விற்பனை மூலமான வரவுகள்... | 285.2 | 540.0 | 446.0 | 457.0 |
| 1.2.5. ஏற்றுமதித் தீர்வைகள் ... | 300.3 | 298.2 | 327.2 | 331.8 |
| (அ) தேயிலை .. | 177.4 | 185.0 | 171.6 | 180.3 |
| (ஆ) இரப்பர் ... | 64.1 | 41.3 | 79.0 | 70.0 |
| (இ) தெங்கு ... | 45.7 | 40.2 | 53.1 | 46.0 |
| (ஈ) ஏனையவை ... | 13.1 | 31.7 | 32.5 | 36.5 |
| 1.2.6. உத்தரவுச் சீட்டு வரிகள் ... | 41.4 | 41.4 | 40.3 | 44.7 |
| 1.2.7. சொத்து மாற்றல் வரிகள் ... | 22.0 | 20.7 | 22.2 | 20.7 |
| 1.2.8 அரசாங்கத் தனியுடைமைகளின் மிகைகள் ... | 110.3 | 125.0 | 124.4 | 150.0 |
| 1.2.9. உணவு விற்பனைகளின் மூலமான இலாபங்கள்... | 291.6 | 261.7 | 259.1 | 155.3 |
| **1.3. பெறப்பட்ட வட்டியும், பங்கு இலாபங்களும் ...** | **18.8** | **49.4** | **41.5** | **63.8** |
| 1.3.1. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலிருந்து இலாபங்களும், பங்கு இலாபங்களும் ... | 11.5 | 43.0 | 31.4 | 57.3 |
| 1.3.2 ஏனைய ... | 7.3 | 6.4 | 10.1 | 6.5 |
| **1.4. வர்த்தக முயற்சிகளின் மொத்த வரவுகள் ...** | **371.6** | **401.4** | **283.6** | **302.7** |
| 1.4.1. புகையிரதச் சேவை .. | 131.0 | 129.3 | 139 9 | 134.8 |
| 1.4.2. மின்சக்தி ... | 115.0 | 137 7 | 1.8 | 3.2 |
| 1.4.3. தபாற் தந்திப் போக்குவரத்து ... | 69.5 | 77.2 | 72.9 | 93.4 |
| 1.4 4. துறைகளும், துறைமுகங்களும் ... | 41.0 | 37.3 | 44.4 | 52 0 |
| 1.4.5. ஏனைய ... | 15.1 | 19.9 | 24.6 | 19.3 |
| **1.5. ஏனைய நடைமுறை வரவுகள் ...** | **112.6** | **121.9** | **122.2** | **134.4** |
| 1.5.1. தேசிய லொத்தர் .. | 18.2 | 21.0 | 13.6 | 17.0 |
| 1.5.2. ஏனைய ... | 94.4 | 100.9 | 108.4 | 117.4 |
| **2. மூலதன வரவுகள் ..** | **38.5** | **33.0** | **54.7** | **62.2** |
| **2.1. உள்ளூர்த் துறைகளின் மூலதனக்கணக்கிலிருந்து மாற்றல்கள்** | 28.7 | 22.0 | 29.2 | 31.3 |
| 2.1.1. பூதல் வரி ... | 14.3 | 9.0 | 12.0 | 15.0 |
| 2.1.2. சொந்த வரி ... | 13.7 | 13.0 | 17.0 | 16.3 |
| 2.1.3. ஏனைய . | 0.7 | — | 0.2 | — |
| 2.2. ஏனைய மூலதன வரவுகள் ... | **9.8** | **11.0** | **25.5** | **30.9** |
| **3. மொத்த அரசிறை ...** | **2,785.8** | **3,093.6** | **2,992.0** | **3,030.2** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) மேலே கொடுக்கப்பட்ட விடயங்கள் பற்றிய விபரங்களுக்கு பின்னிணைப்பு II இன் அட்டவணை 35 (அ) இன் அடிக் குறிப்பைப் பார்க்கவும்.

1969/70இல் நடைமுறை வருமானங்கள், முன்பு போல அரசாங்க மொத்த வருமானங்களாகிய ரூ. 29,920 இலட்சத்தில் பெரும்பகுதிக்குக் காரணமாக அமைந்தன. மூலதன வருவாய்கள் முன்னைய ஆண்டினைவிட அவற்றின் பங்கினை 1 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக அதிகரித்துக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தபொழுதும் புறக்கணிக்கத்தக்கதாகவே காணப்பட்டன. 1969/70ஆம் ஆண்டின் மொத்த அரசாங்க வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்குக்குச் சிறிது அதிகமான தொகை உற்பத்திகள் மீது செலவுகள் மீதுமான வரிகள் மூலம் பெறப்பட்டன. முன்னைய நிதியாண்டினை விட 1969/70ஆம் ஆண்டின் வருமான அதிகரிப்புக்கு முக்கியமாக, வருமானவரி (ரூ. 980இலட்சம்) விற்பனை வரி (ரூ. 1.360 இலட்சம்), வெ. செ. உ. சா. விற்பனை (ரூ. 1.610இலட்சம்) ஏற்றுமதி வரிகள் (270 இலட்சம்) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் இலாபமும் பங்கிலாபமும் (ரூ. 200 இலட்சம்) என்பனவற்றிலிருந்தும் கிடைத்த உயர்ந்த வருமானங்களே காரணமாகும். மறுபக்கத்தில் எதிரீடு செய்யும் குறைவுகள், முக்கியமாக இறக்குமதித் தீர்வைகள் (ரூ. 1,540 இலட்சம்) உணவுப் பொருட்கள் விற்பனைகளின்[1] இலாபங்கள், அரசாங்க மின்சார வேலைகளின் மொத்த வருமானம் (ரூ. 113 இலட்சம்) என்பவற்றிற் காணப்பட்டன. விற்பனை வரிகள் மூலம் கிடைத்த வருமானம் முன்னைய நிதியாண்டினைவிட இரு மடங்குகளுக்கு மேலாகக் கூடியவேளையில் வெ. செ. உ. சா. விற்பனை மூலம் கிடைத்த வருமானம் தொடர்ந்தும் அதிகரித்து இறக்குமதித் தீர்வையிலேற்பட்ட வீழ்ச்சியின் போக்கினை ஈடுசெய்தது.

1969/70இன் உண்மையான (தற்காலிக) அரசிறை எவ்வாறிருப்பினும் மூலவரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளோடு ஒப்பிடுகையில் ரூ. 1020 இலட்சம் அல்லது 3.8 சதவீதம் கொண்ட குறைநிலையைக் காட்டுகிறது. இக்குறைக்குப் பெருமளவு காரணமாக அமைந்தவை விற்பனை வரி (ரூ. 350 இலட்சம்), இறக்குமதித் தீர்வைகள் (ரூ. 180 இலட்சம்) வெ. செ. உ. சா. விற்பனை (ரூ. 940 இலட்சம்) மற்றும் அரசாங்க மின்சார திணைக்கள வருமானம் வீழ்ச்சியடைந்தமை (ரூ. 1,360 இலட்சம்) என்பவையாகும். மேற்கூறப்பட்ட குறைகளின் விளைவுகள், வருமான வரி (ரூ. 1,110 இலட்சம்) ஏற்றுமதித் தீர்வைகள் (ரூ. 290 இலட்சம்) இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியின் மொத்த வருமானம் (ரூ. 110 இலட்சம்) ஆகிய வருமான அதிகரிப்புகள் மூலம் ஓரளவு ஈடுசெய்யப்பட்டன.

நடைமுறை நிதியாண்டாகிய 1970/71இல் அரசாங்க அரசிறை ரூ. 380 இலட்சம் அல்லது 1 சதவீதத்தால் மட்டுமே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் விற்பனை வரியிலிருந்தும் (ரூ. 460 இலட்சம்) புகையிலை வரியிலிருந்தும் (ரூ. 240 இலட்சம்), வெ. செ. உ. சா. விற்பனையிலிருந்தும் (ரூ. 110 இலட்சம்) அரசாங்கத் தனியுரிமைகள் மிகையிலிருந்தும் (ரூ. 260 இலட்சம்) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் இலாபம், பங்குலாபம் என்பவற்றிலிருந்தும் (ரூ. 260 இலட்சம்) ஏனைய நடைமுறை வருவாய்களினதும் (ரூ. 120 இலட்சம்) மூலதன வருவாய்களிலிருந்தும் (ரூ. 80 இலட்சம்) அஞ்சல் தந்திப் பணிகளின் மொத்த வருவாய்களிலிருந்தும் (ரூ. 210 இலட்சம்) ஆகும். மேலேயுள்ள அதிகரிப்புக்களின் விளைவுகள், வருமானவரி (ரூ. 160 இலட்சம்) இறக்குமதித் தீர்வைகள் (ரூ. 190 இலட்சம்) உணவுப் பொருட்கள் விற்பனை (ரூ. 1040 இலட்சம்) என்பவற்றில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சிகளால் எதிரீடு செய்யப்படும்.

**சொந்தக் கூட்டு வருமானங்களின் மீதான வரிகள்**

இந்த மூலத்திலிருந்து பெறும் அரசிறை ஏறக்குறைய முற்றிலும் தனியாட்கள் தொழில் நிலையங்கள் மீதான வருமான வரியைக் கொண்டுள்ளது[2]. முன்னைய ஆண்டைவிட, 1969/70ஆம் ஆண்டின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளான ரூ. 970 இலட்சத்திற்கும், ரூ. 1,110 இலட்சங்கொண்ட மூலதன மதிப்

1. முழுவதும் கோதுமை மா, சீனி விற்பனைகளின் இலாபத்தினையே கொண்டுள்ளது,
2. தனியாட்களுக்கும், தொழில் நிலையங்களுக்குமிடையில் பாகுபாடு கிடைக்கப்பெறுதபோதும், முற்கூறியது சேகரிக்கப்பட்ட மொத்த அரசிறையில் 40 சதவீதத்திற்கும், பின்னையது 60 சதவீதத்துக்கும் வகை கூறியுள்ளனவென்று கணிக்கப்பட்டுள்ளது.

பீட்டுக்கும் பல காரணிகள் காரணமாக அமைந்தன. முதலாவதாக ரூ 600 இலட்சங்கொண்ட தொகை முற்பணமாக கூட்டுத்தாபனங்களிலிருந்தும், சில தெரிவு செய்யப்பட்ட கூட்டுநிலையங்களிடமிருந்தும் 1969/70 ஆண்டுக் காலப்பகுதியில் திரட்டப்பட்டது. இரண்டாவதாக ஒரு சிறந்த பொருளாதார நிலைமைகள் அதிகரித்த வர்த்தக வருமானத்துக்குக் காரணமாக அமைந்தன. மூன்றாவதாக பெருமளவு வரி தவிர்க்கப்பட்டுள்ளதென ஐயம்கொண்ட சில வர்த்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புக்களின் மூலம் மேலதிக வருமானம் கிடைத்தது. இத்துடன் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட பெருமளவு வரி இறுப்பாளர்கள் தங்கள் படிவங்களைச் சமர்ப்பித்தனர். கடைசியாகப் புதிய வரி இறுப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் வரி எல்லை விரிவடையச் செய்யப்பட்டது.

1970/71இல் எதிர்பார்க்கப்பட்ட வருமான வரி அரசிறை சென்ற ஆண்டின் மூல மதிப்பீட்டை விட பெருமளவு அதிகமாகவிருந்தபோதும் 1969/70 இல் உண்மையான (தற்காலிக) அரசிறையிலும் பார்க்க ரூ. 160 இலட்சம் குறைவானதாகும். 1970/71இல் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 4,250 இலட்சத்தில் ரூ. 1,000 இலட்சம், ரூ. 100/-, ரூ. 50/- நாணயத்தாள்களின் மதிப்பு நீக்கம் தொடர்பான வரி நிலுவைகளிலிருந்து சேகரிக்கப்படும். எனவே, இம்மேலதிக அரசிறைக்கு இடம்விட்ட பின்னர், 1969/70இல் மூலதன மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது, 1970/71இன் மூலமதிப்பீடுகள் வருமான வரியிலிருந்து கிடைக்கும் அரசிறையில் ஓரளவு குறைவினைப் பிரதிபலிக்கின்றது. சாதாரண வேறுபாடுகள் மூலம் இவ்வித்தியாசத்துக்கு வகை கூறுவதைவிட, இந்த அரசிறையினை மதிப்பிடும்போது பின்பற்றப்படும் வழக்கமான எச்சரிக்கைகளும் காரணமாகும். கடந்த சில ஆண்டுகளாக மூல மதிப்பீடுகளைவிட வருமானவரியின் உண்மையான சேகரிப்புகள் தொடர்ந்தும் அதிகரித்ததென்பது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

**உற்பத்தி, செலவுகள் மீதான வரிகள்**

இவ்விடயம் பொது விற்பனைகளும், மொத்த விற்பனை வரிகளும் (முற்றுமுழுவதும், மொத்த விற்பனை வரியைக் கொண்டுள்ளது) தேர்வு விற்பனை வரிகள் (உதாரணம்: புகையிலை மீதான தீர்வை தேயிலைத் தொகையீட்டு வரி) இறக்குமதித் தீர்வைகள், ஏற்றுமதித் தீர்வைகள், வெ. செ உ. சா. விற்பனை மூலம் கிடைத்த வருவாய்கள், அரசாங்கத் தனியுரிமைகளின் மிகைகள் (அதாவது சாராயம்) உணவுப் பொருட்கள் விற்பனை இலாபங்கள் (உதாரணம்: கோதுமை, மா, சீனி) என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

(அ) மொத்த விற்பனை வரி

1968ஆம், 1969ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகளில் அரசாங்க அரசிறையின் இந்த மூலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. 1969/70ஆம் ஆண்டில், மதிப்பிடப்பட்ட அளவு அதிகரிப்புக் கிடைக்காத போதும் இந்த ஒரு தொடர்பான மிகை காணப்பட்டது. உற்பத்திகள் ஏனைய வியாபாரங்கள் மீது விதிக்கப்பட்ட விற்பனை மீதான இவ்வரி மூலம் கிடைத்த வருவாய்கள் முன்னைய ஆண்டினைவிட ரூ. 1.360 இலட்சம் அதிகமாகக் காணப்பட்டன. (இரு மடங்கு அதிகரித்தது) எனினும், வருமானங்கள் 1969/70ஆம் ஆண்டுக்குரிய மூல மதிப்பீட்டினைவிட ரூ. 350 இலட்சம் குறைவாகவே காணப்பட்டன. 1970/71ஆம் ஆண்டில் மொத்த விற்பனை மூலம் பெறப்படும் வருமானங்கள் ரூ. 2,940 இலட்சமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் முன்னைய நிதி ஆண்டினைவிட அரசாங்க அரசிறைக்கு ரூ. 470 இலட்சம் அதிகமாகக் கிடைக்கும். மொத்த அரசாங்க அரசிறையில் மொத்த விற்பனை வரியின் பங்கு 1967/68இல் 3 சதவீதத்திலிருந்து 1969/70இல் 6 சதவீதத்தை விட சிறிது மேலாக முன்னேற்றமாக அதிகரித்ததோடு, இது 1970/71ஆம் ஆண்டில் மேலும் 7 சதவீதத்துக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது

முன்னைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 1969/70ஆம் ஆண்டில் அதிகரித்த மொத்த விற்பனை வரி கிடைத்தமைக்குரிய காரணங்கள், முக்கியமாக பெற்றோலிய உற்பத்தித் தயாரிப்புகள் மொத்த விற்பனை வரிக்குட்படுத்தப்பட்டமையும், முன்னர் இவ்வரியிலிருந்து விலக்கப்பட்டிருந்த சிகரட் உற்பத்தி போன்ற சில விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமையும், மொத்த விற்பனை வரி விலக்கு எல்லையாக இருந்த ரூ. 1,00,000, ரூ. 75,000 ஆகக் குறைக்கப்பட்டமையும், சில விடயங்களைப்[1] பொறுத்தவரையில் விகிதங்களின் மேல்நோக்கிய அதிகரிப்புக் கொண்ட திருத்தமும் காரணங்களாக அமைந்தன. இது அதிகரித்த வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த விற்பனை வரிகள், கொண்டுவரப்பட்டதுடன் அத்தகைய இறக்குமதிகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டதுடன், சுத்திகரிக்கப்படாத எண்ணெய், அடிப்படை எண்ணெய் என்பவற்றின் மீதான தீர்வைகள் முதலியவையும் நீக்கப்பட்டன. மூல மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் உண்மையான வருமானங்களில் ஏற்படும் குறைநிலைக்குரிய முக்கிய காரணம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1969/70 ஆம் ஆண்டு கடைசித் தவணைக்குரிய மொத்த விற்பனை வரிக்கொடுப்பனவு நிபந்தனைகளுக்குப் பின்னர் வருவதேயாகும். பெற்றோலியச் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி சிறிது பிந்தித் தொடங்கியதையும் இக்குறைநிலைக்கு ஒரு காரணமாகும். 1970/71ஆம் ஆண்டின் மொத்த விற்பனை வரியிலும் பலவிடயங்களின்[2] வரி விகிதத்தை உயர்வாக மாற்றுவதன் மூலம் மேலும் அதிகரித்த வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ)** தேர்வு விற்பனை வரிகள்

சென்ற நிதியாண்டுடன் ஒப்பிடுமிடத்து 1969/70ஆம் ஆண்டின் தேர்வு விற்பனை வரிகளிலிருந்து பெற்ற வருமானம் ரூ. 30 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது. இருந்தும் இத்தொகை மூலமதிப்பீடுகளிலும் பார்க்க, ரூ. 110 இலட்சம் மேலதிகத்தினைக் காட்டியது. இவ்வீழ்ச்சி முக்கியமாக புகையிலை வரி, தேயிலை வரி ஆகியவற்றிலிருந்து பெற்ற வரவுகளிலேற்பட்ட சிறிதளவான குறைவினால் ஏற்பட்டதாகும். 1969/70ஆம் ஆண்டுக்கான மூலமதிப்பீட்டு வருமானத்திலும் பார்க்க அதிகமாகக் காணப்பட்ட ரூ. 110 இலட்சம் ரூபாய்க்கு முக்கியமாக தேயிலை வரி சேகரிப்புகளிலிருந்து பெறப்பட்ட ரூ. 110 இலட்சம் கொண்டஉயர்ந்த வரவும், ரூ. 20 இலட்சங்கொண்ட ஏனைய வரி வரவுகளும் முக்கிய காரணமாகும். இதன் ஒருபகுதி ரூ. 20 இலட்சங்கொண்ட குறைந்தளவு வரவினால் எதிரீடு செய்யப்பட்டது. புகையிலை வரியில் ரூ. 20 இலட்சங்கொண்ட வீழ்ச்சிக்கு, சிகரெட்டுகள், சுங்கான் புகையிலை ஆகியவற்றின் விற்பனையிலேற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். தேயிலைப் பெறுமான விகித வரியிலிருந்து கிடைக்கப்பெற்ற வரவுகளின் அதிகரிப்புக்கு முக்கியமாக இலண்டன், கொழும்பு ஏல விற்பனையில் எதிர்பார்த்ததிலும்பார்க்கக் கூடியளவு தேயிலை விலைகள் கூடுதலாக இருந்தமையே காரணமாகும்.

1970/71ஆம் ஆண்டுக்கான தேர்வு விற்பனை வரிகள் சென்றாண்டிலும் பார்க்க ரூ. 250 இலட்சத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. புகையிலை வரியினாலான அரசிறை புகையிலையின் மீதான இறுத்தலுக்கு 5 ரூபா கொண்ட உள்நாட்டுப் பொருள் வரியின் அதிகரிப்புக் காரணமாக, ரூ. 240 இலட்சங்கொண்ட கணிசமான அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. தேயிலை வரியிலான வருமானத்தில் ரூ. 30 இலட்சங்கொண்ட வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகையில், ஏனைய வரிகளினாலான வருமானத்தில் ரூ. 40 இலட்சங்கொண்ட அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

**(இ)** இறக்குமதித் தீர்வைகள்

அரசாங்க வருமானத்தின் ஒரு மூலமான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்களிலேற்பட்ட ஒரு வீழ்ச்சிப்போக்கு, அதுவும் முக்கியமாக வெ. செ. உ. சா.

1. இம்மாற்றங்களின் விபரங்கள் 1969ஆம் ஆண்டறிக்கை பக்கம் 193இல் தரப்பட்டுள்ளது.
2. இத்திருத்தங்களின் விவரங்கள் அறிக்கையின் பின்பகுதியில் தரப்பட்டுள்ளன. "வரவுசெலவுத்திட்டம்—1970/71" பிரிவிற் பார்க்கவும்.

திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்பு, சென்ற ஈராண்டுகளின் ஆண்டறிக்கைகளிலும் விளக்கப்பட்டிருந்தது. இப்போக்கு 1969/70இலும் தொடர்ந்து இறக்குமதி வரிச்சேகரிப்புக்களில் சென்றுண்டிலும்பார்க்க ரூ. 1,540 இலட்சம் அல்லது 34 சதவீதம்கொண்ட கூர்மையான வீழ்ச்சி ஏற்பட்டது. அட்டவணை II (ஊ) 3இல் காட்டப்பட்டுள்ள எல்லா இறக்குமதிகளில் முக்கிய பிரிவுகளிலும் முன்னைய ஆண்டினைவிட தீர்வைச் சேகரிப்புக்களில் வீழ்ச்சி காணப்பட்டது. இவ்வீழ்ச்சிகள் குறிப்பாக, கனிப்பொருள் உற்பத்திகளிலும் (ரூ. 1,150 இலட்சம்), ஏனைய சிறிதளவான வீழ்ச்சிகள் புடவை, புடவைப் பொருட்களிலும் (ரூ. 110 இலட்சம்), தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், குடிபானங்கள், புகையிலை என்பவற்றிலும் (ரூ. 100 இலட்சம்), அடிப்படை உலோகங்கள், உலோகப் பொருட்கள் என்பவற்றிலும் (ரூ. 70 இலட்சம்) ஏற்பட்டன. இவற்றுள் அதிகரிப்புக்கள் ஊர்திகள், வானூர்தி, கப்பல் என்பவற்றிலும் (ரூ. 40 இலட்சம்), இரசாயன உற்பத்திகள், இணைப்புக் கைத்தொழில் ஆகியவற்றிலும் (ரூ. 10 இலட்சம்) ஏற்பட்டன. இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணச் சேகரிப்புக்களிலும் ரூ. 20 இலட்சங்கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணி இடர்ப்பாடுகள் என்னும் பொதுக்காரணியின் விளைவாக இறக்குமதி அளவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டதைத்தவிர, இறக்குமதிப் பிரிவுகளில் சேகரிக்கப்பட்ட தீர்வைகளிலேற்பட்ட வீழ்ச்சிகளுக்கு வேறு சில குறிப்பிடத்தக்க காரணங்கள் இருந்தன. கனிப்பொருள் உற்பத்திகள் மீதான தீர்வைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி முற்றாகத் தவிர்க்கப்பட்டமையினாலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையத்துக்குத் தேவையான மூலப் பொருட்கள் இறக்குமதி மீதான தீர்வைகள் குறைந்தமையினால் ஏற்பட்ட விளைவாகும். வரையறுக்கப்பட்ட தாபனத்துக்கு அதன் சில புடவை வகைகளின் இறக்குமதிகளின் தீர்வைகள் தொடர்பாக வழங்கப்பட்ட சட்டத்துக்கு அப்பாற்பட்ட நீக்கம், புடவை, புடவை உற்பத்திகளின் தீர்வைகளிலேற்பட்ட வீழ்ச்சிக்கு வகைகூற, ஏனைய வீழ்ச்சிகளுக்கு இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட குறைவுகள் முக்கிய காரணங்களாக அமைந்தன. மோட்டார் வாகனங்கள் தொடர்பாக ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக அதிகரித்த இறக்குமதிகளினால் ஏற்பட்டதாகும்.

1969/70ஆம் ஆண்டில் ரூ. 180 இலட்சங்கொண்ட இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்கள் சென்ற ஆண்டின் மூல மதிப்பீடுகளிலும் பார்க்கக் குறைவானதாகும்.

1970/71ஆம் நிதியாண்டுக்கான இறக்குமதித் தீர்வைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் இறக்குமதிகளின் அளவு குறைக்கப்பட்டதன் காரணமாக மேலும் ரூ. 190 இலட்சத்தினால் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கனிப்பொருள் உற்பத்திகள் (ரூ. 310 இலட்சம்) ஊர்திகள், வானூர்திகள், கப்பல்கள் என்பவற்றின் (ரூ. 40 இலட்சம்) வீழ்ச்சிகளின் பிரதிதாக்கத்தினாலும், புடவை, புடவைப் பொருட்கள் (ரூ. 110 இலட்சம்) மரக்கறி உற்பத்திகள் (ரூ. 150 இலட்சம்) ஆகியவற்றின் அதிகரித்த சேகரிப்புகளினாலும் இவ்வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. கனிப்பொருள் உற்பத்திகளின் வீழ்ச்சி சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிகளின் எதிர்பார்க்கப்பட்ட மேலதிக வீழ்ச்சி காரணமாயிருக்க, 'சலுசல' தாபனத்துக்குத் தீர்வை நீக்கிய புடவைகள் இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட சலுகைகள் (சட்டத்துக்கு அப்பாற்பட்ட நீக்கம்) நீக்கப்பட்டதன் விளைவாக புடவைகளிலிருந்து கிடைக்கும் சேகரிப்புக்கள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

(ஈ) வெ. செ. உ. சா. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்கள்.

பல அரசாங்கத் திணைக்களங்கள் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளைச் செய்யும்போது வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களைக் கையளிக்க

வேண்டியிருப்பதால், 1969/70இல் இம் மூலத்திலிருந்து பெற்ற அரசிறை சென்ற ஆண்டிலும் பார்க்க ரூ. 1,610 இலட்சத்தால் கடுமையாக உயர்வுற்றது. ஆயினும், 1969/70இல் இவ்வருவாய்கள் இவ்வாண்டிற்கான மூலமதிப்பீட்டிலும் பார்க்கரூ. 940 இலட்சம் குறைவுற்றிருந்தன. இக்குறைவிற்கு 1970 மே 26இலிருந்து வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் விற்பனவை இடை நிறுத்தியமையும் (முக்கியமாக பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளுக்காக) சிறு ஏற்றுமதிகளுக்குக் கூடிய கொடுப்பனவுகள் செய்தமையுமே முக்கிய காரணங்களாகும். 1970/71இல் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய், முக்கியமாக இறக்குமதிகளின் அளவில் குறைவை எதிர்பார்த்தமையால், ரூ. 110 இலட்சத்தால் மட்டுமே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

(உ) ஏற்றுமதித் தீர்வைகள்

1969/70இல் ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்து பெற்ற வருவாய் சென்றுண்டுடன் ஒப்பிடுகையில், ரூ. 270 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு, தேயிலை மீதான தீர்வைகளிலேற்பட்ட வீழ்ச்சியினால் (ரூ. 60 இலட்சம்) ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டு சிறு ஏற்றுமதிகள் (ரூ 190 இலட்சம்), தெங்குப் பொருட்கள் (ரூ. 70 இலட்சம்), இரப்பர் (ரூ. 60 இலட்சம்) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரித்த தீர்வைச் சேகரிப்புக்களே காரணமாகும். சிறு ஏற்றுமதிகளிற் சேகரிக்கப்பட்ட தீர்வைகளின் மீதான குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்கு (சேகரிப்புக்கள்) சென்ற ஆண்டைவிட இரு மடங்கிற்கு மேலாகவிருந்தன) 1969/70இல் சிறிய ஏற்றுமதிகள் ஆகிய கறுவாத் துண்டுகள் புல் எண்ணெய், காரியம், ஆகியவற்றை 10 சதவீதம் தொட்டு 40 சதவீதமான பெறுமானவீதத் தீர்வுகளுக்கு உட்படுத்தியதன் விளைவினாலேயே மேற்குறித்த நிலை நிலவியது. தடையற்ற அளவுத்திட்டத் தீர்வை அடிப்படையில் இலண்டன் ஏலங்களில் பிலிப்பையின் கொப்பராவிற்கு ஏற்பட்ட அதிகரித்த விலைகளும் தேங்காயெண்ணெயின் ஏற்றுமதி அளவு அதிகரித்ததுமே தேங்காய் ஏற்றுமதிகளுக்கு அதிகரித்த சேகரிப்புகள் கிடைத்தமைக்கு முக்கிய ஏதுவாகும். இத்தொகுதியில் புதிய தேங்காய்கள் என்ற சிறிய விடயம் தவிர்த்துக் கொப்பரா, தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல் ஆகிய மூன்று பெரிய ஏற்றுமதிகளிலிருந்து பெற்ற வருவாய் அதிகரித்திருந்தது. (10 சதவீத அதிகரிப்பு) 310 இலட்சம் இறுத்தல்கள் கொண்ட ஏற்றுமதி அளவின் அதிகரிப்பின் முக்கிய விளைவே இரப்பரிலிருந்து பெறப்பட்ட தீர்வுகளின் அதிகரிப்பிற்குக் காரணமாகும். இது (இரப்பருக்குத் தொகையீட்டுத் தீர்வைகள் என்ற அடிப்படையில்) சிங்கப்பூர் அங்காடியில் இரப்பர் விலைகளுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. இரப்பர் ஏற்றுமதிகள் அளவு உயர்ந்த நிலையிலுள்ள நிதியாண்டின் இறுதிக்காலாண்டுப் பகுதியிலேயே குறிப்பாக இந்நிலை நிலவியது. அத்தோடு 1969/70இல் சென்றுண்டின் கப்பல் ஏற்றுமதிகள் பற்றிய புகு உண்டியல்கள் நிறைவேற்றப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு ஓரளவு காரணமாகும். 300 இலட்சம் இறுத்தல்கள் வீழ்ச்சியுற்றதன் காரணமாக ஏற்றுமதி அளவில் (6 சதவீத வீழ்ச்சி) ஏற்பட்டததனாலும் அத்தோடு மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் அடைக்கப்பட்ட தேயிலையின் தொடர்பான பங்கு சிறிது அதிகரித்ததுமே தேயிலை ஏற்றுமதிகளுக்குச் சேர்க்கப்பட்ட தீர்வுகள் வீழ்ச்சியுற்றதற்கு முக்கிய காரணமாகும்.

மூல வரவு செலவுத்திட்டமதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது ஏற்றுமதியிற் பெற்ற தீர்வை அரசிறைகள் ரூ. 290 இலட்சம் அதிகரிப்பைக் காட்டியது. இரப்பரிலும், தேங்காய்களிலும் சிறிய ஏற்றுமதிகளிலும் முறையே ரூ. 290 இலட்சம், ரூ. 130 இலட்சம், 10 இலட்சம் மிகையின் தேறிய விளைவே இந்த மிகையாகும். இந்த வருவாய் தேயிலையிலேற்பட்ட ரூ. 130 இலட்சம் வீழ்ச்சியினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. மேலே குறித்ததற்கமைய இரப்பர் ஏற்றுமதிகளின் அளவு எதிர்பார்க்கப்பட்டதற்கு மேலாக அதிகரித்து இருந்ததே இரப்பர் தீர்வு சேர்ப்பனவுகள் கூரிய முறையில் அதிகரித்தது. இலண்டன் ஏலங்களில் கொப்பராவிற்குக் கிடைத்த அதிகரிந்த விலைகளின் விளைவாலும் அதனால் பெறுமான விகிதத் தீர்வைகளிற் கிடைத்த அதிகரிப்புகளுமே

தேங்காய் ஏற்றுமதிகளினுல் கிடைத்த தீர்வுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். எதிர்பார்க்கப்பட்டளவிற்குக் குறைவாசத் தேயிலே ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதிகளில் அடைக்கப்பட்ட தேயிலேயின் ஏற்றுமதி களில் அடைக்கப்பட்ட தேயிலேயின் தொடாபான பங்கு அதிகரித்ததுமே தேயிலேயின் வருவாயின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

1970/71இல் ஏற்றுமதித் தீர்வுகளில் இருந்து கிடைக்கும் வருவாய் ரூ. 50 இலட்சத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளையில் தேயிலேயிலும் சிறிய ஏற்றுமதிகளிலும் கிடைக்கும் வருவாய் ரூ. 90 இலட்சத்தாலும் ரூ. 40 இலட்சத்தாலும் முறையே அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேங்காய்களினுலும் இரப்பரினுலும் கிடைக்கும் வருவாய் ரூ. 70 இலட்சத்தாலும், ரூ. 10 இலட்சத்தாலும் முறையே வீழ்ச்சியுறும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஊ) உத்தரவாதச் சீட்டுச் சொத்து மாற்றல் வரிகள்

உத்தரவாதச் சீட்டு வரிகளின் அரசிறையும் (சாராயத் தவறணே வாடகைகள், கள் இறக்கும் உத்தரவாதச்சீட்டுக் கட்டணங்கள், வானெலி உத்தரவாதச் சீட்டுக் கட்டணங்கள், மற்றும் இன்னேரன்னவை) உடைமை மாற்றல் வரிகளும் (முத்திரைகள், உந்து ஊர்திகள் ஆகியவற்றின் மாற்றல் வரிகள்) 1968/69இல் ஏறக்குறைய ஒத்த நிலேயில் இருந்தன. எனினும் 1969/70இன் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது முத்திரை வரிச் சேர்ப்பனவுகளில் ரூ. 20 இலட்சம் சிறு அதிகரிப்பு ஏற்பட்டது. 1970/71இல் இம் மூலங்களிலிருந்து பெற்ற வருவாய் ரூ. 30 இலட்சத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது,

(எ) அரசாங்கத் தனியுரிமைகளின் மிகை

1969/70இல் அரசாங்கத்தின் அரசிறை விடயம் சாராய விற்பனே இலாபத்தினேயே ஏறக்குறைய உள்ளடக்குகிறது. இந்த விற்பனே ரூ. 140 இலட்சம் அதிகரிப்பினேப் பதிவுசெய்துள்ளது. இவ்வாண்டின் அரசிறை வரவுசெலவுத் திட்டத்தின் மதிப்பீட்டிலும் பார்க்கச் சிறுதொகையே குறைவுற்று இருந்தது. சாராயத்தில் குறிப்பாகத் தென்னஞ் சராயமும் ஸ்பிரிட்டும் கலந்த விற்பனேயில் ஏற்பட்ட அதிகரித்த விற்பனேகளே அதிகரித்த அரசிறைக்குக் காரணமாகும். 1970/71இல் அதிகரித்த விற்பனேகள் அடிப்படையில் மூலத்தில் இருந்து ரூ. 260 இலட்சம் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளன.

(ஏ) உணவு விற்பனேகளிலிருந்து இலாபங்கள்

சீனி, கோதுமை மா ஆகியவற்றின் விற்பனே இலாபங்களிலேயே அரசாங்கத்தின் இந்த மூல வருவாய்கள் உள்ளடக்கியுள்ளன. இதே ஆண்டிற்கு ரூ. 300 இலட்சம் வீழ்ச்சியுறுமென முன்பு மதிப்பீடு செய்யப்பட்டதற்கு மாருக 1969/70இல் இந்த இலாபங்கள் ரூ. 330 இலட்ச வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 1970/71இல் இந்த இலாபங்கள் மேலும் ரூ. 1,040 இலட்சத்தால் கூரிய முறையில் வீழ்ச்சியுறுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உணவு விற்பனேயின் இலாபங்களில் வீழ்ச்சியேற்பட்டதற்குரிய காரணங்கள் தேறிய உணவு மானியம் என்ற பகுதியில் பின்பு தரப்படும்.

**வட்டியும் பங்கிலாபங்களும்**

1969/70இல் இம் மூலத்தின் அரசிறை ரூ 230 இலட்சத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இலாபங்கள், பங்கிலாபங்கள் என்ற அடிப்படையில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களாலும், அரசாங்கக் கூட்டு நிலேயங்களாலும் இறைசேரிக்கு அளித்த உதவுதொகைகளே வழங்கியதே இவ்வதிகரிப்பிற்குக் காரணமாகும். இத்தகைய உதவுதொகைகள் ரூ. 200 இலட்சத்தால் அதிகரித்தன. எனினும், இம்மூலத்திலிருந்து பெற்ற வரவுகள்

வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டிலும் பார்க்க ரூ. 80 இலட்சத்தால் குறைவுற்று இருந்தது. 1970/71இல் வட்டியும், பங்கிலாபங்களும் மேலும் ரூ. 220 இலட்சத்தால்[1] அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வணிக நிறுவனங்களிலிருந்து பெறும் வருவாய்கள்

அரசாங்க வணிக நிறுவனங்களிலிருந்து குறிப்பாக (புகைவண்டி அஞ்சல் தந்திச் சேவைகள், துறைகள்)[2] ஆகியவற்றிலிருந்துபெற்ற மொத்த வருவாய்கள் 1969/70இல் ரூ. 880 இலட்சம் குறைவுற்று இருந்தது. இலங்கை மின்சாரச் சபையென்ற பெயரில் அரசாங்கக் கூட்டுத்தாபனமாக 1969 நவெம்பரில் அரசாங்க மின்சாரத் திணைக்களம், பொறுப்புக்கள் திருப்பி அமைக்கப்பட்டதால் இத்திணைக்களத்தின் வருவாய்கள் நீக்கப்பட்டதே இக்கூரிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். அவ்வாண்டிற்குரிய வரவுசெலவுத்திட்டத்தின் மதிப்பீட்டிற்கு ரூ. 1,180 இலட்சம் குறைவாகவே 1969/70இல் வணிக நிறுவனங்களின் அரசிறை விளங்கியது. இதற்குக்காரணம் இறுதியிற் குறிக்கப்பட்ட நிறுவனங்கள் மின்சாரத் திணைக்களத்திலிருந்து எதிர்பார்த்த வரவுகளையும் உள்ளடக்கியதேயாகும். எனினும், 1969/70இல் எல்லா நிறுவனங்களும் குறிப்பாகப் புகைவண்டிப்பகுதியே (ரூ. 90 இலட்சம்) அதிகரித்த வரவுகளைப் பதிவுசெய்துள்ளன. 1970/71இல் வணிக நிறுவனங்களின் வருவாய்கள் ரூ. 190 இலட்சத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதிகரித்த வருவாய்களை அஞ்சல் தந்திச் சேவைகள் (ரூ. 210 இலட்சம்) துறைமுகச் சேவைகள் (ரூ 80 இலட்சம்) ஆகியவற்றில் எதிர்பார்த்த இவ்வதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு புகைவண்டிப்பகுதியில் (ரூ. 50 இலட்சம்) எதிர்பார்க்கப்பட்ட வருவாய்கள் வீழ்ச்சியுற்றதனுல் எதிரீடு செய்யப்பட்டது.

### ஏனைய நடைமுறை வருவாய்கள்

ஏனைய பல்வகை மூலங்களிலிருந்து 1969/70இல் பெற்ற நடைமுறை வருவாய் சென்ற ஆண்டிலும் பார்க்க ரூ. 100 இலட்சம் கூடியிருந்தது. தேசிய லொத்தரிலிருந்து பெற்ற வரவுகள் ரூ. 50 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றதெனினும், இந்த வீழ்ச்சி ஏனைய பல்வேறு மூலங்களிலிருந்து பெற்ற அதிகரித்த ரூ. 140 இலட்சத்தால் பெருமளவு எதிரீடு செய்யப்பட்டது. 1970/71இல் ஏனைய நடைமுறை வரவுகள் ரூ. 120 இலட்சமாகவிருக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதில், தேசிய லொத்தரிலிருந்து ரூ. 30 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது.

### மூலதன வருவாய்கள்

வருவாய்க்குள் உள்ளடக்கப்பட்ட மூலதன வருவாய்கள் முக்கியமாகப் பூதல் வரி, தனியார் வரி (அதாவது செல்வ வரி, கொடை வரிகள்) ஆகியவற்றுடன் திரட்டிய நிதியில் இருந்து பெற்ற முற்பணத்தை மீளக் கொடுப்பனவு செய்தலையும் உள்ளடக்கும். இந்த வரவுகள் சென்றுண்டிலும் பார்க்க ரூ. 160 இலட்சம் கூடியிருந்தது. ஏனைய மூலதன வருவாய்களிலிருந்தே இந்தப் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டது. இவற்றுள் முக்கிய விடயமாக விளங்குவது திரட்டிய நிதியிலிருந்து பெற்ற ரூ. 150 இலட்ச முற்பணத்தை இலங்கை மின்சாரச் சபை திருப்பிக் கொடுப்பனவு செய்த விடயமேயாகும். 1970/71இல் இம் மூலங்களிலிருந்து பெறப்படும் வருவாய் ரூ. 80 இலட்சத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது இவ்வதிகரிப்பில் முக்கிய காரணம் பூதல் வரியிலிருந்து பெற்ற அதிகரித்த சேர்ப்பனவுகளும் (ரூ 30 இலட்சம்) ஏனைய மூலதன வருவாய்களிலிருந்து பெற்ற ரூ. 50 இலட்சமுமேயாகும்.

---

1. 1970/71இல. ரூ. 573 இலட்சம் இலாபங்களாகவும் பங்கு இலாபங்களாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுத்தாபனங்களின்விவரமான உதவுதொகைகளை வரவுசெலவுத்திட்டம் 1970/71 என்ற பகுதியைப் பார்க்கவும்.
2. அட்டவணை II (ஊ) 3இல் காட்டப்பட்ட வருவாய்கள், இத்திணைக்களங்களின் கீழ் அரசாங்கக் கணக்குகளில் அரசிறை வருமானம் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது. திருப்பி வழங்கல் (தலைப்பு viii) வட்டி ஆண்டுத் தொகை என்பன பற்றிய விடயங்களின் சேர்ப்பால் ஏற்பட்டவையே இவ்வேறுபாடாகும். (தலைப்பு x)

## 3. செலவு

1969/70ஆம் நிதியாண்டில் மொத்த அரசாங்கச் செலவு ரூ. 38,860 இலட்சமாக விளங்கியது. இது, வாக்களிக்கப்பட்ட செலவாகிய ரூ. 36,850 இலட்சத்தையும், முற்பணக் கணக்குக் கொடுப்பனவுகளின் ரூ. 2,010 இலட்சம்கொண்ட தொகையையும் உள்ளடக்குகின்றது. இம்மொத்தச் செலவு, சென்ற ஆண்டிலும்பார்க்க ரூ. 4,410 இலட்சம் அல்லது 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது; இவ்வதிகரிப்பு, மூலதனவாக்குகளின் கீழான செலவுகளில் ஏற்பட்ட ரூ. 400 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினாலும், முற்பணக் கணக்குகளின் கீழான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட ரூ. 1,520 இலட்சம் கொண்ட அதிகரிப்பாலும் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டு, மீண்டெழும் வாக்குகளின் கீழான செலவில் ஏற்பட்ட ரூ. 3,290 இலட்சம் கொண்ட அதிகரிப்பை உள்ளடக்குகின்றது. முற்பணக் கணக்குகளின்கீழ் ரூ. 2,010 இலட்சம்கொண்ட தேறிய கொடுப்பனவிற்கு வரவுசெலவுத்திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படவில்லை; இதனால் உண்மையான (தற்காலிகமான) செலவு, வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலும்பார்க்க ரூ. 930 இலட்சம் அல்லது 2 சதவீதம் மிகைவுற்று விளங்கியது. இச்செலவு, மீண்டெழும் கணக்குகளின்கீழான செலவில் ஏற்பட்ட ரூ. 580 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினாலும் மீண்டெழும் வாக்குகளின் கீழான ரூ. 500 இலட்சம் குறைவினாலும் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது.

1968/69 முதல் 1970/71 வரையுள்ள நிதியாண்டுகளுக்கான செலவுகளின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 4இல் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஊ) 4
### அரசாங்கச் செலவு — 1968/69 முதல் 1970/71 வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1968/69 | 1969/70 மூல மதிப்பீடுகள் | 1969/70 தற்காலிக மதிப்பீடுகள் | 1970/71 மூல மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| 1. வாக்களிக்கப்பட்ட செலவு ... | 3,396 | 3,793 | 3,685 | 4,058 |
| 1.1 மீண்டெழும் செலவு1 ... | 2,544 | 2,923 | 2,873 | 3,089 |
| 1.2 மூலதனச் செலவு1 ... | 852 | 870 | 812 | 969 |
| 2. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ... | 49 | — | 201 | — |
| 3. மொத்தச் செலவு ... | 3,445 | 3,793 | 3,886 | 4,058 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. அட்டவணை II (ஊ) 1 இன் அடிக்குறிப்பு (இ) ஐப் பார்க்கவும்.

வரவுசெலவுத்திட்டத்தில் மீண்டெழும் செலவிற்கும், மூலதனச் செலவிற்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டை மேலேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. 1969/70 நிதியாண்டின்போது நிறைவேற்றப்பட்ட மீண்டெழும் வாக்குகளின் கீழான ரூ. 1000 இலட்சத்தையும், மூலதனவாக்குகளின் கீழான ரூ. 340 இலட்சத்தையும் கொண்ட துணை மதிப்பீடுகளைக் கணக்கிலெடுப்பின், மீண்டெழும், மூலதனம் ஆகிய செலவு தொடர்பான மொத்த ஏற்பாடுகள் முறையே ரூ. 30,230 இலட்சமாகவும், ரூ. 9,040 இலட்சமாகவும் விளங்கின.

1970/71ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம், ரூ. 4,058 இலட்சம் கொண்ட மொத்தச் செலவிற்கு அல்லது 1969/70இற்கான உண்மைச் (தற்காலிக) செலவிலும்பார்க்க ரூ. 172 இலட்சம்கொண்ட மேலதிகத் தொகைக்கு ஏற்பாடு செய்தது. 1969/70இன் மீண்டெழும் மூலதனவாக்குகளின் கீழான உண்மை (தற்காலிக)ச் செலவுடன் ஒப்பிடுகையில், 1970/71 இற்கான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள், மீண்டெழும் வாக்குகளின் கீழான செலவில் ரூ. 2,160 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், மூலதனவாக்குகளின் கீழான

செலவில் ரூ. 1,570 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் காட்டுகின்றன. 1969/70இல் ரூ. 2,010 இலட்சம்கொண்ட கொடுப்பனவிற்குக் காரணமாயமைந்த முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகளுக்கு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் ஏற்பாடு செய்யவில்லை.

அரசாங்கச் செலவின் பொருளாதாரத் தொழிற்பாட்டுப் பகுப்பை, பின்னிணைப்பு II இன் அட்டவணை 35 தருகின்றது. இப்பகுப்பு அடிப்படையில் நடைமுறைச் செலவு ரூ. 28,500 இலட்சமாகவும், மூலதனச்செலவு ரூ. 8,830 இலட்சமாகவும் அமைந்தது. இச்செலவு முற்பணக்கணக்குக் கொடுப்பனவுகளுடன் சேர்ந்து, 1969/70ஆம் நிதியாண்டில் ரூ. 39,280 இலட்சம்கொண்ட மொத்தச் செலவைக் காட்டியது. சென்ற ஆண்டில் மொத்தச் செலவு ரூ. 35,730 இலட்சமாக விளங்கியது. இது, நடைமுறைச் செலவாகிய ரூ. 26,120 இலட்சத்தையும், மூலதனச் செலவாகிய ரூ. 9,100 இலட்சத்தையும், முற்பணக் கணக்குகளின் கீழான கொடுப்பனவுகளின் ரூ. 510 இலட்சம்கொண்ட தொகையையும் உள்ளடக்குகின்றது. 1969/70இல் மொத்தச் செலவு ரூ. 3,550 இலட்சத்தால் அல்லது 10 சதவீதத்தால் அதிகரித்தது.

**நடைமுறைச் செலவு**

1968/69இல், ரூ. 2,200 இலட்சம் அல்லது 9 சதவீதம்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்த அரசாங்க நடைமுறைச் செலவானது, 1969/70இல், மேலும் ரூ. 2,380 இலட்சத்தால் அல்லது 9 சதவீதத்தால் அதிகரித்தது. 1969/70இல் ஏற்பட்ட அதிகரித்த நடைமுறைச்செலவு, அரசாங்க ஊழியர்களுக்குத் திரட்டப்பட்ட சம்பளங்களையும், கூலிகளையும் வழங்கியதனால் ஏற்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகளையும், அரசாங்கத் திணைக்களங்களின் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்ச் செலவின் ஒருபகுதியையும் கொண்டுள்ளது. இச்செலவு மின்சாரத் திணைக்களத்தைப் பொதுக் கூட்டுத்தாபனமாக மாற்றியதன் விளைவால் (இது வர்த்தக நிலையங்களின் மொத்தக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை, விளக்குகின்றது). ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. 1970/71ஆம் நிதியாண்டில் நடைமுறைச் செலவின் மதிப்பிடப்பட்ட அதிகரிப்பு ரூ. 1,590 இலட்சம் அல்லது 6 சதவீதமாகும்.

(அ) நிருவாகம்

மீளப்பார்வையிடும் ஆண்டில், பொது நிருவாகம், பாதுகாப்பு ஆகியவற்றின் மீதான நடைமுறைச் செலவு பிரதானமாக அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களையும், கூலிகளையும் திரட்டியதன் விளைவால் கூடிய சம்பளம் கூலி ஆகியன கொடுப்பனவு செய்தமையால் முறையே ரூ. 580 இலட்சத்தாலும், ரூ. 90 இலட்சத்தாலும் அதிகரித்துநடைமுறை நிருவாகச் செலவுகள், 1969/70இன் மொத்த நடைமுறைச் செலவில், ஏறக்குறைய 14 சதவீதமாக விளங்கின. 1970/71இல், நிருவாகத்தின் மீதான நடைமுறைச் செலவு ரூ.190 இலட்சத்தால் மேலும் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டது.

(ஆ) சமூக சேவைகள்

1969/70இல் சமூக சேவைகள் மீதான நடைமுறைச் செலவு ரூ. 900 இலட்சத்தால் அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு கல்வியிலேற்பட்ட ரூ. 620 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், சுகாதாரத்திலேற்பட்ட ரூ. 260 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், ஏனைய சமூக சேவைகளிலேற்பட்ட ரூ. 30 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது. சமூக சேவைகளின் மீதான நடைமுறைச் செலவு, அரசாங்கத்தின் மொத்த நடைமுறைச் செலவில் ஏறக்குறைய நாலில் ஒரு பங்காக விளங்கியது. 1970/71இல் சமூகசேவைகளின் மீதான நடைமுறைச் செலவு, ரூ. 190 இலட்சத்தால் அல்லது 3 சதவீதத்தால் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

## அட்டவணை II (ஊ) 5

### அரசாங்கத்தின் நடைமுறைச் செலவு(அ) 1967/68 இலிருந்து 1970/71 வரை

| விடயங்கள் | 1967/68 | | 1968/69 | | 1969/70 மூலம் | | 1969/70 தற்காலிகமானவை | | 1970/71 (மூலம்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் ப. இ. ரூ. | சதவீதம் | மொத்தம் ப. இ. ரூ. | சதவீதம் | மொத்தம் ப. இ. ரூ. | சதவீதம் | மொத்தம் ப. இ. ரூ. | சதவீதம் | மொத்தம் ப. இ. ரூ. | சதவீதம் |
| 1. நிருவாகம் ... | 331.9 | 13.9 | 343.2 | 13.1 | 421.0 | 14.3 | 410.4 | 14.4 | 429.6 | 14.3 |
| 1.1 பொது ... | 255.5 | 10.7 | 260.5 | 10.0 | 328.8 | 11.2 | 318.4 | 11.2 | 332.6 | 11.1 |
| 1.2 பாதுகாப்பு ... | 76.4 | 3.2 | 82.7 | 3.1 | 92.2 | 3.1 | 92.0 | 3.2 | 97.0 | 3.2 |
| 2. சமூக சேவைகள் ... | 596.8 | 24.9 | 642.9 | 24.6 | 723.3 | 24.6 | 732 9 | 25.7 | 752.1 | 25.0 |
| 2.1 கல்வி ... | 377.1 | 15.8 | 410.6 | 15.7 | 464.4 | 15 8 | 472.4 | 16.6 | 484.6 | 16.1 |
| 2.2 சுகாதாரம் ... | 196.1 | 8.2 | 210.0 | 8.0 | 233.0 | 7.9 | 235.7 | 8.3 | 240.1 | 8.0 |
| 2.3 ஏனைய ... | 23.6 | 1.0 | 22.3 | 0.9 | 25.9 | 0.9 | 24.8 | 0.9 | 27.4 | 0.9 |
| 3. பொருளாதாரச் சேவைகள் ... | 109.0 | 4.6 | 120.1 | 4.6 | 140.7 | 4.8 | 130.3 | 4.6 | 161.0 | 5.4 |
| 3.1 விவசாயமும் நீர்ப்பாசனமும் ... | 51.8 | 2.2 | 57.0 | 2.2 | 70.6 | 2.4 | 66.5 | 2.3 | 78.4 | 2.6 |
| 3.2 போக்குவரத்துச் செய்தித் தொடர்பு .. | 24.1 | 1.0 | 26.5 | 1.0 | 29.0 | 1.0 | 24.2 | 0.9 | 31.7 | 1.1 |
| 3.3 ஏனைய ... | 33.1 | 1.4 | 36.6 | 1.4 | 41.1 | 1.4 | 39.6 | 1.4 | 50 9 | 1.7 |
| 4. வர்த்தக முயற்சிகளின் மொத்தக் கொடுப்பனவுகள் . | 288.1 | 12.0 | 301.0 | 11.5 | 326.7 | 11.1 | 249.9 | 8.8 | 250.0 | 8.3 |
| 5. அரசாங்கத் திணைக்களங்களுக்கிடையிலான கொடுப்பனவுகள் ... | 3.9 | 0.2 | 4.0 | 0.2 | 4.0 | 0.1 | 4.3 | 0.2 | 4.5 | 0.2 |
| 6. மாற்றக் கொடுப்பனவுகள் ... | 1062.7 | 44.4 | 1201.1 | 46.0 | 1310.2 | 44.5 | 1281.9 | 45.0 | 1372.6 | 45.6 |
| ... | 610.3 | 25.5 | 668.8 | 25.6 | 670.5 | 22.8 | 647.6 | 22.7 | 665.6 | 22.1 |
| 6.1 உணவு மானியங்கள் ... | (578.7) | (24.2) | (620.4) | (23.7) | (621.5) | (21.1) | (599.1) | (21.0) | (614.4) | (20.4) |
| 6.2 பொதுப்படுகடன் மீதான வழக்கு ... | 166 5 | 7.0 | 206.2 | 7.9 | 262.5 | 8.9 | 253.3 | 8.9 | 309.0 | 10.3 |
| 6.3 இளைப்பாறற் சம்பளங்கள் ... | 154.9 | 6.5 | 161.1 | 6.2 | 168.9 | 5.7 | 182.9 | 6 4 | 186.5 | 6.2 |
| 6.4 ஏனைய, சொந்த நடைமுறைக் கணக்குகட்கு ... | 44.0 | 1.8 | 40.4 | 1.5 | 57.3 | 1.9 | 63.1 | 2.2 | 59.3 | 2.0 |
| 6.5 உள்ளூராட்சி மன்றங்கட்கு ... | 52.5 | 2.2 | 61.9 | 2.4 | 69.5 | 2.4 | 58.9 | 2.1 | 60.8 | 2.0 |
| 6.6 ஏனைய ... | 34.5 | 1.4 | 62.7 | 2.4 | 81.5 | 2.8 | 76.1 | 2.7 | 91.4 | 3.0 |
| **மொத்தம்** | **2392.4** | **100.0** | **2612.3** | **100.0** | **2942.7(ஆ)** | **100.0** | **2849.8 (ஆ)** | **100.0** | **3009.3 (ஆ)** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) பினனிணைப்பு IIஇன் அட்டவணை 35 (அ) இன் அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

(ஆ) 1969/70 (மூலம்) ரூ. 168 இலட்சமும் 1969/70 (தற்காலிகம்) ரூ. 401 இலட்சமும் 1970/71 ரூ. 395 இலட்சமும் கொண்ட சேர்க்கமுடியாத வெ. செ. உ. சா. செலவு தொகையை உள்ளடக்கும்.

(இ) பொருளாதார சேவைகள்

1969/70இல் பொருளாதார சேவைகளின் மீதான நடைமுறைச் செலவு ரூ. 1300 இலட்சமாக விளங்கி, சென்ற நிதியாண்டிலும் பார்க்க ரூ 100 இலட்சம் அல்லது 8 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. நடைமுறைச் செலவிலேற்பட்ட அதிகரிப்பிற்குப் பிரதானமாக விவசாயத்திலும், நீர்ப்பாசனத்திலும் ஏற்பட்ட ரூ. 90 இலட்சம்கொண்ட அதிகரித்த செலவே காரணமாகும். பொருளாதாரச் சேவைகளின் மீதான செலவு, மொத்த நடைமுறைச் செலவில் ஏறக்குறைய 5 சதவீதமாக விளங்கியது. 1970/71இல் பொருளாதாரச் சேவைகளின் மீதான நடைமுறைச் செலவு ரூ. 310 இலட்சம் அல்லது 24 சதவீதம் அதிகமாக மதிப்பிடப்பட்டது.

(ஈ) வர்த்தக நிலையங்களின் மொத்தக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்தின் வர்த்தக நிலையங்களினுலாய கொடுப்பனவுகள், 1968/69 இல் ரூ. 3,010 இலட்சத்திலிருந்து 1969/70 இல் ரூ. 2,500 இலட்சமாகக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவுற்றது. இதற்குப் பிரதானமாக அரசாங்க மின் சாரத் திணைக்களப் பொறுப்புக்களைப் பொதுக் கூட்டுத்தாபனமாக மாற்றியமைத்தமையால், அதன் கொடுப்பனவுகளை அரசாங்கக் கணக்குகளிலிருந்து விலக்கியமையே காரணமாகும். 1970/71 இலும் அரசாங்கத்தின் வர்த்தக நிலையங்களினது கொடுப்பனவுகள் ஏறக்குறைய ரூ. 2500 இலட்சமாகவிருக்குமென எதிர்பார்க்கப்பட்டது

(உ) நடைமுறை மாற்றல்கள்

1969/70 இல் நடைமுறை மாற்றல்கள், ரூ. 810 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு, மானியத்தில்[1] ஏற்பட்ட ரூ.210 இலட்சம் வீழ்ச்சியினுலும், உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கான மாற்றல்களின் மீதான ரூ. 30 இலட்சம் வீழ்ச்சியினுலும் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளின் மீதான ரூ. 470 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், இளைப்பாறற் சம்பளங்களின் மீதான ரூ. 220 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், வீட்டுப்பாவிப்புத் துறைக்கான மாற்றல்களின் மீதான ரூ. 230இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், 'ஏனைய' மாற்றல்களின் கீழான ரூ.130இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது. சென்ற சில ஆண்டுகளைப் போன்று நடைமுறை மாற்றல்கள், மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகளில் ஏறக்குறைய 45 சதவீதமாக விளங்கின 1970/71 நடைமுறை மாற்றல்கள் பிரதானமாக மானியத்தின் மீதான ரூ. 180 இலட்சம், வட்டிக் கொடுப்பனவுகளின் மீதான ரூ. 560 இலட்சம், ஏனைய மாற்றல்கள் மீதான ரூ. 150 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களினுல், மேலும் ரூ. 910 இலட்சம் அல்லது 7 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

**மூலதனச் செலவு**

அட்டவணை II (ஊ) 6 இற் காட்டப்பட்டதற்கமைய 1969/70 இல் அரசாங்க மூலதனச் செலவு ரூ. 8,830 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 270 இலட்சம் அல்லது 3 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. மேலே கூறிய காரணங்களுக்காக மின்சாரத் திணைக்களத்தின் மூலதனச் செலவின் பெரும் பகுதியை மொத்த மூலதனச் செலவு நீக்குகிறது. ஆனுல் மூலதனச் செலவில் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்க் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. ஆகவே, 1969/70இற்குரிய மொத்த மூலதனச் செலவு பற்றிய தரவால் சென்ற நிதியாண்டுகளுடன் ஒப்பிட முடியாது. எனினும், மேற் கூறிய இரண்டு காரணிகளின் தாக்கத்திற்கு விட்டுக்கொடுக்கப்பட்டநிலையிலும் 1969/70 இற்குரிய மூலதனச் செலவைச் சென்ற ஐந்தாண்டுகாலப்பிரிவின் 14 சதவீதக் கூட்டு வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இது வீழ்ச்சியையே காட்டுகின்றது.

1. விபரத்திற்கு தேறிய உணவு மானியத்தின் மீதான பிந்திய பிரிவையும், அட்டவணை II (ஊ) 7 ஐயும் பார்க்கவும்.

1969/70இற்குரிய மூலதனச் செலவில் அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு ரூ. 5,180 இலட்சமாகவும் (அல்லது 59 சதவீதம்), மூலதன மாற்றல்கள் ரூ. 3,200 இலட்சமாகவும் (அல்லது 36 சதவீதம்) கொள்ளப்பட்ட நிதிச் சொத்துக்கள் ரூ. 460 இலட்சமாகவும்( 5 சதவீதம்) விளங்கின. ஒப்பிடத்தக்க இத்தரவு சென்ற நிதியாண்டில் ரூ. 5,260 இலட்சமாகவும் (அல்லது 58 சதவீதம்) ரூ. 3,320 இலட்சமாகவும் (37 சதவீதம்) ரூ. 510இலட்சமாகவும் (6 சதவீதம்) முறையே விளங்கின. 1967/70 இல் ரூ. 270 இலட்சங்கொண்ட மூலதனச் செலவின் வீழ்ச்சி, அரசாங்கத் திணைகளங்களின் ரூ. 80 இலட்சம் மூலதன வீழ்ச்சியை, மூலதன மாற்றல்களில் ரூ. 130 இலட்சம் வீழ்ச்சியையும், நிதிச் சொத்துக்களைக் கொள்வதில் ரூ 60 இலட்சம் வீழ்ச்சியையும் உள்ளடக்குகிறது. சென்ற நிதியாண்டின் ரூ. 1,210 இலட்சங்கொண்ட மூலதனச் செலவு, அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவாகிய ரூ. 320 இலட்சத்தையும் மூலதன மாற்றல்களாகிய ரூ. 650 இலட்சத்தையும் நிதிச் சொத்துக்களைக் கொள்வதில் ஏற்பட்ட ரூ. 240 இலட்சத்தையும் உள்ளடக்கியுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவாகிய ரூ. 7,850 இலட்சத்தையும், மூலதன மாற்றல்களில் ரூ. 3,580 இலட்சத்தையும், நிதிச்சொத்துக்களைக் கொள்வனவு செய்ததினுல் ஏற்பட்ட ரூ. 520 இலட்சத்தையும் உள்ளடக்கி, 1970/71 இற்குரிய மூலதனச் செலவு ரூ. 11,950 இலட்சமாகயிருக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனுல் 1969/70 இலும் பார்க்க அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு ரூ. 2,670 இலட்சத்தால் உயர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. 1970/71இல் மூலதனச் செலவு மாற்றங்களும் நிதிச் சொத்துக் கொள்வனவுகளும் ரூ. 380 இலட்சத்தாலும் ரூ. 70 இலட்சத்தாலும் முறையே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(அ) அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு

மீளப்பார்வையிடும் இவ்வாண்டில் அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு ரூ. 5,180 இலட்சமாக விளங்கி, சென்ற நிதியாண்டிலும் பார்க்க, ரூ. 80 இலட்சம் அல்லது 2 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. பொருளாதாரப் பணிகள் செலவிலேற்பட்ட ரூ. 190 இலட்ச வீழ்ச்சியே இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இது பொது நிருவாகத்திற்குரிய ரூ 30 இலட்சத்தையும் சமுதாயப் பணிகளுக்கு ரூ. 80 இலட்சத்தையும் அதிகரித்ததனுல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. முன்பு விளக்கப்பட்டதற்கமைய மின்சாரத் திணைக்களம் சபையாக மாற்றப்பட்டதனுல் ஏற்பட்ட ரூ. 360 இலட்சம் வீழ்ச்சியையும் விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் ரூ. 50 இலட்ச அதிகரிப்பு ஏற்பட்டு ஓரளவு எதிரீடு செய்யப்பட்டிருந்தும் வர்த்தகத்தில் ஏற்பட்ட ரூ. 70 இலட்சம் வீழ்ச்சியையும் தயாரிப்பு, பார்க்குழித் தொழிலிலும் ஏற்பட்ட ரூ. 40 இலட்சம் வீழ்ச்சியையும் போக்குவரத்திலேற்பட்ட ரூ. 150 இலட்சம் வீழ்ச்சியுமே பொருளாதாரப் பணிகளின் செலவில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களாகும். கட்டட ஆக்கத்திலேற்பட்ட ரூ. 20 இலட்ச வீழ்ச்சியினுல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டிருப்பினும் கல்வியிலேற்பட்ட ரூ. 90 இலட்சம் அதிகரிப்பும் நலத்துறையிலேற்பட்ட ரூ. 10 இலட்சம் அதிகரிப்புமே சமூகப் பணிகளிலேற்பட்ட ரூ. 80 இலட்சம் அதிகரிப்பை உள்ளடக்குகிறது.

பொது நிருவாகத்திலேற்படும் ரூ. 190 இலட்சத்தையும் சமூக சேவைகளில் ஏற்படும் ரூ. 2,030 இலட்சத்தையும் பொருளாதாரப் பணிகளிலேற்படும் ரூ. 5.490 இலட்சத்தையும் உள்ளடக்கி அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு 1970/71 இல் ரூ. 7,850 இலட்சமாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 1969/70இலும் பார்க்க ரூ. 2,670 இலட்சம் அதிகமாக அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வதிகரிப்பு சமூக சேவைகளிலேற்பட்ட ரூ 820 இலட்சம் அதிகரிப்பையும், பொருளாதாரப் பணிகளிலேற்பட்ட ரூ. 1,710 இலட்ச அதிகரிப்பையும் முக்கியமாக உள்ளடக்குகின்றது. வேலைத் திட்டத்திற்கென ரூ. 2000 இலட்சம் ஒதுக்கப்பட்டதே அரசாங்கத் திணைக்களங்களில்

## அட்டவணை II (ஊ) 6

### அரசாங்கத்தின் மூலதனச் செலவு *(அ)* 1967/68 — 1970/71

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1967/68 | | 1968/69 | | 1969/70 மூல மதிப்பீடுகள் | | 1969/70 தற்காலிகமானவை | | 1970/71 மூல மதிப்பீடுகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | சதவீதம் | தொகை ப. இ. ரூ. | சதவீதம் | தொகை ப. இ. ரூ. | சதவீதம் | தொகை ப. இ. ரூ. | சதவீதம் | தொகை ப. இ. ரூ. | சதவீதம் |
| 1. உண்மை இருப்புச் சொத்துக்களின் கொள்ளல் ஆக்கல் பராமரிப்பு | 493.9 | 62.6 | 526.2 | 57.8 | 750.6 ஆ | 69.5 | 518.0 | 58.7 | 784.5 ஆ | 65.7 |
| 1.1 சிவில் நிருவாகம் | 13.1 | 1.7 | 16.7 | 1.8 | 24.1 | 2.2 | 19.4 | 2.2 | 18.8 | 1.6 |
| 1.1 சமூக சேவைகள் . | 93.8 | 11.9 | 112.9 | 12.4 | 140.6 | 13.0 | 120.6 | 13.7 | 202.6 | 17.0 |
| 1.2.1 கல்வி . | 33.1 | 4.2 | 31.6 | 3.5 | 52.1 | 4.8 | 40.1 | 4.5 | 68.2 | 5.7 |
| 1.2.2 சுகாதாரம் ... | 24.5 | 3.1 | 37.5 | 4.1 | 41.8 | 3.9 | 38.0 | 4.3 | 47.3 | 4.0 |
| 1.2.3 வீடமைப்பு ... | 30.6 | 3.9 | 35.8 | 3.9 | 36.1 | 3.3 | 34.1 | 3.9 | 50.0 | 4.2 |
| 1.2.4 ஏனைய ... | 5.6 | 0.7 | 8.0 | 0.8 | 10.6 | 1.0 | 8.4 | 1.0 | 37.1 | 3.1 |
| 1.3 பொருளாதாரச் சேவைகள் ... | 387.0 | 49.0 | 396.6 | 43.6 | 552.2 | 51.1 | 378.0 | 42.8 | 548.8 | 45.9 |
| 1.3.1 விவசாயமும் நீர்ப்பாசனமும் ... | 140.0 | 17.7 | 168.1 | 18.5 | 227.5 | 21.0 | 172.8 | 19.6 | 250.8 | 21.0 |
| 1.3.2 மீன் பிடித்தொழில் ... | 0.1 | ... | 0.1 | ... | 2.3 | 0.2 | 1.0 | 0.1 | 18.3 | 1.5 |
| 1.3.3 தயாரிப்பும் சுரங்கத் தொழிலும் ... | 24.2 | 3.1 | 5.0 | 0.5 | 10.8 | 1.0 | 8.8 | 1.0 | 16.6 | 1.4 |
| 1.3.4 வர்த்தகம் ... | 3.4 | 0.4 | 13.9 | 1.5 | 9.0 | 0.8 | 7.0 | 0.8 | 34.2 | 2.9 |
| 1.3.5 போக்குவரத்து செய்தித் தொடர்புகள் ... | 154.9 | 19.6 | 170.0 | 18.7 | 242.2 | 22.4 | 185.1 | 21.0 | 228.9 | 19.2 |
| 1.3.6 சக்தி ... | 64.4 | 8.2 | 39.5 | 4.3 | 60.4 | 5.6 | 3.3 | 0.4 | — | — |
| 2. மூலதன மாற்றல்கள் ... | 267.9 | 33.9 | 332.4 | 36.5 | 296.9 | 27.5 | 319.5 | 36.2 | 357.7 | 29.9 |
| 2.1 உள்ளூராட்சி மன்றங்கள் ... | 13.0 | 1.6 | 14.0 | 1.5 | 14.1 | 1.3 | 15.5 | 1.8 | 15.5 | 1.3 |
| 2.2 பொதுக் கூட்டுத்தாபனங்கள் ... | 210.1 | 26.6 | 285.6 | 31.4 | 259.2 | 24.0 | 282.8 | 32.0 | 317.0 | 26.5 |
| 2.2.1 விவசாயமும் நீர்ப்பாசனமும் ... | 70.9 | 9.0 | 70.0 | 7.7 | 70.8 | 6.6 | 77.2 | 8.7 | 161.1 | 13.5 |
| 2.2.2 மீன்பிடித்தொழில் ... | 15.6 | 2.0 | 16.7 | 1.8 | 14.9 | 1.4 | 14.1 | 1.6 | 11.0 | 0.9 |
| 2.2.3 தயாரிப்பும் சுரங்கத் தொழிலும் ... | 106.1 | 13.4 | 182.8 | 20.1 | 158.1 | 14.6 | 175.5 | 19.9 | 116.9 | 9.8 |
| 2.2.4 ஏனைய ... | 17.5 | 2.2 | 16.2 | 1.8 | 15.4 | 1.4 | 16.0 | 1.8 | 28.0 | 2.3 |
| 2.3 ஏனைய ... | 44.8 | 5.7 | 32.8 | 3.6 | 23.6 | 2.2 | 21.2 | 2.4 | 25.2 | 2.1 |
| 3. நிதி இருப்புச் சொத்துக்களின் ஈட்டம் ... | 27.4 | 3.5 | 51.2 | 5.6 | 32.3 | 3.0 | 45.6 | 5.2 | 52.3 | 4.4 |
| 4. மொத்தம் ... | 789.2 | 100.0 | 909.8 | 100.0 | 1079.8 | 100.0 | 883.1 | 100.0 | 1194.5 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 35 (அ) இன் அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

(ஆ) பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 35 (அ) வினது அடிக்குறிப்பு (இ) இல் தரப்பட்ட காரணங்களுக்காக இங்கு அடக்கப்பட்டுள்ள விடயங்கள் இவ்வுப மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டா.

ஏற்பட்ட மூலதனச் செலவின் பெரும் அதிகரிப்பிற்குக் காரணமாகும். கல்விக்கென ரூ. 280 இலட்சமும் நலத்துறைக்கென ரூ 90 இலட்சமும் வீடமைப்புக்கென ரூ. 160 இலட்சமும் ஏனைய சமூகப் பணிகளுக்கென ரூ. 290இலட்சமும் கூடுதலாக ஒதுக்கப்பட்டதே சமூகசேவைகளின் மூலதனச் செலவின் அதிகரிப்பிற்குக் காரணமாகும். பொருளாதாரப்பணிகளின் செலவில் ஏற்பட்ட ரூ. 1,710 இலட்ச அதிகரிப்பு, விவசாய நீர்ப்பாசனத்திலேற்பட்ட ரூ. 780 இலட்ச அதிகரிப்பையும், கடற்றொழிலிலேற்பட்ட ரூ. 170 இலட்ச அதிகரிப்பையும் தயாரிப்பிலும் பார்க்குழித்தொழிலிலும் ஏற்பட்ட ரூ. 80 இலட்ச அதிகரிப்பையும் வர்த்தகத்தில் ஏற்பட்ட ரூ. 270 இலட்சத்தையும் போக்குவரத்திலேற்பட்ட ரூ. 440 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது. இது மின்சாரத்திலேற்பட்ட ரூ. 30 இலட்ச வீழ்ச்சியினுல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது.

(ஆ) மூலதன மாற்றல்கள்

1969/70இல் அரசாங்கத்தின் மூலதன மாற்றல்கள் ரூ. 3200 இலட்சமாக விளங்கி, 1968/69இலும் பார்க்க ரூ. 130 இலட்சம் குறைவுற்றிருந்தது. சென்ருண்டுபோல் மொத்த மூலதன மாற்றங்களின் (ரூ. 2,830 இலட்சம் அல்லது 89 சதவீதம்) பெரும்பகுதியை அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் பெற்றன. அதேவேளையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 'ஏனையவற்றிற்கும்' வழங்கப்பட்ட மூலதனமாற்றல்கள் ரூ. 160 இலட்சமாகவும் ரூ. 210 இலட்சமாகவும் முறையே விளங்கின. 1970/71இல் மூலதன மாற்றல்கள் ரூ. 3,580 இலட்சமாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகைகள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கு வழிப்படுத்தப்படும் தொகை ரூ. 3,170 இலட்சம் அல்லது 89 சதமாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்குச் செய்யப்பட்ட மொத்த மூலதன மாற்றல்களில் கைத்தொழிற் பிரிவில் உள்ள கூட்டுத்தாபனங்களுக்குச் செய்யப்பட்ட மூலதனமாற்றல்கள் 62 சதவீதத்திற்கு வகைகூறி, ரூ. 70 இலட்சத்தால் 1969/70இல் வீழ்ச்சியுற்றன. தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்துக்கு (துல்கிரியா செயற்றிட்டம்) உதவுதொகையில் ஏற்பட்ட ரூ. 640 இலட்சமே இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இது பல கூட்டுத்தாபனங்களுக்கு முக்கியமானவை. கீழைத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய அதிகரித்த தொகையாகிய ரூ. 210 இலட்சத்தாலும் இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய அதிகரித்த தொகைகளில் ரூ. 180 இலட்சத்தாலும் ஓரளவு எதிரீடுசெய்யப்பட்டது. 1970/71இல் விவசாயப் பிரிவிலுள்ள கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட மூலதன மாற்றல்கள் ரூ. 840 இலட்சங்கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக்காட்ட, கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட மாற்றல்கள் ரூ. 590 இலட்சத்தால் வீழ்ச்சியுறுமென மதிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட மகாவலி அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட அதிகரித்த ஒதுக்கீட்டை முன்னையது காட்ட பின்னையது தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்திற்கு (துல்கிரியாச் செயற்றிட்டம்) வழங்கப்பட்ட தொகைகளின் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

(இ) நிதிச் சொத்துக்களைக் கொள்ளல்

நிதிச்சொத்துக்களைக் கொள்வனவு செய்ததினுல் அரசாங்கத்தின் செலவீடு 1969/70இல் ரூ. 460 இலட்சமாக இருந்தது. ரூ. 250 இலட்சம் தேசிய வீடமைப்பு நிதிக்கு வழங்கப்பட்டதும், ரூ. 80 இலட்சம் உள்ளூர்க் கடன்களுக்கும் அபிவிருத்தி நிதிக்கும் ரூ. 60 இலட்சம் வரையறுக்கப்பட்ட (இலங்கை) கொட்டேல் பணிகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கடன்களே முக்கிய கடன்களாகும். அரசாங்கக் கொள்வனவு செய்யும் நிதிச் சொத்துக்கள் 1970/71இல் ரூ. 520 இலட்சமாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தேசிய வீடமைப்பு நிதிக்கு வழங்கப்பட்ட ரூ. 200 இலட்சத்தையும் உள்ளூர்க் கடன்களுக்கு அபிவிருத்தி நிதிக்கும் வழங்கப்பட்ட ரூ. 100 இலட்சத்தையும் தொழிற்றிட்டத்தின் கீழ்ச் சுயதொழில்புரிவோர்க்கு வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 80 இலட்சத்தையும் உள்ளடக்கும்.

## 4. தேறிய உணவு மானியம்

அரசாங்கத்தின் தேறிய உணவு மானியம், பங்கீட்டரிசிப் புத்தகத்தின் மீது வழங்கப்படும் அரிசியின் பேரிலான தேறிய கொடுப்பனவுகளையும், நெல் உற்பத்தியாளருக்கும் சிறு வெங்காய உற்பத்தியாளர்களுக்கும் உத்தரவாத விலைகள் வழங்குவதன் மூலம் கொடுக்கப்படும் உற்பத்தியாளர் மானியத்தையும் கொண்டுள்ளது. இவைகள் சீனியினதும் கோதுமை மாவினதும், இறக்குமதியினாலும் விற்பனையினாலும் பெறப்படும் இலாபத்தினால் ஈடுசெய்யப்படுகின்றன. மாலைதீவுக் கருவாடு, பருப்பு வகைகள் போன்றவற்றை இறக்குமதி செய்து விற்பனை செய்வதனாற்பெறப்படும் இலாபம், நட்டம், மேற்கூறிய பொருட்களையொட்டிய விநியோகச் செலவுகள் ஏனைய கட்டணங்கள் அரிசி, மானிய வரி ஆகியனவும் தேறிய உணவு மானியத்தைக் கணிப்பதில் கணக்கிலெடுக்கப்படுகின்றன.[1]

கடந்த மூன்றாண்டுகளுக்கான தேறிய உணவு மானிய விவரங்கள் 1969/70, 1970/71 உக்கான மூலதன மதிப்பீடுகளுடன் கீழே அட்டவணை II (ஊ) 7இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஊ) 7**

**தேறிய உணவு மானியம் — 1967/68 — 1970/71**

பத்து இலட்சம் ரூபாய்கள்.

| விடயங்கள் | 1967/68 | 1968/69 | 1969/70 (மூலமதிப்பீடுகள்) | 1969/70 (தற்காலி மானவை) | 1970/71 (மூலமதிப்பீடுகள்) |
|---|---|---|---|---|---|
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீது நுகர்வோர்களுக்கான மானியம் ... ... | 279.9 | 276.1 | 237.2 | 263.9 | 524.8(அ) |
| 2. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மீது உற்பத்தியாளர்க்கும், நுகர்வோர்க்கும் வழங்கிய மானியம் .. ... ... | 250.3 | 269.2 | 319.6 | 252.5 | |
| 3. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்துக்கான மானியம் .. ... ... | 6.8 | 6.8 | 8.0 | 8.0 | 8.5 |
| 4. விநியோகச் செலவும் ஏனைய கட்டணங்களும் ... | 37.2 | 51.8 | 48.5 | 61.1 | 79.9 |
| 5. ஏனையபொருட்களின் விற்பனையில் நட்டம்(ஆ) .. | 4.1 | 5.4 | 8.2 | 3.6 | 1.2 |
| 6. கடன் திருப்பலுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களால் ஒப்படைக்கப்பட்ட அரிசிக்கூப்பன்களின்பெறுமதி | 0.4 | 11.1 | — | 10.0 | — |
| 7. மொத்த உணவு மானியம் (1—6) ... | 578.7 | 620.4 | 621.5 | 599.1 | 614.4 |
| 8. சீனி விற்பனை இலாபம் .. ... | 239.5 | 254.6 | 210.6 | 222.6 | 120.1(இ) |
| 9. கோதுமை மா விற்பனை இலாபம் ... | 41.0 | 33.9 | 49.1(ஈ) | 33.0 | 32.2 |
| 10. அரிசி மானிய வரி ... ... .. | 1.9 | 3.1 | 2.0 | 3.5 | 3.0 |
| 11. மொத்தம் (8—10) ... ... .. | 282.4 | 291.6 | 261.7 | 259.1 | 155.3 |
| 12. தேறிய உணவு மானியம் ... ... | 296.3 | 328.8 | 359.8 | 340.0 | 459.1 |

மூலம்: உணவு ஆணையாளர்.

(அ) வழங்கிய முதலாவது, இரண்டாவது (இறக்குமதியினதும் உள்நாட்டு உற்பத்தியினதும்) அரிசியின் சரியான மதிப்பீட்டினைக் கொடுத்தல் சாத்தியமற்றதாகும். இதனால் 1ஆம், 2ஆம் விடயங்கள் மதிப்பிடப் பட்டவையன்று.

(ஆ) அவரை விதை, மாலைதீவு மீன், வெங்காயம், கோதுமை மா என்பனவற்றை உள்ளடக்கியது.

(இ) தேறிய ரூ. 861 இலட்சம் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் மீது, வெ. சா. உ. சா. திட்டத்துக்கான செலவு.

(ஈ) ஐ. அ. பி. எல். 480ஆம் சட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவுக்கான தள்ளுபடி ரூ. 206 இலட்சமும் உள்ளடக்கும்

1. 1967/68 வரைக்கும் மேலதிக விடயம் அதாவது கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்பட்ட கடன்களை திருப்பிக் கொடுக்குமுகமாக ஒப்படைத்த அரிசிக் கூப்பன் புத்தகங்களின் பெறுமதி பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

1969/70 இல் தேறிய உணவு மானியம் முந்திய நிதியாண்டின் ரூ. 330 இலட்சங்கொண்ட அதிகரிப்புக்கெதிராக ரூ. 110 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டிற்று.

1968/69 இல் ஏற்பட்ட அதிகரிப்பு, உள்ளூர் அரிசி மீது வழங்கப்பட்ட மானியத்திலேற்பட்ட ரூ. 190 இலட்சம் அதிகரிப்பினதும், விநியோகச் செலவுகளிலும் ஏனைய கட்டணங்களிலும் ஏற்பட்ட ரூ. 150 இலட்சம் அதிகரிப்பினதும், கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மீளக் கொடுப்பனவுக்குப் பதிலாகக் கையளிக்கப்பட்ட அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களையொட்டி உள்ளடக்கப்பட்ட ரூ. 100 இலட்சத்தினதும் விளைவாகும். இவை யாவும் மொத்த உணவு மானியத்தை ரூ. 410 இலட்சத்தால் அதிகரிக்க வழிவகைசெய்தன. மொத்த மானியத்திலேற்பட்ட அதிகரிப்பு சீனி, கோதுமை மா இலாபங்களிலிருந்தும் அரிசி மானியவரியிலிருந்தும் பெற்ற வருவாய்களிலேற்பட்ட ரூ. 90 இலட்சம் அதிகரிப்பினால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. சீனி விற்பனையிலிருந்து பெற்ற இலாபம் ரூ. 150 இலட்சத்தால் அதிகரித்திருக்க, கோதுமை மா விற்பனையிலிருந்து பெற்ற இலாபம் ரூ 70 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. உள்ளூர் அரிசி, மானியத்தின் அதிகரிப்பு அதன் பங்கீடு 37,200 தொன்களால் அல்லது 18 சதவீதத்தால் அதிகரித்ததனால் ஏற்பட்டது. சீனி விற்பனையிலிருந்து பெற்ற அதிகரித்த இலாபம் அதன் விற்பனை 30,000 தொன்களால் அல்லது (12 சதவீதத்தால்) அதிகரித்தமையினாலாகும். இவ்விலாபம் சராசரி இறக்குமதி விலை 559 ரூபாவிலிருந்து 576 ரூபாவுக்கு அதிகரித்தமையால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. கோதுமை விற்பனை இலாபத்திலேற்பட்ட வீழ்ச்சி சராசரி இறக்குமதி விலை ஒரு தொன்னுக்கு 9 சதவீதத்தால் ரூ. 681 ரூபாவுக்கு அதிகரித்ததனாலாகும்.

மொத்த மானியம் ரூ. 210 இலட்சத்தால் குறைவுற்றபோதும் 1969/70 இனைவிடத் தேறிய உணவு மானியத்தின் தற்காலிக எண்தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டது. மொத்த மானியத்திலேற்பட்ட வீழ்ச்சி உள்ளூர் அரிசி மானியத்திலேற்பட்ட ரூ. 170 இலட்சங்கொண்ட வீழ்ச்சியினதும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மானியத்திலேற்பட்ட ரூ. 120 இலட்சங்கொண்ட வீழ்ச்சியினதும் முக்கிய காரணத்தினாலாகும். இவ்வீழ்ச்சி விநியோகச் செலவிலேற்பட்ட ரூ.90 இலட்சம் அதிகரிப்பினை ஈடுசெய்தது. உள்ளூர் அரிசி மீதான மானியம் அதன் விநியோகத்திலேற்பட்ட 21,200 தொன்கள் வீழ்ச்சியினால் (9 சதவீத வீழ்ச்சி) குறைவுற்றது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் சராசரி விலை ரூ. 920 இலிருந்து ரூ. 787 உக்கு (14 சதவீத வீழ்ச்சி) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றதனால் அதன் மானியம் குறைவுற்றது. ஆனால் இவ்விலைவீழ்ச்சி விநியோகிக்கப்பட்ட அரிசியின் அளவு 58,700 தொன்களால் அல்லது 22 சதவீதத்தால் அதிகரித்தமையால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. எனினும், சீனி, கோதுமை மா, இலாபங்களிலிருந்தும் அரிசி, மானிய வரியிலிருந்தும் கிடைத்த வருவாய்களிலேற்பட்ட ரூ. 300 இலட்சங்கொண்ட வீழ்ச்சி மொத்த உணவு மானியத்தின் வீழ்ச்சியை மேலதிகமாக எதிரீடு செய்தது. இதன் விளைவால், தேறிய உணவு மானியம் ரூ. 110 இலட்சத்தால் அதிகரித்தது. சீனி, கோதுமை மா இலாபங்களினது வருவாய்களினதும் அரிசி மானிய வரி வருவாய்களினதும் வீழ்ச்சி சீனியின் விற்பனை இலாபத்திலேற்பட்ட ரூ. 320 இலட்சம் அல்லது 13 சதவீத வீழ்ச்சியினாலாகும். இவ்வீழ்ச்சி அநேகமாக அதன் சராசரி இறக்குமதி விலை தொன்னுக்கு ரூ. 576 இலிருந்து ரூ. 765 உக்கு (33 சதவீத அதிகரிப்பு) கூர்மையாக அதிகரித்தமையாலாகும்

1970/71இல் தேறிய உணவு மானியம் ரூ. 1,190 இலட்சத்தால் அல்லது 35 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வதிகரிப்பு சீனியின் இறக்குமதியினை வெ. செ. உ. சா உக்குக் கீழ்க் கொண்டு வருவதென்ற ஏற்பாட்டினாலாகும். இது சீனி மொத்த இறக்குமதி விலையை ரூ. 860 இலட்சத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 1969/70 இல் கூர்மையாக உயர்ந்த சீனியின் இறக்குமதி விலை 1970/71இல் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவால் சீனிவிற்பனை ரூ.1,030 இலட்சத்தால் வீழ்ச்சியுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சீனி, கோதுமை

மா இலாபங்கள் அரிசி மானிய வரி வருவாய்கள் ஆகியவற்றிலிருந்து எதிர் பார்க்கப்படும் வீழ்ச்சியும் ஏறக்குறைய இதேயளவென எதிர்பார்க்கப்படுகின் றது. மறுபக்கத்தில் மொத்த உணவு மானியம் ரூ. 150 இலட்சத்தால் அதி கரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வதிகரிப்புப் பெரும்பாலும் உள் ளூர், இறக்குமதி அரிசி மானியத்தில் ஏற்படும் ரூ. 80 இலட்சத்தினதும், விநியோக ஏனைய செலவுகளிலேற்படும் ரூ. 190 இலட்சத்தினதும் விளைவாகும். இது ஏனைய பொருட்களின் விற்பனை நட்டத்திலேற்படும் ரூ. 20 இலட்சக் குறைவினால் ஓரளவு ஈடுசெய்யப்படும். உள்ளூர் இறக்குமதி அரிசி மீதான எதிர்பார்க்கப்பட்ட அதிகரித்த மானியமும் விநியோக ஏனைய கட்டணங்களை யொட்டி எதிர்பார்க்கப்படும் செலவு அதிகரிப்பும் 1970 செத்தெம்பர் 26ஆந் திகதி தொட்டு மேலதிகக் கொத்தொன்றினை 75 சதவிலையில் வழங்குவதென்ற தீர்மானத்தினாலாகும்.

## 5 அமைச்சுக்களின் குறைச்செலவு

1967/68 தொடக்கம் 1969/70 வரையுள்ள மூன்று நிதியாண்டுகளுக்கான மூலதன வாக்குகளின் கீழுள்ள செலவுகளைப் பொறுத்தவரையிலான மொத்த ஒதுக்கீட்டையும் (துணை மதிப்பீடுகள் உட்பட), அதன் தொடர்பான உண்மை யான செலவையும் அமைச்சுகளின் வகைப்படிகீழே அட்டவணை II (ஊ) 8 தரு கின்றது.

1969/70ஆம் நிதியாண்டில் மூலதன வாக்குகளைப் பொறுத்தவரையிலான மொத்த ஒதுக்கீடு ரூ. 9,640 இலட்சமாகவிருக்க, உண்மையான செலவு ரூ. 8,120 இலட்சமாக அமைந்து, ரூ. 1,520 இலட்சம் அல்லது 16 சதவீதங் கொண்டவொரு குறைச் செலவினைக் காட்டுகின்றது. முன்னைய நிதியாண்டில் குறைச்செலவு ரூ. 1,430 இலட்சம் அல்லது 14 சதவீதமாகவும், 1967/68இல் ரூ. 1,240 இலட்சம் அல்லது 15 சதவீதமாகவும் இருந்தது. 1969/70ஆம் நிதியாண்டிற்கான மொத்த ஒதுக்கீடு மின்சாரத் திணைக்களத்தின் மூலமதிப் பீடுகள் முழுவதையும் உள்ளடக்கியிருக்கையில், 1969 நவெம்பரில் இத் திணைக் களம் சபையாக மாற்றப்பட்டதனால் உண்மையான எண்தொகைகள் ஒரு மாதத்தின் செலவினை மட்டுமே கொண்டிருக்கின்றன. மேலும் மூலதனவாக்கு களின் கீழான செலவு மூலதனக் கொடுப்பனவுகளின் மீது செலுத்தப்பட்ட வெ, செ. உ. சா. செலவினை உள்ளடக்கியிருக்க இதற்கான ஒதுக்கீடு மூலதன வாக்குகளின் கீழ்ச்செய்யப்படவில்லை. இக்காரணிகளால் குறைச்செலவு தொடர்பான உண்மையான மதிப்பீடு செய்ய முடியாமல் இருக்கின்றது.

1969/70இல் மொத்தக் குறைச்செலவின் பெரும்பங்கு ஏறக்குறைய அர சாங்க மூலதனச் செலவின் மூன்றில் ஒரு பங்குக்கு வகைகூறும் நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலைகள் அமைச்சின் வாக்குப் பணங்களில் ஏற்பட்டுள்ள தென்பதையும் அட்டவணை காட்டுகின்றது. முன்பு அவதானித்தபடி, இவ் வமைச்சின் அதிகமான குறைச்செலவின் ஒரு பகுதிக்கு மூல மதிப்பீடுகளில் மின்சாரத் திணைக்களத்தின் வாக்குப் பணங்கள் சேர்க்கப்பட்டமையும், பின்னர் இத் திணைக்களம் இலங்கை மின்சார சபையாக மாற்றப்பட்டதும் காரண மாகும். இக்காரணிக்கு இடம் விட்டு நோக்கினாலும், ஏற்படுகின்ற குறைச் செலவு ரூ. 630 இலட்சம் அல்லது 23 சதவீதம் கொண்ட கணிசமான எண் தொகையாகும்; ஒப்பியல்பாக இது 1967/68இல் ரூ. 93 இலட்சம் அல்லது 3 சதவீதம், 1968/69இல் ரூ. 391 இலட்சம் அல்லது 12 சதவீதமாகும். 1969/70இல் விவசாயக் காணி அமைச்சு ரூ. 196 இலட்சம் அல்லது 16 சத வீதங்கொண்ட குறைச்செலவைக் காட்டிற்று. ஒப்பியல்பாக 1967/68இல் ரூ. 257 இலட்சம் அல்லது 27 சதவீதம், 1968/69இல் ரூ. 89 இலட்சம் அல்லது 9சதவீதம் ஆகும். 1969/70இல் மூலதன வரவுசெலவுத்திட்டத்தில் குறிப்

## அட்டவணை II (ஊ) 8

## அமைச்சுக்களின்படி மூலதனச் செலவு — 1967/68 — 1969/70 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| அமைச்சு | 1967/68 | | | 1968/69 | | | 1969/70 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த ஒதுக்கீடு | உண்மையான செலவு | குறைச் செலவு | மொத்த ஒதுக்கீடு | உண்மையான செலவு | குறைச் செலவு | மொத்த ஒதுக்கீடு | உண்மையான செலவு | குறைச் செலவு |
| 1. மகாதேசாதிபதி, தலைமை அமைச்சர், உயர்நீதி மன்றங்கள். அமைச்சுகளுக்குக் கீழ்ப்படாதவை ... | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | — | 0.1 | 0.1 | — |
| 2. பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ... | 9.9 | 7.0 | 2.9 | 11.1 | 8.8 | 2.3 | 9.1 | 8.8 | 0.3 |
| 3. திட்ட வேலைவாய்ப்பு அமைச்சு ... | .. | ... | ... | 11.1 | 11.1 | — | 15.7 | 10.8 | 4.9 |
| 4. நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலைகள் அமைச்சு (ஆ) ... | 295.7 | 286.4 | 9.3 | 334.1 | 295.0 | 39.1 | 335.5 | 217.1 | 118.4 |
| 5. வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சு .. | 3.6 | 1.7 | 1.9 | 13.6 | 10.7 | 2.9 | 4.9 | 4.2 | 0.7 |
| 6. கல்வி அமைச்சு ... ... ... | 36.8 | 24.8 | 12.0 | 36.9 | 26.6 | 10.3 | 40.0 | 34.4 | 6.0 |
| 7. கப்பல் சுற்றுலா அமைச்சு ... ... ... | 24.3 | 17.0 | 7.3 | 40.4 | 30.8 | 9.6 | 24.3 | 23.8 | 0.5 |
| 8. தொழில் அமைச்சு ... ... ... | 2.4 | 2.5 | — 0.1 | 6.1 | 5.6 | 0.5 | 4.6 | 3.5 | 1.1 |
| 9. பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ... ... ... | 36.8 | 25.5 | 11.3 | 43.1 | 34.6 | 8.5 | 48.1 | 45.5 | 2.6 |
| 10. கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு ... | 146.9 | 136.0 | 10.9 | 214.7 | 189.1 | 25.6 | 147.6 | 164.7 | — 17.1 |
| 11. நிதி அமைச்சு ... ... ... | 29.7 | 26.7 | 3.0 | 28.2 | 26.8 | 1.4 | 37.7 | 38.6 | — 0.5 |
| 12. போக்குவரத்து அமைச்சு ... ... ... | 48.4 | 32.9 | 15.5 | 46.8 | 33.7 | 13.1 | 39.1 | 47.1 | — 8.0 |
| 13. தோட்டத்தொழில் அமைச்சு ... ... | 40.6 | 40.6 | — | 36.8 | 36.8 | — | 28.9 | 28.9 | — |
| 14. நீதி அமைச்சு ... ... ... | 0.2 | 0.2 | — | 0.1 | 0.2 | — 0.1 | 0.3 | 0.3 | — |
| 15. விவசாய, காணி அமைச்சு ... ... ... | 94.0 | 68.3 | 25.7 | 96.9 | 88.0 | 8.9 | 121.9 | 102.3 | 19.6 |
| 16. கடற்றொழில் அமைச்சு ... .. .. | 30.5 | 16 6 | 13.9 | 20.6 | 18.8 | 1.8 | 19.2 | 16.6 | 2.6 |
| 17. வீடமைப்பு நிருமாண அமைச்சு ... ... | 1.6 | 8.6 | — 7.0 | 7.0 | 7.0 | — | 42.3 | 33.5 | 8.8 |
| 18. அஞ்சல், தந்தித் தொடர்புகள் அமைச்சு ... ... | 18.3 | 5.8 | 12.5 | 17.5 | 9.2 | 8.3 | 16.9 | 9.4 | 7.5 |
| 19. நலத்துறை அமைச்சு ... ... ... | 11.1 | 10.8 | 0.3 | 17.0 | 11.6 | 5.4 | 13.9 | 12.3 | 1.6 |
| 20. தகவல் ஒலிபரப்பு அமைச்சு ... ... ... | 5.2 | 1.7 | 3.5 | 9.7 | 5.4 | 4.3 | 10.1 | 7.8 | 2.3 |
| 21. சமூக சேவைகள் அமைச்சு ... ... ... | 0.6 | 0.3 | 0.3 | 0.5 | 0.3 | 0.2 | 0.7 | 0.2 | 0.5 |
| 22. கலாச்சார அலுவல்கள் அமைச்சு ... ... | 2.0 | 1.5 | 0.5 | 2.3 | 1.8 | 0.5 | 2.2 | 1.6 | 0.6 |
| 23. நாடாளுமன்ற அலுவல்கள் விளையாட்டு அமைச்சு ... | 0.1 | — | 0.1 | — | — | — | 0.5 | 0.4 | 0.1 |
| 24. அரசியற்றிட்ட அலுவல்கள் அமைச்சு ... .. | — | — | — | — | — | — | 0.1 | — | 0.1 |
| **மொத்தம்** .. ... | **838.5** | **714.4** | **124.1** | **994.5** | **852.0** | **142.5** | **964.2** | **812.0** | **152.2** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒப்புநோக்கிற்காக, 1970/71 நிதியாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் வருமானங்கள் செலவுகள் பற்றிய மதிப்பீடுகளிற் காட்டப்பட்டுள்ள வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ்வரும் திணைக்களங்களுக்கெனக் கடைசியாகச் செய்யப்பட்ட ஒதுக்குகள், தொழிற்பாடுகள் என்பனவற்றிற்கு இயன்றளவு பொருந்தக்கூடியவகையில், 1967/68, 1968/69, 1969/70 இற்கான எண்தொகைகள் மீளப்பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. ''மொத்த ஒதுக்கீடுகளின்'' எண்தொகைகள் துணை மதிப்பீடுகளை உள்ளடக்கியிருக்கையில், ''உண்மையான செலவின்'' எண்தொகைகள் வாக்குப் பணங்களிற் சேர்ப்பதற்காக இருக்கும் வெளிநாட்டுக் கடன் செலவுகளை உள்ளடக்கியிருக்கின்றன. இவ்வெண்தொகைகள் கடன்கரைப்பு நிதியத்திற்கான உதவுதொகைகள், பொதுப்படுகடனின் நேரடி மீளக் கொடுப்பனவுகள், அனைத்துலக நிறுவனங்களுக்கான சிறப்புக்கொடுப்பனவுகள் என்பனவற்றையும் நீக்கியதாகும்.

''குறைச் செலவு'' பத்தியிலுள்ள சய அடையாளம் மொத்த ஒதுக்கீடுகளிலும் பார்க்க உண்மையான செலவின் அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

(ஆ) 1967/68, 1968/69 நிதியாண்டுகளில் பொதுவேலைப்பகுதித் திணைக்களத்தின் செலவு நீர்ப்பாசன, மின்சார நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் பாகுபடுத்தப்பட்டுள்ளது. 1969/70இல் இத்திணைக்களம் நெடுஞ்சாலைகள் திணைக்களம், கட்டடத் திணைக்களம்என்று பிரிக்கப்பட்டு, பின்னையது வீடமைப்பு நிருமான அமைச்சின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, 1969/70இற்கான இவ்விரண்டு அமைச்சுகளின் எண்தொகைகள் முன்னைய ஈராண்டுகளுக்குரியவற்றுடன் ஒப்பிடத்தக்கனவல்ல.

பிடத்தக்கவோர் அம்சம், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, நிதியமைச்சு ஆகிய மூன்றுஅமைச்சுகளின் உண்மையான செலவு, ஒதுக்கீட்டிலும் பார்க்க அதிகரித்ததாகும். அதிக மூலதனத்தைச் செலவிடும் அமைச்சுகளில் ஒன்ருன கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின்கீழ் அவ்வாருன அதிகரித்த தொகை 1969/70இல் ரூ. 171 இலட்சமாகும்; ஒப்பியல்பாக குறைச்செலவு 1967/68இல் 109 இலட்சம் அல்லது 7சதவீதம் 1968/69ல் ரூ. 256 இலட்சம் அல்லது 12 சதவீதமாகும். போக்குவரத்து அமைச்சின் மூலதனச் செலவும், 1967/68இல் ரூ. 155 இலட்சம் அல்லது 32 சதவீதம், 1968/69இன் ரூ. 131 இலட்சம் அல்லது 28 சதவீதம்கொண்ட குறைச்செலவுக்கு எதிராக 1969/70இல் ரூ. 80 இலட்சங்கொண்ட அதிகரிப்பொன்றினைக் காட்டியது

## 6. முற்பணக் கணக்குகள்

1969/70இல் அரசாங்கத்தின் ''முற்பணக் கணக்குகளின்''[1] தொழிற்பாடுகள் முன்னைய நிதியாண்டின் ரூ. 490 இலட்சங்கொண்ட தேறிய கொடுப்பனவொன்றிற்கு எதிராக ரூ. 2,010 இலட்சங்கொண்ட தேறிய கொடுப்பனவு ஒன்றினை விளைவித்தன. அவ்வாண்டின் தேறிய பணக்குறையினது அதிகரிப்புக்குக் கணிசமானளவு உதவிய 1969/70இன் தேறிய கொடுப்பனவுக்கு, அரசாங்கத் திணைக்களங்களுக்கான ரூ 1,250 இலட்சமும், இலங்கை / சீன வர்த்தகக் கணக்குகளின் கீழான ரூ. 560 இலட்சமும், களஞ்சியங்களுக்கான ரூ. 220 இலட்சமும் கொண்ட கொடுப்பனவுகள் காரணங்களாகும். இதனொரு பகுதி ரூ. 20 இலட்சங்கொண்ட பல்லின வரவுகளால் ஈடுசெய்யப்பட்டது. முன்னைய நிதியாண்டின் ரூ 490 இலட்சங்கொண்ட கொடுப்பனவுக்கு, அரசாங்கத் திணைக்களங்களுக்கான ரூ. 610 இலட்சங்கொண்ட கொடுப்பனவின் விளைவே முக்கிய காரணமாகும்; இதனொரு பகுதி இலங்கை/சீன வர்த்தகக்கணக்கின் கீழ்ச் சீனவுக்குச் சாதகமான மிகுதியிலேற்பட்ட ரூ. 120 இலட்சங்கொண்ட அதிகரிப்பினல் ஈடுசெய்யப்பட்டது. 1969/70இல் அரசாங்கத் திணைக்களங்களுக்கான ரூ. 1,250 இலட்சங்கொண்ட பெரிய கொடுப்பனவுக்கு சென்ற நிதியாண்டின் இறுதியில் வெளிநின்ற ரூ. 920 இலட்சங்கொண்ட உணவு, உண்டியல்களின் மீளக்கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாகவிருக்கையில், இலங்கை / சீன வர்த்தகக் கணக்கின் கீழ்ச் செய்யப்பட்ட ரூ. 560 இலட்சங்கொண்ட கொடுப்பனவு இவ்வர்த்தக உடன்படிக்கையின் கீழ்ச் சீன மக்கட் குடியரசுக்கு இலங்கை வழங்கவேண்டிய நிலுவையின் குறைப்பினைப் பிரதிபலித்தது.

## 7. பற்றுக் குறையும் நிதியீட்டமும்

1969/70 ஆம் ஆண்டிற்குரிய அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின் மூல மதிப்பில் எதிர்பார்க்கப்பட்ட தேறிய பணக் குறை ரூ. 7,220 இலட்சமாகும். எனினும், வரவுசெலவுத்திட்ட இறுதி நடவடிக்கைகளின் விளைவாக மிகக் கூடிய பற்றுக் குறை ரூ. 9,360 இலட்சமாக (தற்காலிகமானவை) அமைந்தது. இது முன்னைய ஆண்டில் ரூ. 7,880 இலட்சமாக இருந்தது. 1969/70 இன் பற்றுக் குறையானது மிக உயர்ந்த நிலையைப் பதிவுசெய்தது. அண்மை ஆண்டுகளில் தேறிய பணக் குறைவானது ஓர் உயர்ந்து செல்லும் போக்குடையதாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணம் முன்னைய பகுதிகளில் ஆராயப்பட்டுள்ளது.

1969/70இல் தேறிய பணக்குறையில் ஏற்பட்ட ரூ. 1,480 இலட்சமானது, மீள நடைமுறைச் செலவின் அதிகரிப்பான ரூ. 2,750 இலட்சத்தாலும், முற்

1. ''முற்பணக் கணக்குகள்'' என்பன அநேகமாக வர்த்தகத் தன்மையுடைய அரசாங்கத்தின், முற்றிலும் அல்லது ஓரளவுக்குத் தாமாகவே நிதியீட்டம் செய்யும் தொழிற்பாடுகளைக் குறிக்கின்றன. இக்கணக்குகள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவையாவன, களஞ்சியக் கணக்குகள், வர்த்தகக் கணக்குகள், சிறப்புக் கணக்குகள் என்பனவையாகும். அநேகமாக இத்தொழிற்பாடுகளின் வருவாய்களும் கொடுப்பனவுகளும் முன்கூட்டியே எளிதில் அறியமுடியாததால் அரசாங்க மதிப்பீட்டில் ஓர் அடையாள ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. அரசாங்க மதிப்பீடுகளின் பகுதி IIஇல் குறிப்பிட்ட மட்டங்களுக்கமைய அவைகள் செலவுக்காகத் தங்களது வருவாய்களைப் பயன்படுத்தலாம். எனினும், ஒரு தொழிற்பாட்டின் தேறிய விளைவுகள் நியாயமான அளவில் முன்கூட்டியே அறிய முடியுமாயின் அத்தொழிற்பாட்டின் மிகை அல்லது குறை மதிப்பீடுகளில் வாக்களிக்கப்படுகின்றது. உ. ம். ''தேறிய உணவு மானியம்''.

பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான[1] 1,520 இலட்சம் செலவீட்டினுலும், ஏற்பட்ட கூட்டு விளைவாகும். முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் ஓர் அளவு ரூ. 2,390 இலட்சம் வருவாய் அதிகரிப்பிலும், மூலதன வாக்குகளுக்கான ரூ. 400 இலட்சம் செலவுக் குறைவினுலும் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது.

1969/70ஆம் ஆண்டுகளின் தேறிய பணக் குறையும், மூலமதிப்பீட்டிலும் பார்க்க ரூ. 2,140 இலட்சம் அதிகரித்தது. ரூ 2,010 இலட்சம் தேறிய கொடுப்பனவுகளினுல் இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. இது, மூல மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்படவில்லை. வருமானத்திலேற்பட்ட ரூ.980 இலட்சம் வீழ்ச்சியில் ஒரு பகுதி, மூலதன, மீள நடைமுறைச் செலவுகளின் ரூ. 1,580 இலட்சம், ரூ. 280 இலட்சம் வீழ்ச்சியினுல் ஈடுசெய்யப்பட்டது.

1970/71இன் நடைமுறை நிதியாண்டின் தேறிய பணப் பற்றுக்குறை ரூ. 9,320 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 1969/70 இனைவிட ரூ. 40 இலட்சம் குறைவானதாகும். 1970/71இல் தேறிய பணப் பற்றுக் குறையினது சிறிதளவு குறைவுக்குக் காரணம், செலவீடு ரூ. 1,720 இலட்சத்தால் அதிகரிக்குமென எதிர்பார்ப்பதும், வருமான வருவாய்கள் ரூ. 1,420 இலட்சம் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டதும் கடன் கொடுப்பனவுக்கான ரூ. 350 இலட்சம் கூடுதலாக அதிகரித்தமையுமேயாகும்

**பற்றுக்குறை நிதியீட்டம்**

1966/67இலிருந்து 1969/70 வரையுள்ள ஆண்டுகளின் தேறிய பணக் குறையின் நிதியீட்டங்கள் பற்றிய தரவையும், மதிப்பிடப்பட்டுள்ள அந்நிதியீட்டங்களின் விரிவுத்தாக்கத்தையும் அட்டவணை II (ஊ) 9 தருகின்றது.

1969/70இன் தேறிய பணக்குறைவான ரூ. 9,360 இலட்சமும், உள்நாட்டு வங்கி மூலங்களில் இருந்து ரூ. 4,540 இலட்சமும் உள்நாட்டு வங்கியல்லாச் சந்தைமூலம், ரூ. 2,660 இலட்சமும் உள்நாட்டுச் சந்தையல்லா மூலங்களில் இருந்து ரூ. 220 இலட்சமும், கடன் பெறுவதன் மூலமும், வெளிநாட்டு உதவியாக ரூ. 2,200 இலட்சம் பெறுவதன் மூலமும் நிதியீட்டம் செய்யப்பட்டது. இதன் விளைவாக பண நிலுவை (இணைக்கிணை நிதிகள் உட்பட) ரூ. 4,260 இலட்சத்தால் அதிகரித்தது. மறுபக்கத்தில், 1970/71இன் நடைமுறையாண்டில் தேறிய பணக்குறையான ரூ. 9,320 இலட்சம் வெளிநாட்டு உதவியினை ரூ. 4,910 இலட்சத்தால் உயர்த்துவதன் மூலமும், உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்து ரூ. 3,440 இலட்சத்தினைப் பெறுவதன் மூலமும் நிதியீட்டப்பட்டது. மீதித் தொகையான ரூ. 970 இலட்சமும், வங்கிக் கடன்பாடு மூலம் நிதியீட்டப்படவுள்ளது.

1969/70இல் அரசாங்கத்தினது நிதித் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத்தாக்கத்தின் தொகை ரூ. 4,280 இலட்சமாகும். இது, சென்ற ஆண்டினை விட விரிவுத்தாக்கத்தின் ரூ. 2,490 இலட்சம்கொண்ட கூர்மையான அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இவ்விரிவுத்தாக்க அதிகரிப்புக்கு, முக்கியமாக தேறிய பணக்குறையினது தொகை அதிகரித்தமையும்[2], வெளிமூலங்களிலிருந்தும் உள்

1. முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகளின் பேரில், 1968/69, 1969/70 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 487 இலட்சம், ரூ. 2,011 இலட்சம் தேறிய கொடுப்பனவுகளாக இருந்தது.

2. வங்கித் தொழில் முறையிலிருந்து பெற்ற கடன்பாடுகளின் இவ்வதிகரிப்பிற்கும். இதையடுத்து ஏற்பட்ட அதிகரிப்பிற்கும்: சென்ற நிதியாண்டினிறுதியில் வெளிநின்ற தொகையில் ரூ. 920 இலட்சம்கொண்ட உணவு உண்டியல்களை கொடுப்பனவு செய்தமையே ஓரளவு காரணமாகும்.

## அட்டவணை II (ஊ) 9

## பணக் குறையின் நிதியீட்டம் 1966/67 - 1970/71

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலங்கள் | 1966/67 | | | 1967/68(ஆ) | | | 1968/69(ஆ) | | | 1969/70 (உண்மையான தற்காலிகமானவை) | | | 1970/71 மூலமதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அந்நிய நிதி | | | | | | | | | | | | | |
| (அ) திட்டக் கடன்கள் (மொத்தம்) ... | 42.4 | | | 38.8 | | | 93.9 | | | 53.3 | | | |
| ஆழ்நிதி உதவு தொகைகளையும் திருப்பிக் கொடுப்பனவுகளையும் நீக்கி ... | 44.9 | – 2.5 | | 47.8 | – 9.0 | | 47.0 | 46.9 | | 72.2 | -18.9 | | |
| (ஆ) திட்டமல்லாப்பண்டக்கடன்கள் (மொத்தம்) | 193.9 | | | 178.9 | | | 312.2 | | | 229.1 | | | |
| திருப்பிக் கொடுப்பனவுகளை நீக்கி ... | 2.1 | 191.8 | | 8.7 | 170.2 | | 25.0 | 287.2 | | 46.5 | 182.6 | | |
| (இ) நன்கொடைகள் ... | | 19.3 | 208.6 | | 29.0 | 190.2 | | 19.5 | 353.6 | | 56.5 | 220.2 | 490.9 |
| 2. உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | | | 72.3 | | | 9.8 | | | 52.2 | | | 21.8 | — |
| 3. வங்கித் தொழில் முறையிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | | | | | | | | | | | | | |
| (அ) மத்திய வங்கி ... | | 125.7 | | | 302.1 | | | 114.9 | | | 376.4 | | |
| (ஆ) வர்த்தக வங்கிகள் ... | | -74.5 | 51.3 | | 1.4 | 303.5 | | -46.8 | 68.1 | | 71.1 | 453.5 | 97.1 |
| 4. வங்கியல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு | | | | | | | | | | | | | |
| கடன்பெற்ற மொத்தத் தொகை .. | | 364.5(ஈ) | | | 324.0 | | | 287.8 | | | 359.2 | | |
| ஆழ்நிதிகளுக்கான உதவுதொகைகளை நீக்கி ... | | 67.5 | 297.0 | | 75.7 | 248.3 | | 85.3 | 202.5 | | 93.2 | 266.0 | 343.5 |
| 5. பண மிச்சங்களிலும், பண்ட உதவி இணைக் கிணை நிதிகளிலும் ஏற்பட்ட விழ்ச்சி ... | | | | | | | | | | | | | |
| (அ) பண மிச்சங்கள் ... | | 21.5 | | | -48.4 | | | 62.9 | | | -30.6 | | |
| அந்நிய உதவி இணைக்கிணை, நிதிகள் (மொத்தக் கொடுகடன்கள்) ... | -193.9 | | | -187.7(உ) | | | -318.7(உ) | | | -268.4(உ) | | | |
| வரவு செலவுத் திட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகைகள் நீக்கி ... | 150.0 | -43.9 | -22.4 | 200.0 | 12.3 | -36.1 | 367.0 | 48.3 | 111.2 | 273.4 | 5.0 | -25.6 | |
| 6. தேறிய பணக் குறை .. | | | 606.8 | | | 715 7 | | | 787.6 | | | 935.6 | — |
| 7. ஐ. நா. உதவி இணைக்கிணை நிதியின் வீழ்ச்சி | | | 27.2 | | | — | | | -0.3 | | | ... | 931.5 |
| 8. அரசாங்க நிதி இயக்கங்களின் தேறிய விரிவுத் தாக்கம் (3+5+7) .. | | | 56.1 | | | 267.4 | | | 179.0 | | | 427.9 | —<br>97.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) சய அடையாளம் விடயங்கள் 1-4ஐயும் 7யும் பொறுத்தவரையில் திருப்பிக் கொடுப்பனவையும், 5ஐயும் 7ஐயும் பொறுத்தவரையில் அதிகரிப்பையும் குறிக்கின்றது.

(ஆ) 1967/68 நிதியாண்டில் பொதுச் சட்டம் பி. எல். 480இன் கீழ்ப் பெறப்பட்ட ரூ. 289 இலட்சங்கொண்ட கடன்தொகை 1968/69 நிதியாண்டில் பெறப்பட்ட பண்ட உதவிகளாக அரசாங்கக் கணக்குகளில் வரவுவைக்கப்பட்டது. பொருத்தமான சீராக்கங்கள் செயயப்படின் இவ்விரு நிதிஆண்டுகளின் நிதித் தொழிற்பாடுகளின் விரிவுத் தாககம் முறையே ரூ. 2385 இலட்சமாகவும் ரூ. 2079 இலட்சமாகவும் அமையும்.

(இ) இவ்வெண் தொகைகள் வங்கிகள் கொண்டிருந்த அரசாங்க இறக்குமதி (உணவு) உண்டியல்களின் பெறுமதிகளைக் கணக்கில் எடுக்கவில்லை. இவ்வெளிநின்ற உணவு உண்டியல்களின் தொகை 1965, 1966, 1967, 1968ஆம் ஆண்டுகளின் செத்தெம்பர் இறுதியில், முறையே ரூ. 760 இலட்சம், ரூ. 1,223 இலட்சம், ரூ. 1,007 இலட்சம், ரூ. 924 இலட்சம் இருந்தன.

(ஈ) சேமிப்பு நிலையங்களும் அரசாங்க முகவர் நிலையங்களும் தங்களிடமிருந்து மத்திய வங்கிப் பிணைகளை மீளளித்த பின்பு இந்நிலையங்களாலும், முகவர்களாலும் கொள்வனவு செய்த 534 இலட்சம் ரூபாய் தொகைகொண்ட அரசாங்கப் பிணைகளையும் உள்ளடக்கும்

(உ) பண்டங்களாகப் பெறப்பட்ட சில நன்கொடைகள் இணைக்கிணை நிதியில் வரவு வைக்கப்பட்டமையால் 1967/68, 1968/69ஆம் நிதியாண்டுகளில், வெளிநாட்டு உதவி இணைக் கிணை நிதியில் வரவுவைக்கப்பட்ட எண்தொகைகள் பண்டக் கடன்களாகப் பெறப்பட்டவற்றிலிருந்து அதிகரித்துக் காணப்படுகின்றன.

நாட்டுச் சந்தையற்ற மூலங்களிலிருந்தும் (நிருவாகக் கடன்பாடுகள்) பெற்ற குறைவான தொகையுமே காரணமாகும். உள்நாட்டு வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வளங்கள் வங்கிக் கடன்பாட்டினைக் குறைக்க உதவின.

மொத்தத் தேறிய பணக்குறைவினது உள்ளடங்கிய விரிவு விகிதமானது, 1967/68இல் 37.4 சதவீதத்திலிருந்து 1968/69இல் 22.7 சதவீதத்துக்குக் குறைந்து 1969/70இல் 45.7 சதவீதமாகக் கணிசமானளவு கூடியது.

1969/70இல் அரசாங்கமானது தனது கடன் சுமையினை மத்திய வங்கியின் மூலம் ரூ. 3,760 இலட்சத்தாலும், வர்த்தக வங்கிகளின் மூலம் ரூ. 770 இலட்சத்தாலும் கூட்டிக்கொண்டது. மத்திய வங்கியிலிருந்த கடன் சென்ற ஆண்டினைவிட ரூ 2,620 இலட்சத்தால் கூர்மையாக அதிகரிக்க, வர்த்தக வங்கிகளின் இருந்த கடன் ரூ. 1,240[1] இலட்சத்தால் அதிகரித்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்கள் மத்திய வங்கி வசமுள்ள ரூ. 1,370 இலட்சம் கொண்ட அரசாங்கப் பிணைகளையும் ரூ. 197 இலட்சம் கொண்ட இறைசேரி உண்டியல்களையும், வெளிநின்ற மத்திய வங்கி முற்பணங்களில் ஏற்பட்ட ரூ 430 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்கின. வர்த்தக வங்கிகள் மூலமான கடன் சுமையானது, அரசாங்கப் பிணைகளினது ரூ 820 இலட்சம் அதிகரிப்பாலும், திறைசேரி உண்டியல் உடைமைகளின் ரூ. 80 இலட்சம் வீழ்ச்சியின் ஒரு பகுதியினை ஈடுசெய்த ரூ. 30 இலட்சம் வரி ஒதுக்குப் பத்திரத்தாலும் ஏற்பட்டதாகும்.

1969/70இல் வங்கியல்லா மூலங்களிலிருந்து, தேறிய உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடானது ரூ. 2,660 இலட்சமாக அமைந்திருந்தது. இது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1968/69இல் ஏற்பட்ட ரூ. 460 இலட்சம் வீழ்ச்சிக்கெதிராக ரூ.640 இலட்சம் அதிகரித்துக்காணப்பட்டது.

அட்டவணை II (ஊ) 10 வங்கியில்லா முதலீட்டுக் குழுக்களின் கடந்த நான்கு நிதியாண்டுகளின் தேறிய உதவுதொகையினை (அரசாங்கப் பிணை உடைமைகளின் மாற்றங்கள்) காட்டுகின்றது.

**அட்டவணை II (ஊ) 10**

**வங்கியல்லாத முதலீட்டுத் தொகுதிகளின்படி அரசாங்கப் பிணைகளுக்கான(அ) தேறிய உதவு தொகைகள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உதவுநர்கள் | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 | அதிகரிப்பு 1968/69 இலும் மேலாக 1967/68 | அதிகரிப்பு 1969/70 இலும் மேலாக 1968/69 |
|---|---|---|---|---|---|---|
| 1. சேமிப்பு நிறுவனங்கள் ... ... | 88.6(ஆ) | 41.5 | 0.6 | 11.0 | - 40.9 | 10.4 |
| 2. ஊழியர் சேமநிதி ... ... | 85.2 | 92.1 | 101.6 | 98.0 | 9.5 | - 3.6 |
| 3. ஏனைய சேம, இளைப்பாறற் சம்பள நிதிகள் ... | 41.3 | 30.2 | 28.6 | 46.1 | - 1.6 | 17.5 |
| 4. திணைக்கள ஏனைய அலுவலக நிதிகள் ... | 16.3(ஆ) | 7.0 | 3.7 | 5.4 | - 3.3 | 1.7 |
| 5. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் .. ... | 47.9 | 52.8 | 42.4 | 45.5 | - 10.4 | 3.1 |
| 6. ஏனைய காப்பு நிதிகள் ... ... | 0.1 | 4.2 | 3.5 | 8.8 | - 0.7 | 5.3 |
| 7. ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | - 0.7 | — | — | - 0.7 | — | - 0.7 |
| 8. கூட்டுநிலையங்களும், சங்கங்களும், நிறுவனங்களும் .. .. | -12.3 | - 1.6 | 5.6 | 5.6 | 7.2 | — |
| 9. தனியாட்கள் .. .. | 6.5 | 0.1 | - 3.2 | 10.5 | - 3.3 | 13.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்வட்டவணை, குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் கொண்டிருக்கும் ரூபாய்ப் பிணைகள், இறைசேரி உண்டியல்கள், வரியொதுக்குப் பத்திரங்கள் முதலியவற்றின் தேறிய மாற்றத்தைக் காட்டும்.

(ஆ) சேமிப்பு நிலையங்களும் அரசாங்க முகவர் நிலையங்களும் தங்கள் வசமிருந்த மத்திய வங்கிப் பிணைகளை மீள அளித்த பின்பு, இந்நிலையங்களாற் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 534 இலட்சங்கொண்ட அரசாங்கப் பிணைகளை உள்ளடக்கும்.

1. வர்த்தக வங்கிகளின் மூலமான கடன் சுமையினை அரசாங்கமானது, 1968/69இல் ரூ. 470 இலட்சத்தால் குறைக்க, 1969/70இல் ரூ. 770 இலட்சத்தால் இச்சுமையினைக் கூட்டியது.

1969/70இல் அரசாங்கத்தின் கடன் திட்டத்திற்கு, ஊழியர் சேமநிதியும், "ஏனைய கூட்டுத்தாபனங்களும்", முக்கியமாக இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தையும் தவிர வங்கியில்லாத துறைகளின் தேறிய உதவுதொகைகளில் பொதுவான அதிகரிப்பு ஏற்பட்டது. "ஏனைய சேம நிதிகளினதும் ஓய்வுகால நிதிகளினதும்" சேமிப்பு நிருவனங்களினதும், தனிபாட்களினதும் உதவுதொகைகளில் குறிப்பிடத்தக்க கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது.

இந்நிதியாண்டில் நிதித்தொழிற்பாட்டுக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டு நிதிஉதவிகளின் தொகை ரூ. 3,390 இலட்சமாகும், இதில் ரூ. 530 இலட்சம் செயற்றிட்டக் கடனுகவும், ரூ 2,290 இலட்சம் செயற்றிட்டமற்ற (பண்ட)க் கடனுகவும், ரூ. 570 இலட்சம்கொண்ட கடன்களாகவும் அமைந்துள்ளது. கடன்கரைப்பு நிதியத்துக்கும் மறுகொடுப்பனவுக்குமான வெளிநாட்டு உதவுதொகை ரூ. 2,200 இலட்சமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது ரூ. 3,540 இலட்சமாக அமைந்திருந்தது. உண்மையில் தேறிய செயற்றிட்டக் கடன் ரூ. 190 இலட்சமாக இருக்க, கடன்கரைப்பு நிதி உதவுதொகைகளும், மறுகொடுப்பனவுகளும் இவ்வாண்டிற்பெற்ற கடன்[1] தொகைகளிலும் அதிகமானதாக இருந்தது. எனினும், தேறிய செயற்றிட்டமற்ற (பண்ட) கடன்கள் ரூ. 1,830 இலட்சமும், ரூ. 570 இலட்சங்கொடைகளும் தேறிய திட்டக் கொடுப்பனவுகட்கு மேலாக ஈடு செய்யப்பட்டன.

சமீப ஆண்டுகளில் செயற்றிட்டமற்ற (பண்ட)க் கடன்களின் வெளிநாட்டு உதவி (பயன்பாடு) அதிகரித்த ஒரு பண்பினைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும், 1969/70இல் பண்டக்கடன் பெறுகை ரூ. 830 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 2,290 இலட்சமாக அமைந்தது. இது, இன்றும் தேறிய பணக்குறையில் 24 சதவீதமாகவே உள்ளது. 1969/70இன் வெளிநாட்டு நிதியானது, உறுப்பில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் கொண்டிருந்தது. அண்மை ஆண்டுகளில் வீழ்ச்சிக்குப் பின்னர், இவ்வாண்டின் வெளிநாட்டு நிதியில் இது 26 சதவீதமாக இருந்தது. எனினும், கடன்நிதியில், முன்னைய ஆண்டினைப்போல வெளிஉதவி ஒரு முக்கிய பங்காக அமைந்திருந்தது.

கடந்த எட்டாண்டுகளினது தேறிய வெளிநாட்டு நிதி உதவிப் பெறுகை வகை, கடந்த அடிப்படையில் அட்டவணை II (ஊ) 11 விவரமாகத் தருகின்றது.

---

1. 1969/70இலிருந்து மறுகொடுப்பனவுகள் வெ. செ. உ. சா. திட்டத்தின் வீதத்திற்கேற்பக் கொடுக்கப்பட்டமையினுல், உண்மைக் கடன் கொடுப்பனவு தேறிய கொடுப்பனவிலும் கூட்டிக்காட்டுகின்றது. ஆயினும், பெறுகை அதிகாரமான மாற்று வீதத்திலேயே பதியப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஊ) 11

## வெளிநாட்டு உதவிகளின் தேறிய வரவுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகையும் மூலமும் | 1962/63 | 1963/64 | 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 தற்காலிகமான |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1. கடன்கள்** ... | **60 9** | **63.5** | **75.6** | **76.5** | **189.3** | **161 2** | **334.1** | **203.0** அ |
| 1.01 ப. பு. அ. வ. ... | 21.2 | 11.3 | −5.0 | 1.2 | −0.3 | −7.7 | −8.4 | −9.3 |
| 1.02 ப. அ. ச. ... | — | — | — | — | — | — | — | 4.7 |
| 1.03 கனடா ... | 0.8 | −0.2 | 11.4 | 2.5 | 8.1 | 8.6 | 8.5 | 6.0 |
| 1.04 மக்கள் சீனக் குடியரசு ... | — | 12.4 | 18.9 | 9.7 | −4.9 | 5.5 | −5.5 | 4.8 |
| 1.05 ஐ. இ. ... | 10.4 | 4.9 | −2.3 | 10.6 | 49.4 | 51 9 | 37.0 | 38.2 |
| 1.06 அ. ஐ. நா. ... | −0.7 | 2.7 | −1.2 | 23.8 | 31.0 | 45.6 | 177.9 | 49.8 |
| 1.07 ஐ. சோ. ச. கு. ... | 13.5 | 32.0 | 28.8 | 9.3 | −10.0 | −8.3 | −9.6 | −9.2 |
| 1.08 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு ... | 11.5 | 0.4 | 7.4 | 6.7 | 66.2 | 25.0 | 17.4 | 29.3 |
| 1.09 யூகோசிலேவியா ... | 4.3 | ... | −0.3 | 0.8 | −1.4 | −0.7 | −0.8 | −0.4 |
| 1.10 போலாந்து ... | — | — | 2.4 | 0.1 | 0.1 | 1.4 | −0.6 | −0.9 |
| 1.11 பிரான்சு ... | — | — | 5.5 | 1.6 | 10.8 | 22.0 | 1.6 | 10.2 |
| 1.12 யப்பான் ... | — | — | — | 10.0 | 31.3 | 24.0 | 18.3 | 13.7 |
| 1.13 இந்தியா ... | — | — | — | 2.6 | 8.0 | −3.4 | 16.9 | 23.6 |
| 1.14 சேர்மன் சனநாயகக் குடியரசு ... | — | — | — | — | 1.1 | 8.3 | 79.6 | 28.3 |
| 1.15 தென்மாக்கு ... | — | — | — | — | — | — | 1.6 | 8.0 |
| 1.16 இத்தாலி ... | — | — | — | — | — | — | — | 6.3 |
| **2. நன்கொடைகள்** ... | **31.1** | **31.9** | **24.1** | **41.5** | **19.2** | **29.0** | **19.5** | **56.5** |
| 2.01 கொழும்புத் திட்டம் ... | 8.2 | 6.0 | 9.0 | 25.9 | 17.5 | 22.1 | 1.4 | 23.1 |
| 2.01.1 அவுத்திரேலியா | | | | | | | | |
| 2.01.2 கனடா ... | 2.5 | — | 3.9 | 0.3 | 4.6 | — | 0.1 | 4.8 |
| 2.01.3 யப்பான் ... | 5.7 | 5.7 | 5.1 | 25.6 | 12.8 | 22.1 | — | 15.9 |
| 2.01.4 நியூசிலாந்து ... | — | 0.3 | — | — | — | — | — | 2.4 |
| 2.02 ஏனைய ... | — | — | — | — | 0.1 | ... | 1.3 | — |
| 2.02.1 ஐக்கிய நாடுகள்... | **22.9** | **25.9** | **15.1** | **15.6** | **1.7** | **6.8** | **18.2** | **33.3** |
| 2.02.2 மக்கள் சீனக் குடியரசு ... | — | — | — | 1.0 | 1.5 | 6.3 | 3.1 | 2.0 |
| 2.02.3 அ. ஐ. நா. ... | 19.7 | 24.5 | 15.1 | 2.5 | — | ... | ... | 4.7 |
| 2.02.4 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு ... | 0.9 | 1.4 | ... | 12.1 | 0.2 | 0.5 | 0.8 | 6.6 |
| 2.02.5 செக்கோசிலவாக்கியா ... | 2.3 | — | ... | — | — | — | — | 6.4 |
| 2.02.6 ஐக்கிய இராச்சியம் | — | — | — | — | ... | — | — | — |
| **3. மொத்தக் கடன்களும்** ... | — | — | — | — | ... | ... | 14.3 | 13.6 |
| **நன்கொடைகளும்** ... | **92.0** | **95.4** | **99.7** | **118.0** | **208 6** | **190.2** | **353.6** | **259.5** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இந்த மொத்தக் கடன் எண்தொகைகள் தொடர்புடைய பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 30 உடன் ஒப்பிடக்கூடியதன்று. வெ. செ. உ. சா. சென்மதிபான வெளிக்கடன் மறு கொடுப்பனவான ரூ. 392 இலட்சம் இவ்வட்டவணையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

## 8. பொதுப்படுகடன்

1969/70 ஆம் நிதியாண்டில் மொத்தப்படுகடன் ரூ. 9,850 இலட்சத்தால் ரூ. 78,730 இலட்சத்துக்கு (அரசாங்கத் திணைக்களங்களினது நிரப்பலர் கொடுகடன் பொறுப்புக்களையும் சேர்த்தால் இத்தொகை ரூ, 79,320 இலட்சமாகும்) அதிகரித்தது. வெளிநின்ற மொத்தப் பொதுப்படுகடனில் ரூ. 62,950 இலட்சம் அல்லது 80 சதவீதம் உள்ளூர்க் கடன்பாடாகவும் மீதி (ரூ, 15,780 இலட்சம் அல்லது 20 சதவீதம்) வெளிநாட்டுக்கடன்பாடாகவும் விளங்கிற்று. தேறிய பொதுப்படுகடன்* ரூ. 9,980 இலட்சத்தால் ரூ. 72,370 இலட்சத்துக்கு அதிகரித்தது.

பொதுப்படுகடனின் அமைப்பையும் அதன் உடைமையையும் பற்றிய விவரங்கள் பின்னிணைப்பு II இன் அட்டவணை 37, 38 இற் காட்டப்பட்டுள்ளன. அதன் சுருக்கம் கீழே அட்டவணை II (ஊ) 12 இற்றரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஊ) 12

மொத்தப் பொதுப்படுகடன் 1966-1970 (அ)

| செத்தெம்பர் இறுதியிலுள்ளபடி | 1966 | | 1967 | | 1968 | | 1969 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % |
| 1. மொத்தப் படுகடன் | 4,743.3 | 100.0 | 5,321.5 | 100.3 | 6,270.8 | 100.0 | 6,888.5 | 100.0 | 7,873.2 | 100.0 |
| 1.1 வெளிநாட்டு | 548.8 | 11.6 | 739.3 | 13.9 | 1,074.3 | 17.1 | 1,375.5 | 20.0 | 1,578.4 | 20.1 |
| 1.2 உள்நாட்டு | 4,194.5 | 88.4 | 4,582.2 | 86.1 | 5,196.5 | 82.9 | 5,513.0 | 80.0 | 6,294.8 | 79.9 |
| 2. தேறிய கடன் (ஆ) | 4,267.6 | 100.0 | 4,782.3 | 100.0 | 5,689.3 | 100.0 | 6,238.9 | 100.0 | 7,236.8 | 100.0 |
| 2.1 உள்நாட்டு | 521.1 | 12.2 | 708.0 | 14.8 | 1,038.3 | 18.3 | 1,337.3 | 21.4 | 1,550.9 | 21.4 |
| 2.2 வெளிநாட்டு | 3,746.5 | 87.8 | 4,074.3 | 85.2 | 4,651.0 | 81.7 | 4,901.6 | 78 6 | 5,685.9 | 78.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) பின்வருவன நீங்கலாக:- (i) செத்தெம்பர் இறுதியில் ரூ. 1,160 இலட்சம் ரூ. 322 இலட்சமாக விளங்கிய தேசிய வீடமைப்பு, அரசு ஈட்டு வங்கி முறிகள். (ii) நிரப்பலர் கொடுகடன் கீழ் அரசாங்கத் திணைக்களங்களில் கடன்பாடாகிய ரூ. 591 இலட்சம் (iii) பன்னாட்டு நிதி நிறுவனங்களின் சார்பில் வெளியிடப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள்.

(ஆ) மொத்தக் கடனில் ஸ்டேர்லிங், ரூபாக் கடன்களையொட்டிய கடன்கரைப்பு நிதியம் தொகைகள் நீங்கலாக.

* அதாவது மொத்தப் பொதுப்படுகடனில ரூபாக் கடன், கடன்கரைப்பு நிதியத் தொகைகளும் ஸ்டேர்லிங் கடன், கடன்கரைப்பு நிதியத் தொகைகளும் நீங்கலாக.

ஆய்வுக்குரிய நிதியாண்டில் மொத்தப் படுகடனிலும், தேறிய படுகடனிலும் ஏற்பட்ட முறையே ரூ. 9,850 இலட்சம், ரூ. 9,980 இலட்சம்கொண்ட அதிகரிப்பு, முந்திய நிதியாண்டிற் பதிவுசெய்யப்பட்ட முறையே ரூ. 6,180 இலட்சம், ரூ. 5,900 இலட்சத்தைவிட மிகையாகவிருந்தது. 1969/70 நிதியாண்டில் அதிகரித்த ரூ. 9,850 இலட்சங்கொண்ட மொத்தக் கடனில் ரூ. 7,820 இலட்சம் (அல்லது 80 சதவீதம்) உள்நாட்டுக் கடன்பாட்டினாலும் ரூ. 2,030 இலட்சம் (அல்லது 20 சதவீதம்) வெளிநாட்டுக் கடன்பாட்டாலும் பெறப்பட்டது. இதற்கு முந்திய நிதியாண்டில் மொத்தப் படுகடனில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பங்குகள் முறையே ரூ. 3,170 இலட்சம், 3,010 இலட்சமாக விளங்கின. இதனால் 1969/70 மொத்தப்படுகடனில் ஏற்பட்ட ரூ. 7,820 இலட்சங்கொண்ட அதிகரிப்பு முந்திய நிதியாண்டிலேற்பட்ட அதிகரிப்பைவிடக் கணிசமானளவு கூடுதலாகவிருந்தது. இதே நேரத்தில் 1969/70 இன் வெளிநாட்டுக் கடன்பாட்டிலேற்பட்ட ரூ. 2,030 இலட்சங்கொண்ட அதிகரிப்புக்கு முந்திய நிதியாண்டின் அதிகரிப்பைவிட மிகக் குறைவாகவிருந்தது.

**உள்நாட்டுப் படுகடன்**

1969/70 நிதியாண்டின் இறுதியில் ரூ. 62,950 இலட்சமாக விளங்கிய மொத்த உள்நாட்டுப் படுகடன் முந்திய நிதியாண்டைவிட ரூ. 7,820 இலட்சம் அதிகரிப்பைக் காட்டியது. கடந்த நான்கு ஆண்டுகளின் செத்தெம்பர் மாதவிறுதியில் உள்நாட்டுப் படுகடனின் அமைப்பையும் அதன் மாற்றத்தையும் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 13 காட்டுகின்றது.

**அட்டவணை II (ஊ) 13**

**உள்நாட்டுப் பொதுப்படுகடனினது அமைப்பின் மாற்றங்கள் 1966-1970**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செத்தெம்பர் இறுதியிலுள்ளபடி | ரூபாக் கடன்கள் | | | இறைசேரி உண்டியல்கள் | வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | மத்திய வங்கி முற்பணங்கள் (ஆ) | தேசிய அபிவிருத்தி முறிகள் (இ) | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | கடன் கரைப்பு நிதியம் (அ) | தேறிய | | | | | மொத்தம் | தேறிய |
| 1966 ... | 2,474.6 | 448.0 | 2,026.6 | 1,425.0 | 32.2 | 262.6 | 0.1 | 4,194.5 | 3,746.5 |
| 1967 ... | 2,784.8 | 507.8 | 2,276.9 | 1,500.0 | 25.7 | 271.6 | 0.1 | 4,582.2 | 4,074.3 |
| 1968 .. | 3,117.9 | 545.5 | 2,572.4 | 1,750.0 | 24.0 | 304.5 | 0.1 | 5,196.5 | 4,651.0 |
| 1969 .. | 3,409.1 | 611.4 | 2,797.7 | 1,750.0 | 24.5 | 329.3 | 0.1 | 5,513.0 | 4,901.6 |
| 1970 ... | 3,924.9 | 608.9 | 3,316.0 | 1,950.0 | 45.4 | 374.4 | 0.1 | 6,294.8 | 5,685.9 |
| 1967/66 மாற்றம் | + 310.2 | + 59.8 | + 250.3 | + 75.0 | — 6.5 | + 9.0 | — | +387.7 | +327.8 |
| 1968/67 மாற்றம் | + 333.1 | + 37.7 | + 295.5 | + 250.0 | — 1.7 | + 32.9 | — | +614.3 | +576.7 |
| 1969/68 மாற்றம் | + 291.2 | + 65.9 | + 225.3 | — | + 0.5 | + 24.8 | — | +316.5 | +250.6 |
| 1970/69 மாற்றம் | + 515.8 | — 2.5 | + 518.3 | + 200.0 | + 20.9 | + 45.1 | — | +781.8 | +784.3 |

(அ) கடன்கரைப்பு நிதியத்தின் பேரில் வைக்கப்பட்ட முதலீட்டங்களின் சந்தைப் பெறுமதியைக் குறிக்கும் (துணைக் கடன்கரைப்பு நிதியங்களும் உட்பட)

(ஆ) பன்னாட்டு நாணய நிதி, பன்னாட்டு புனருத்தாரன அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிற்கு உறுப்புரிமைக் கட்டணங்களைக் கொடுப்பதற்கென வழங்கப்பட்ட சிறப்புக் கடன்களும் உட்பட. 1969, செத்தெம்பர் இறுதியிலும், 1970 செத்தெம்பர் இறுதியிலும் முறையே ரூ. 894 இலட்சம் ரூ. 920 இலட்சமாக விளங்கிய இக்கடன்கள் நீங்கலாக, 1969/70இல் மத்திய வங்கி முற்பணங்கள் ரூ. 426 இலட்சத்தால் அதிகரித்தன. இச்சிறப்புக் கடன்கள் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களை தவிர்க்கின்றன.

(இ) 1969 செத்தெம்பர் இறுதியில் வெளியிடப்பட்டு வெளிநின்ற தேசிய அபிவிருத்தி முறிகளின் பெறுமதி ரூ. 5,88,280 இலட்சமாகும். இத்தொகை 1970 செத்தெம்பர் இறுதியிலும் மாற்றமுறாதிருந்தது.

மொத்த உள்நாட்டுப் படுகடனின் அதிகரிப்பாகிய ரூ. 7,820 இலட்சமானது. ரூபாக் கடன்களிலேற்பட்ட ரூ. 5,160 இலட்சம் அதிகரிப்பையும், இறைசேரி உண்டியல்களிலேற்பட்ட ரூ. 2,000 இலட்சம் அதிகரிப்பையும், வரி ஒதுக்குப் பத்திரங்களிலேற்பட்ட ரூ. 210 இலட்சம் அதிகரிப்பையும், மத்திய வங்கி முற்பணங்களிலேற்பட்ட ரூ. 450 இலட்சம் அதிகரிப்பையும் கொண்டுள்ளது, முந்திய ஆண்டில் உள்நாட்டுப் படுகடனிலேற்பட்ட ரூ. 3,170 இலட்சங்கொண்ட அதிகரிப்பு ரூ. 2,910 இலட்சங்கொண்ட ரூபாக் கடனின் அதிகரிப்பையும், ரூ. 250 இலட்சங் கொண்ட மத்திய வங்கி முற்பணங்களின் அதிகரிப்பையும், வரி ஒதுக்குப் பத்திரங்களிலேற்படட எல்லையளவான அதிகரிப்பையும் கொண்டுள்ளது.

1970 செத்தெம்பர் 30 இல் முடிவடையும் நிதியாண்டில் வெளிநின்ற உள்நாட்டுக் கடன்பாட்டின் அமைப்பில் எதுவித குறிப்பிடத்தக்க மாற்றமும் ஏற்படவில்லை. ரூபாப் பிணைகளின் பங்கு 62 சதவீதத்தில் மாற்றமுறாதிருக்க, இறைசேரி உண்டியல்களின் பங்கு 32 சதவீதத்திலிருந்து 31 சதவீதத்துக்கு சிறிதளவால் குறைவுற்றது. இதேவேளையில் மத்திய வங்கி முற்பணங்களினதும், வரி ஒதுக்குப் பத்திரங்களினதும் விகிதங்களின் மாற்றம் புறக்கணிக்கத்தக்கனவாகவிருந்தது.

### அட்டவணை II (ஊ) 14
### உள்நாட்டுப் படுகடன் — முதிர்ச்சியின்படியான பகுப்பாய்வு
( செத்தெம்பர் இறுதியிலுள்ளபடி )

| முதிர்ச்சியாண்டுகள் | 1966 | | 1967 | | 1968 | | 1969 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் |
| 1. நிதியீட்டப்படாத படுகடன் (அ) | 1,719.9 | 41.0 | 1,797.3 | 39.2 | 2,078.6 | 40.0 | 2,103.8 | 38.2 | 2,369.9 | 37.6 |
| 2. நிதியீட்டப்பட்ட கடன் (ஆ) | 2 474.6 | 59.0 | 2,784.8 | 60.8 | 3,117.9 | 60.0 | 3,408.6 | 61.8 | 3,924.9 | 62.4 |
| 2.1 முதல் 5 ஆண்டுகள் | 292.1 | 7.0 | 330.6 | 7.2 | 452.1 | 8.7 | 534.9 | 9.7 | 491.1 | 7.8 |
| 2.2 5 முதல் 10 ஆண்டுகள் | 354.4 | 8.4 | 289.6 | 6.3 | 315.7 | 6.1 | 235.8 | 4.3 | 383.2 | 6.1 |
| 2.3 10 முதல் 15 ஆண்டுகள் | 386.0 | 9.2 | 386.0 | 8.4 | 249.1 | 4.8 | 247.0 | 4.5 | 534.6 | 8.5 |
| 2.4 15 முதல் 20 ஆண்டுகள் | 324.1 | 7.7 | 421.8 | 9.2 | 600.0 | 11.5 | 795.0 | 14.4 | 1,047.4 | 16.6 |
| 2.5 20 முதல் 25 ஆண்டுகள் | 1,118.0 | 26.7 | 1,356.8 | 29.6 | 1,501.0 | 28.9 | 1,595.9 | 29.0 | 1,468.5 | 23.3 |
| 3. மொத்தம் | 4,194.5 | 100.0 | 4.582.1 | 100.0 | 5,196.5 | 100.0 | 5,512.4 | 100.0 | 6,294.8 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இறைசேரி உண்டியல்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள், மத்திய வங்கி முற்பணங்கள், தேசிய அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

(ஆ) முதிர்ச்சியின் அண்மைத் திகதியிலுள்ளபடி.

1970 செத்தெம்பர் இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடனின் முதிர்ச்சிப் பகுப்பாய்வினை, முந்திய நான்கு நிதியாண்டுகளின் ஒப்பீடு சார்ந்த தரவுகளுடன் மேழுள்ள அட்டவணை II (ஊ) 14 எடுத்துக்காட்டுகின்றது.

1969/70 இல் நிதியீட்டப்பட்ட படுகடனுக்கு (ரூபாப் பிணைகளையே முற்றிலும் கொண்டவை) நிதிமீட்டப்படாத படுகடனின் (பெரும்பாலும் இறைசேரி உண்டியல்களைக் கொண்டவை) விகிதம் முந்திய நான்கு நிதியாண்டுகளைப்போல் ஏறக்குறைய 2 : 3 ஆக விளங்கிற்று. எனினும், நிதியீட்டப்படாத படுகடனின் பங்கு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளதெனத் தோன்றுகின்றது (1969 செத்தெம்பர் இறுதியிலிருந்த 41 சதவீதத்திலிருந்து 1970 திசெம்பர் இறுதியில் 38 சதவீதத்துக்கு வந்துள்ளது). 5 ஆண்டுக் குறைந்த முதிர்ச்சியைக் கொண்ட பிணைகளினதும், 20–25 ஆண்டுகள் முதிர்ச்சியைக் கொண்ட பிணைகளினதும் பங்கும் வீழ்ச்சியுற்று வந்துள்ளது. இதேவேளையில் 5-20 ஆண்டுகள் வரையான முதிர்ச்சியைக் கொண்ட பிணைகளின் பங்கு அதிகரித்துள்ளது. இது 1969/70 இல் வளங்களைத் திரட்டுவதற்காக நீண்டகாலத் தவணைக் கடன்களின் வெளியீட்டுக்குப் பதிலாக நடுத்தவணைக் கடன்களின் வெளியீட்டைக் கையாண்டதன் விளைவினுலாகும். பிணைகளின் முதிர்ச்சி ஓர் ஒழுங்குமுறையற்றதால், குறுகிய நடுத்தரத் தவணைக் கடன்களை ஒழுங்காக வெளியிடுவதன்மூலம் படுகடனின் திருப்பிக் கொடுப்பனவுக் காலப் பகுதியை நீட்டுவதற்குப் போதிய இடமிருக்கின்றதெனச் சென்றுண்டறிக்கை எடுத்துக்காட்டிற்று.[1] ஆய்வுக்குரிய காலத்தில் நீண்ட காலக் கடன்களுக்குப் பதிலாகக் குறுகிய, நடுத்தவணைக் கடன்கள் வெளியிடப்பட்டபோதும், இக்கடன்களை மேலும் வெளியிடுவதற்கு இடமிருக்கின்றதெனக் கூறலாம்.

**(அ) ரூபாப் பிணைகள்**

1969/70 நிதியாண்டில் ரூ. 5,790 இலட்சத்தைக் கொண்ட 15 அரசாங்கக் கடன்கள் திரட்டப்பட்டன. இத்தொகையில் ரூ. 270 இலட்சம் 3 மாற்றுக் கடன்களாற் பெறப்பட்டது. முந்திய நிதியாண்டில் ரூ. 3,400 இலட்சங் கொண்ட பதினெரு அரசாங்கக் கடன்கள் திரட்டப்பட்டன (1968/69இல் மாற்றற் கடன்கள் இருக்கவில்லை). 1969/70 இல் அரசாங்கக் கடன்களுக்குக் கிடைத்த கணிசமானளவு அதிகரித்த தொகை வர்த்தக வங்கிகளினுலும்[2], சேமிப்புத் தாபனங்களினுலும்[3] வழங்கப்பட்ட அதிகரித்த தொகைகளினுலாகும். இவை முறையே ரூ. 1,180 இலட்சத்தையும் (அல்லது 20 சதவீதம்) ரூ. 1,560 இலட்சத்தையும்[4] (அல்லது 27 சதவீதம்) வழங்கின. ஏனைய முக்கிய உதவுநர்கள் ஊழியர் சேமநிதி (ரூ. 980 இலட்சம் அல்லது 17 சதவீதம்) கடன்கரைப்பு நிதியம் (ரூ. 830 இலட்சம் அல்லது 14 சதவீதம்) நம்பிக்கைச் சொத்துக்கள் இளைப்பாறற் சம்பளம் ஊழியர் சேமநிதி தவிர்ந்த சேமநிதிகள் (ரூ. 540 இலட்சம் அல்லது 9 சதவீதம்) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (ரூ. 460 இலட்சம் அல்லது 8 சதவீதம்) ஆகியனவாகும்.

1969/70 இல் திரட்டப்பட்ட ஒவ்வொரு ரூபாக் கடனுக்குமான உதவு தொகைகள் பின்னிணைப்பு II இன் அட்டவணை 40 இற்றரப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளாகத் திரட்டப்பட்ட ரூபாக் கடன்களுக்கான உதவு தொகைகளை அட்டவணை II (ஊ) 15 சுருக்கமாகத் தருகின்றது.

---

1. 1969ஆம் ஆண்டறிக்கை பக்கம் 180.

2. ரூ. 1,250 இலட்சங்கொண்ட வெளிநின்ற உணவு (இறக்குமதி) உண்டியல்களை அரசாங்கம் தீர்ப்பனவு செய்ததால் வங்கித் துறை 1982 - 85 'எப்' தொடர் அரசாங்கக் கடனுக்கு ரூ. 1,180 இலட்சத்தையே வழங்கியது.

3. அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியையும், இலங்கைச் சேமிப்பு வங்கியையும் சேமிப்புச் சான்றிதழ் நிதியையும் உள்ளடக்கும்.

4. இத்தொகையில் ரூ. 1,555 இலட்சம் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியினுல் வழங்கப்பட்டது. ரூ. 1440 இலட்சங்கொண்ட குறைந்த வருவாயை உடைய பிணைகளை மத்திய வங்கிக்கு விற்பனை செய்ததால் அ. அ. சே. வ. ரூ 1,400 இலட்சங்கொண்ட தொகையை 1882 – 85 'எப்' தொடர் அரசாங்கக் கடனுக்கு வழங்க முடிந்தது.

## அட்டவணை II (ஊ) 15

## ரூபாப் பிணைகளுக்கான உதவுதொகையின் பகுப்பு (அ)

| உதவுநர்கள் | 1966/67 | | 1967/68 | | 1968/69 | | 1969/70 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | சத வீதம் | தொகை ப.இ.ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் |
| **1. வங்கித்துறை ...** | **13.5** | **3.5** | **0.8** | **0.2** | **0.6** | **0.2** | **117.5** | **20.3** |
| 1.1 வர்த்தக வங்கிகள் ... | 13.5 | 3.5 | 0.8 | 0.2 | 0.6 | 0.2 | 117.5 | 20.3 |
| **2. வங்கியல்லாத்துறை ...** | **377.3** | **96.5** | **358.9** | **99.7** | **339.4** | **99.8** | **461.7** | **79.7** |
| 2.1 சேமிப்பு நிறுவனங்கள் ... | 74.6 | 19.1 | 48.8 | 13.6 | 36.0 | 10.6 | 156.1 | 26.9 |
| 2.2 கடன்கரைப்பு நிதியம் .. | 96.3 | 24.6 | 114.1 | 31.7 | 111.8 | 32.9 | 83.0 | 14.3 |
| 2.3 திணைக்களங்களும் ஏனைய அரசாங்க நிதிகளும் ... | 10.2 | 2.6 | 9.5 | 2.6 | 8.4 | 2.5 | 6.2 | 1.1 |
| 2.4 ஊழியர் சேமநிதி ... | 85.0 | 21 8 | 92.6 | 25.7 | 101.3 | 29.8 | 97.9 | 16.9 |
| 2.5 காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 47.9 | 12.3 | 53.2 | 14.8 | 42.5 | 12.5 | 45.5 | 7.9 |
| 2.6 தனியார் சேமநிதிகளும் ஓய்வுநிதிகளும் ... | 43.1 | 11.0 | 29.2 | 8.1 | 36.8 | 10.8 | 53.9 | 9.3 |
| 2.7 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 10.6 | 2.7 | 4.4 | 1.2 | 0 6 | 0.2 | 16.1 | 2.8 |
| 2.8 ஏனைய கூட்டுநிலையங்கள் ... | 0.3 | 0.1 | 0.8 | 0.2 | 0.2 | 0.1 | 0.6 | 0.1 |
| 2.9 தனியார்களும், சங்கங்களும் நிறுவனங்களும்... | 9.2 | 2.3 | 6.6 | 1.8 | 1.5 | 0.4 | 2.5 | 0.4 |
| **3. மொத்தம்** | **390.8** | **100.0** | **395.7** | **100.0** | **340.0** | **100.0** | **579.2** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கும்.

முந்திய ஆண்டுகளிற் பெறப்பட்ட வீழ்ச்சிப் போக்குக்கு மாறாக 1969/70 இல் ரூபாக் கடன்களின் மூலம் அரசாங்கம் திரட்டிய வளங்கள் மிகவும் கூர்மையாக அதிகரித்தன. இதற்குக் காரணம் முந்திய நான்காண்டுகளில் படிப்படியாக அரசாங்கப் பிணைகளின் கொள்வனவைக் குறைத்து வந்த வங்கித் துறை[1] இம்முறை அதிக உதவு தொகையை வழங்கியமையாகும். 1968/69 இல் ரூ. 360 இலட்சத்தை வழங்கிய சேமிப்புத் தாபனங்களும் 1969/70 இல் தங்களுடைய உதவுதொகைகளை ரூ. 1,560 இலட்சத்துக்கு[2] அதிகரித்தன இதற்கிடையில் வங்கியல்லாத் தனியார் துறையின் உதவுதொகைகள் 1968/69 இன் ரூ. 390 இலட்சத்திலிருந்து 1969/70 இல் ரூ. 730 இலட்சத்துக்கு அதிகரித்தன. வங்கியல்லாத் தனியார் துறையினுல் வழங்கப்பட்ட அதிகரித்த உதவுதொகைகள் முக்கியமாகத் தனியார் நம்பிக்கைச் சொத்துக்கள், உபகார இளைப்பாறற் சம்பளங்கள் சேமநிதிகள் (ஊழியர் சேமநிதி தவிர்த்து) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன. பல்லாண்டுகளாக (1968/69இல் ஏற்பட்ட குறைவைவிட) தங்கள் உதவுதொகைகளை அதிகரித்து

1. ரூ. 1,250 இலட்சங்கொண்ட வெளிநின்ற உணவு (இறக்குமதி) உண்டியல்களை தீர்ப்பனவு செய்ததால் வங்கித்துறை 1982 – 85 'எப்' தொடர் அரசாங்கக் கடனுக்கு ரூ 1,180 இலடசத்தை வழங்கியது

2. இத்தொகையில் ரூ. 1,155 இலட்சம் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியினுல் வழங்கப்பட்டது. ரூ. 1,440 இலட்சங்கொண்ட குறைந்த வருவாயை உடைய பிணைகளை மத்திய வங்கிக்கு விற்பனை செய்ததால் அ. அ. சே. வ ரூ, 1,400 இலட்சங்கொண்ட தொகையை 1882 - 85 'எப்' தொடர் அரசாங்கக் கடனுக்கு வழங்க முடிந்தது.

வந்த அரசாங்கச் சார்புடைய தாபனங்கள் (ஊழியர் சேமநிதி, கடன் கரைப்பு நிதியம், நீண்ட தவணைக் கொடுகடன் நிலையங்கள், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், திணைக்கள; அலுவலக நிதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன). *1969/70* நிதியாண்டில் தங்கள் உதவுதொகைகளில் ரூ. *890* இலட்சங்கொண்ட கூரிய அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இது முக்கியமாக சேமிப்புத் தாபனங்களின் உதவுதொகைகளிலேற்பட்ட அதிகரிப்பினலாகும். ரூபாக் கடன்களுக்கான இத்துறையின் உதவுதொகையின் பங்கு *1968/69*இன் *88* சதவீதத்திலிருந்து *1969/70*இல் *67* சதவீதத்துக்குக் குறைவுற்றபோதும், முந்திய ஆண்டுகளைப்போல் இது தொடர்ந்தும் மிக முக்கிய உதவுநராக விளங்கிற்று. *1970* செத்தெம்பர் *30*இல் ரூபாப் பிணைகளின் உடைமையாளர்களை முந்திய நான்கு நிதியாண்டில் ஒப்பீடு சார்ந்த தரவுகளுடன் பின்வரும் அட்டவணை II (ஊ) *16* காட்டுகின்றது.

**அட்டவணை II (ஊ) 16**

**ரூபாப் பிணைகளின் உடைமைகள் — 1965/66 – 1969/70 (அ)**

**ஆண்டுகளின் இறுதியிலுள்ளபடி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 |
|---|---|---|---|---|---|
| **1. வங்கித் துறை** .. | **324.5** | **281.2** | **328.8** | **367 0** | **586.0** |
| 1.1 மத்திய வங்கி .. | 8.0 | 7.4 | 70.0 | 111.8 | 249.0 |
| 1.2 வர்த்தக வங்கிகள் ... | 316.4 | 273.7 | 258.8 | 255.3 | 337.0 |
| **2. வங்கியல்லாத்துறை** ... | **2,150.2** | **2,503.6** | **2,789.0** | **3,042.0** | **3,338.9** |
| 2.1 சேமிப்பு நிறுவனங்கள் .. | 511.6 | 600.5 | 641.2 | 641.7 | 6[illegible]1.5 |
| 2.2 கடன் கரைப்பு நிதியம் .. | 407.0 | 474.2 | 532.3 | 614.1 | 696.2 |
| 2.3 திணைக்கள ஏனைய அலுவலக நிதிகள் | 123.8 | 140.0 | 147.1 | 150.8 | 156.2 |
| 2.4 ஊழியர் சேமநிதி ... | 434.8 | 519.8 | 612.1 | 713.5 | 811.4 |
| 2.5 ஏனைய சேமநிதிகள் ... | 322.9 | 364.3 | 394.5 | 423.2 | 469.3 |
| 2.6 காப்புறுதிக் கூட்டுத்தாபனம் .. | 133.8 | 181.6 | 234.5 | 276.9 | 322.4 |
| 2.7 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 136.6 | 136.5 | 140 7 | 139.0 | 149.8 |
| 2.8 ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 3.5 | 2.9 | 2.9 | 2 9 | 2.2 |
| 2.9 ஏனையவை (ஆ) .. | 76.3 | 83.8 | 83.7 | 79.8 | 79.8 |
| 3. மொத்தம் ... | **2,474.6** | **2,784.8** | **3,117.9** | **3,409.1** | **3,924.9** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கும்

(ஆ) கூட்டுறவு வங்கிகள், ஏனைய கூட்டுநிலையங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், தனியார் ஆகியவற்றை உள்ளடக்கும்.

ஆய்வுக்குரிய நிதியாண்டின் முடிவில் மக்கள் வசமிருந்த ரூபாப் பிணைகள் ரூ. *39,250* இலட்சமாக விளங்கி ரூ. *5,160* இலட்சம் அல்லது *15* சதவீத அதிகரிப்பைக் காட்டின. இவ்வதிகரிப்பில் வங்கித் துறை ரூ. *2,190* இலட்சத்துக்கு வகைகூற, வங்கியல்லாத் துறை ரூ. *2,970* இலட்சத்துக்குப் பொறுப்பாகவிருந்தது.

*1969/70* நிதியாண்டில் மத்திய வங்கி தனது உடைமைகளை ரூ. *1,370* இலட்சத்தால் அதிகரித்திருக்க வர்த்தக வங்கிகள் தங்கள் ரூபாப் பிணைகளின் உடைமைகளை ரூ. *820* இலட்சத்தினுல் அதிகரித்துள்ளன. புதிய அரசாங்கப் பங்குகளில் முதலீட்டம் செய்வதற்கு உதவும் வகையில் மத்திய வங்கி அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியிலிருந்து ரூ. *1,440* இலட்சம் பெறுமதியுள்ள (ஆண்டு இறுதியில் முதிர்ச்சியடைந்த பங்குகளினுல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டன) பிணைகளைக் கொள்வனவு செய்ததனுல் மத்திய வங்கி உடைமைகள் அதிகரித்தன. இதனுல் ஆய்வுக்குரிய ஆண்டிலும் அரசாங்க ரூபாக் கடன்

களுக்கு உதவிபுரிவதென்ற (மறைமுகமாகவெனினும்) கொள்கையை மத்திய வங்கி தொடர்ந்து கடைப்பிடித்துவந்தது. வர்த்தக வங்கிகள் வசமிருந்த உடைமைகளினுலேற்பட்ட அதிகரிப்பு ஒரு வர்த்தக வங்கி 1982/85 'எப்' தொடர் அரசாங்கக் கடனுக்கு ரூ. 1,180 இலட்சம் கொண்ட தொகையை வழங்கியதனுலாகும். இத்தொகை நிதியாண்டில் முதிர்ச்சியடைந்த பங்குகளினுல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. இதற்கு மாருக, முந்திய நான்கு நிதியாண்டுகளில் வர்த்தக வங்கிகள் ரூபாப் பிணைகளின் கையிருப்புக்களைப் படிப்படியாகக் குறைத்து வந்துள்ளன.

வங்கியல்லாத் துறையில், சேமிப்பு நிலையங்கள், கடன்கரைப்பு நிதியம், ஊழியர் சேமநிதி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றைக் கொண்ட அரசாங்கச் சார்புடைய தாபனங்கள் ரூபாக் கடன்களின் பெரும் பங்கைக் கொண்டிருந்தன. இவ்வாண்டில் சேமிப்புத் தாபனங்களின்[1] உடைமைகளிலேற்பட்ட அதிகரிப்பு, ஏனைய அரசாங்கச் சார்புடைய தாபனங்களுடன் ஒப்பிடுமிடத்து புறக்கணிக்கத் தக்கதாகவே அமைந்துள்ளது.

### (ஆ) இறைசேரி உண்டியல்கள்

1970 செத்தெம்பர் இறுதியில் வெளியிடப்பட்டதும் வெளிநின்றதுமான இறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை ரூ. 19 500 இலட்சமாக விளங்கி இவ்வாண்டில் ரூ. 2,000 இலட்சங் கொண்டவோர் அதிகரிப்பைப் பதிவுசெய்தது முந்திய ஆண்டில் இறைசேரி உண்டியல்களின் வெளியீட்டில் எதுவித தேறிய அதிகரிப்பும் ஏற்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட இறைசேரி உண்டியல்களின் வெளியீட்டெல்லை 1969/70 நிதியாண்டில் ரூ. 19,500 இலட்சத்தில் மாற்றமுருதிருந்தது.

பின்னிணைப்பு II இன் அட்டவணை 41இல் இறைசேரி உண்டியல்களின் வெளியீடு பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. 1970 செத்தெம்பர் இறுதியில் இறைசேரி உண்டியல்களின் உடைமை அமைப்பினை முந்திய நான்கு நிதியாண்டுகளின் ஒப்பீடு சார்ந்த தரவுகளுடன் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 17 தருகின்றது.

**அட்டவணை II (ஊ) 17**

**இறைசேரி உண்டியல்களின் உடைமை — 1965/66 - 1969/70 ஆம் ஆண்டுகளின் இறுதிகளிலுள்ளபடி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 |
|---|---|---|---|---|---|
| 1. **வங்கித்துறை** .. | **1,369.3** | **1,456.7** | **1,682.2** | **1,691.4** | **1,880.3** |
| 1.1 மத்திய வங்கி .. | 1,257.9 | 1,377.2 | 1,586.3 | 1,637.3 | 1,833.8 |
| 1.2 வர்த்தக வங்கிகள் .. | 111.4 | 79.5 | 95.9 | 54.1 | 46.5 |
| 2. **வங்கியல்லாத்துறை** .. | **55.7** | **43.3** | **67.8** | **58.6** | **69.7** |
| 2.1 கடன்கரைப்பு நிதியம் .. | 42.9 | 36.6 | 60.3 | 41.4 | 55.3 |
| 2.2 ஊழியர் சேமநிதி .. | — | 0.3 | — | 0.3 | 0.3 |
| 2.3 ஏனைய சேமநிதி .. | 0.2 | 0.1 | 0.1 | .. | .. |
| 2.4 சேமிப்பு நிறுவனங்கள் .. | 0.4 | 0.2 | 1.1 | 1.3 | 2.4 |
| 2.5 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. | 5.8 | 6.0 | 6.0 | 11.2 | 8.9 |
| 2.6 ஏனையவை (அ) . | 6.4 | 0.1 | 0.3 | 4.5 | 2.8 |
| 3. மொத்தம் .. | **1,425.0** | **1,500.0** | **1,750.0** | **1,750.0** | **1,950.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) கூட்டுறவு வங்கிகள், ஏனையகூட்டு நிலையங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் தனியாட்களைக் கொண்டவை.

1. இலங்கைச் சேமிப்பு வங்கி, அஞ்சல் அலுவலகச்சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ் நிதி.

ரூ. 2,000 இலட்சங்கொண்ட அதிகரிப்பில் வங்கித்துறை ரூ. 1,890 இலட்சத்துக்கு வகைகூற, வங்கியல்லாத்துறை ரூ. 110 இலட்சத்துக்கு வகைகூறிற்று. வங்கித் துறையில் மத்திய வங்கியின் உடைமைகள் ரூ. 1970 இலட்சத்தால் அதிகரித்திருக்க, வர்த்தக வங்கிகளினது உடைமைகள் ரூ. 80 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. வங்கியல்லாத் துறையைப் பொறுத்தமட்டில் இறைசேரி உண்டியல்களின் உடைமைகளிலேற்பட்ட குறிப்பிடத்தக்க முக்கிய மாற்றம் கடன் கரைப்பு நிதியத்தையொட்டியதாகும். இறைசேரி உண்டியல்களுக்கான சந்தை மத்திய வங்கியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அதன் இறைசேரி உண்டியல் உடைமைகள் 1965/66 இன் இறுதியிலிருந்து ரூ. 12,580 இலட்சத்திலிருந்து 1969/70 இறுதியில் ரூ. 18,340 இலட்சத்துக்கு அதிகரித்துள்ளது.

நிதியாண்டின் தொடக்கத்தில் இறைசேரி உண்டியல்களின் வீதம் ஆண்டுக்கு 3.64 சதவீதமாக இருந்தது. இவ்வீதம் 1970 பெப்புருவரி 15இல் ஆண்டுக்கு 4.76 சதவீதம் வரை படிப்படியாக உயர்ந்து 1970 செத்தெம்பர் இறுதி வரை அம்மட்டத்திலேயே இருந்தது. இறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் உதவிவீதம் 1969/70 நிதியாண்டு முற்றிலும் ஆண்டுக்கு 3.24 சதவீதமாக விளங்கிற்று.

### (இ) வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

அனுமதிக்கப்பட்ட தொகையாகிய ரூ. 4,000 இலட்சத்தில் 1970 செத்தெம்பர் இறுதிவரை வெளியிடப்பட்ட வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தொகை ரூ. 3,540 இலட்சமாகும். அத்திகதியில் கையளிக்கப்படாத தொகையின் மொத்தம் ரூ. 450 இலட்சமாகும். முந்திய நிதியாண்டிற் கையளிக்கப்படாத தொகை ரூ. 250 இலட்சமாகும். ஆகையால் இவ்வகையின் மூலம் பெற்ற கடன்பாடு இந்நிதியாண்டில் ரூ. 210 இலட்சம் அதிகரித்தது. வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் முதல் வெளியீடாகிய 1957ஆம் ஆண்டிற்குப் பின்னர் இவ்வதிகரிப்பே எந்தவொரு நிதியாண்டுக்குமான மிகக் கூடிய அதிகரிப்பாகவும், கையளிக்கப்படாத தொகையைப் பொறுத்தமட்டில் இதுவே மிகக் கூடிய தொகையாகவும் விளங்கிற்று.

நிதியாண்டின் தொடக்கத்தில் 2 சதவீதமாக[1] விளங்கிய வட்டி வீதம் 1970 மாச்சு 31ஆந் திகதி தொடக்கம் 3 சதவீதத்துக்கு உயர்த்தப்பட்டது.

### (ஈ) மத்திய வங்கி முற்பணங்கள்

நாணய விதிச் சட்டத்தின் 89 ஆம் பிரிவின் கீழ் 1969/70 ஆம் நிதியாண்டில் அரசாங்கத்துக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மத்திய வங்கியின் தொகை ரூ. 450 இலட்சமாகும். இது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இலங்கை உறுப்புரிமைக் கட்டணமாக வழங்கவேண்டிய தொகையாகிய ரூ. 25 இலட்சங்கொண்ட சிறப்புக் கடனையும் உள்ளடக்கும். முந்திய நிதியாண்டில் மத்திய வங்கியின் முற்பணங்கள் ரூ. 250 இலட்சமாக விளங்கின.

1970 செத்தெம்பர் இறுதியில் வழங்கப்பட்ட இம் முற்பணங்களின் தொகை ரூ. 3,740 இலட்சமாகும். முந்திய ஆண்டின் இறுதியில் இத்தொகை ரூ. 3,290 இலட்சமாகும். பன்னாட்டு நாணய நிறுவனங்களுக்குச் செலுத்த

---

1. இவ்வீதம் 1968 செத்தெம்பர் 7 ஆந் திகதியிலிருந்து புகுத்தப்பட்டது.

வேண்டிய உறுப்புரிமைக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக வங்கியால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட தொகை 1969 செத்தெம்பர் இறுதியிலும் 1970 செத்தெம்பர் இறுதியிலும், முறையே ரூ. 890 இலட்சமாகவும் ரூ. 920 இலட்சமாகவும் விளங்கிற்று.

**வெளிநாட்டுப் படுகடன்**

1970 செத்தெம்பர் இறுதியில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன் (கூட்டு மொத்தம்)[1] ரூ. 15,780 இலட்சமாகும். 1969/70 ஆம் நிதியாண்டில் மொத்த வெளிநாட்டுப் படுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ரூ. 1,880 இலட்சமாகும் (வெளிநாட்டுப் படுகடனை ரூ. 150 இலட்சத்தால் அதிகரித்த 1969 ஒற்றோபர் 26ஆந் திகதி நடைமுறைக்கு வந்த டொச் மார்க் நாணய மதிப்பேற்றம் நீங்கலாக) ஒப்பிடுகையில் முந்திய ஆண்டில் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 3,060 இலட்சமாகும். இத்தொகை பிரான்சிய பிராங் நாணய மதிப்பிறக்கத்தைக் கணக்கிலெடுக்க முன்பாகும் (இது இலங்கையின் படுகடனை ரூ. 50 இலட்சத்தாற் குறைத்தது).

1969/70 நிதியாண்டிற் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மொத்தம் ரூ. 2,830 இலட்சமாகும். இதனில் ரூ. 610 இலட்சம் (அல்லது 22 சதவீதம்) திட்டக் கடன்களாகவும், ரூ. 2,210 இலட்சம் (அல்லது 78 சதவீதம்) திட்டமல்லா (பண்ட)க் கடன்களாகவும் விளங்கின, முந்திய ஆண்டிலே திட்டக் கடன்கள் மூலமும், திட்டமல்லா (பண்ட)க் கடன்கள் மூலமும் பெற்ற வளங்கள் முறையே ரூ. 940 இலட்சமாகவும் ரூ. 2,830 இலட்சமாகவும் விளங்கின. ஆகையால் ஆய்வுக்குரிய ஆண்டில் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவி முந்திய ஆண்டினைவிடக் கணிசமானளவு குறைவாகவிருந்தது.

1969/70 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவுகள் ரூ. 940 இலட்சமாக விளங்கின. இதனில் ரூ. 180 இலட்சம் (அல்லது 19 சதவீதம்) ஸ்டேர்லிங் கடன்களாகவும் ரூ. 460 இலட்சம் (அல்லது 49 சதவீதம்) திட்டக் கடன்களாகவும், ரூ. 300 இலட்சம் (அல்லது 32 சதவீதம்) திட்டமல்லா (பண்ட)க் கடன்களாகவும் விளங்கின. மீளக் கொடுப்பனவுகள் நீங்கலாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1,880 இலட்சத்தால் அதிகரித்தது. ஸ்டேர்லிங் கடன் கடன்கரைப்பு நிதியத்திலேற்பட்ட ரூ. 110 இலட்சங்கொண்ட குறைவையும், டொச் மார்க் நாணய மதிப்பேற்றத்தால் இலங்கைப் படுகடனிலேற்பட்ட ரூ. 150 இலட்சங்கொண்ட அதிகரிப்பையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கும்போது தேறிய வெளிநாட்டுப் பொறுப்பு ரூ. 2,140 இலட்சத்தால் அதிகரித்தது. முந்திய ஆண்டில் மீளக்கொடுப்பனவு நீங்கலான வெளிநாட்டுக் கடன்பாடும் ரூ. 3,060 இலட்சமாக விளங்கின. 1968/69இல் ஸ்டேர்லிங் கடன்கரைப்பு நிதியத்திலேற்பட்ட ரூ. 20 இலட்சம் அதிகரிப்பும், பிரான்சிய பிராங்கின் நாணய மதிப்பிறக்க விளைவும் (இது வெளிநாட்டுப் படுகடனை ரூ. 50 இலட்சத்தால் குறைத்தது) நீங்கலாக, தேறிய வெளிநாட்டுப் பொறுப்பு ரூ. 2,990 இலட்சம் அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

எடுப்பனவுகள், மீளக் கொடுப்பனவுகள் வெளிநாட்டுப் படுகடனில் பொறுப்புக்கள் ஆகியன கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 18 இற்றரப்பட்டுள்ளன.

---

1. மீளக்கொடுப்பனவுகள் நீங்கலாக (ஸ்டேர்லிங் கடன் கரைப்பு நிதியத்துக்கான உதவுதொகை தவிர்த்தது)

## அட்டவணை II (ஊ) 18

## வெளிநாட்டுக் கடன்கள்

(ப. இ. ரூ.)

| மூலங்களின் வகை | 1969/70 இல் எடுப்பனவுகள் | 1969/70 இல் மீளக் கொடுப்பனவுகள் | 1969/70 இல் அதிகரிப்பு | 1970 செத்தெபர் 30இல் உள்ளபடியான பொறுப்பு |
|---|---|---|---|---|
| **1. ஸ்டேர்லிங் கடன்கள்** | — | **17.9** | **17.9** | **71.4(அ)** |
| **2. திட்டக் கடன்கள்** | **61.2** | **46.3** | **14.9** | **521.5** |
| 2.01 ப. பு. அ. வ. | — | 9.3 | —9.3 | 146.7 |
| 2.02 சேர்மன் சனநாயகக் குடியரசு | 30.2 | 1.9 | 28.3 | 117.7 |
| 2.03 ஐ. ச. சோ. கு. | 0.6 | 9.8 | —9.2 | 75.7 |
| 2.04 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ஆ) | 14.7 | 5.9 | 8.8 | 66.5 (ஊ) |
| 2.05 கனடா (இ) | 1.9 | 5.2 | —3.3 | 34 2 |
| 2.06 சீன மக்கட் குடியரசு | — | 5.5 | —5.5 | 28.8 |
| 2.07 ஐ. அ. நா. (ஈ) | — | 1.5 | —1.5 | 22.6 |
| 2.08 தென்மாக்கு | 8.0 | — | 8.0 | 9.6 |
| 2.09 பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம் | 4.7 | — | 4.7 | 4.7 |
| 2.10 ஐக்கிய இராச்சியம் | 0.1 | 3.2 | —3.1 | 3.9 |
| 2.11 நாசனல் அன்ட் கிறின்லேசு பாங்க் | — | — | — | 3.1 |
| 2.12 போலாந்து மக்கட் குடியரசு | — | 0.9 | —0.9 | — |
| 2.13 யூகோசிலாவிய மக்கட் கூட்டாட்சிக் குடியரசு | 1.0 | 1.4 | —0.4 | 2.6 |
| 2.14 பிரான்சு | — | 1.7 | —1.7 | 1.5 |
| **3. திட்டமல்லா (பண்ட)க் கடன்கள்** | **221.3** | **30.2** | **191.1** | **985.5** |
| 3.01 ஐ. அ. நா. (உ) | 53.2 | 1.9 | 51.3 | 377.3 |
| 3.02 ஐக்கிய இராச்சியம் | 45.5 | 1.0 | 44.5 | 220.5 |
| 3.03 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ஆ) | 20.2 | — | 20.2 | 135.8 (ஊ) |
| 3.04 யப்பான் | 25.7 | 12.0 | 13.7 | 107.8 |
| 3.05 பிரான்சு | 23.2 | 11.3 | 11.9 | 50.5 |
| 3.06 இந்தியா | 27.6 | 4.0 | 23.6 | 50.5 |
| 3.07 கனடா | 9.3 | — | 9.3 | 26.8 |
| 3.08 சீன மக்கட் குடியரசு | 10.3 | — | 10.3 | 10.3 |
| 3.09 இத்தாலி | 6.3 | — | 6.3 | 6.3 |
| **4. கூட்டு மொத்தம்** | **282.5** | **94 4** | **188.1** | **1578.4(அ)** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அ. இத்தொகையில் ரூ. 275 இலட்சம் ஸ்டேர்லிங் கடன் கடன்கரைப்பு நிதிகளால் நிதியீட்டப்படுகின்றன.

ஆ. கிறடிற்றன்டோல்ற் பேர் விடரூேபு கடன்களை உள்ளடக்கும்.

இ. ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கொடுகடன்களை உள்ளடக்கும்.

ஈ. (1) பன்னாட்டுக் கூட்டுறவு நிருவாகம் (2) அபிவிருத்திக் கடன் நிதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

உ. பன்னாட்டுக் அபிவிருத்திக்கான முகவரிடமிருந்து பெறப்படும் கடன்களையும் பொ. ச. 480 கடன்களையும் உள்ளடக்கும்.

ஊ. டொச் மார்க் நாணய மதிப்பேற்றம் செய்ததன் விளைவாலேற்பட்ட அதிகரித்த பொறுப்புகளையும் உள்ளடக்கும்.

### (அ) ஸ்டேர்லிங் கடன்கள்

முந்திய நிதியாண்டின் இறுதியிலிருந்த ரூ. 890 இலட்சத்துடன் ஒப்பிடும்போது 1969/70 நிதியாண்டு இறுதியில் ஸ்டேர்லிங் கடன்களின் பேரில் வெளிநின்ற மொத்தப் படுகடன் ரூ. 710 இலட்சமாகும். பொறுப்புக்களிலேற்பட்ட வீழ்ச்சி இலங்கையின் 5 சதவீத 1969 — 70 பங்குகளைத் திருப்பிக் கொடுப்பனவு செய்ததனாலாகும்.

**(ஆ) திட்டக் கடன்கள்**

1969/70இல் பயன்படுத்தப்பட்ட திட்டக் கடன்கள் ரூ. 610 இலட்சமாகும். ரூ. 460 இலட்சங்கொண்ட மீளக் கொடுப்பனவுகள் நீங்கலாக, திட்டக் கடன்களின் கீழ்ப் பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பு ரூ. 150 இலட்சமாகும். இதற்கெதிர்மாருக முந்திய ஆண்டில் ரூ. 940 இலட்சங் கொண்ட வரவுகளில் ரூ. 450 இலட்ச மீளக் கொடுப்பனவு நீங்கலாகப் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு ரூ. 490 இலட்சமாகும்.

ஆய்வுக்குரிய காலப்பகுதியின் இறுதியிற் பயன்படுத்தப்பட்ட திட்டக் கடன்களின் வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 5,220 இலட்சமாக விளங்கின. இது வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 33 சதவீதமாகும். முந்திய நிதியாண்டில் இக்கணக்கில் வெளிநின்ற தொகை ரூ. 5,020 இலட்சம் அல்லது அவ்வாண்டில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 36 சதவீதமாகும். திட்டக் கடன்களையொட்டி வெளிநாட்டுப் பொறுப்பு களிலேற்பட்ட ரூ. 200 இலட்சங்கொண்டவோர் அதிகரிப்பு பொறுப்புக் களை ரூ. 50 இலட்சத்தால் அதிகரிக்கச் செய்த டொச் மார்க்கின் நாணய மதிப்பேற்றத்தையும் உள்ளடக்கும்.

**(இ) திட்டமல்லாப் பண்டக் கடன்கள்**

பண்ட உதவித் திட்டத்தின் கீழ் 1969/70 இற் பயன்படுத்தப்பட்ட தொகை முந்திய ஆண்டின் ரூ. 2,830 இலட்சத்துக்கெதிராக ரூ. 2,210 இலட்சமாக விளங்கிற்று. மீளக் கொடுப்பனவுகள் நீங்கலாக 'பண்ட உதவி' திட்டத்தின் கீழ்ப் பெறப்பட்ட கடன் பொறுப்புக்களின் அதிகரிப்பு ரூ. 1,910 இலட்சமாகும்.

1969/70 நிதியாண்டில் பண்ட உதவித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு :

ஐ. அ. நா. — வணிக ஊர்திகள், இழுபொறிகள், பொறிகள், கோதுமை மா, உர வகைகள் ஆகியன.

ஐ. இ. — உரம், பொறியியற் களஞ்சியங்கள், உந்து உறுப்புக்கள், மூலப் பொருட்கள், இழுபொறிகள், பொறிகள், சீட்டுப் பொறிகள், கப்பற் பொறிகள், ரயர்கள், கட்டடப் பொருட்கள், உந்து ஈருருளிகள், கோதுமை மா ஆகியன.

சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு — உரம், உந்து உறுப்புக்கள், பொறி, வணிக ஊர்திகள், கோதுமை மா ஆகியன.

யப்பான் — வணிக ஊர்திகள், இழுபொறிகள், மீன்பிடி வலைகள், பொறிகள், உரங்கள், உந்து ஈருருளிகள், ரயர்கள், ரியூப்புக்கள், மூலப்பொருட்கள், அடிப்படை உலோகங்கள் ஆகியன.

பிரான்சு — இழுபொறிகள், பொறிகள், உரங்கள், வணிக ஊர்திகள், சீட்டுப் பொறிகள், உந்து உறுப்புக்கள், மின்சார உறுப்புக்கள், பொறியியற் களஞ்சியங்கள், அடிப்படை உலோகங்கள், ரயர்கள், ரியூப்புக்கள் ஆகியன.

இந்தியா — வணிக ஊர்திகள், மின்சார உறுப்புக்கள், தந்தித் தொடர்பு உறுப்புக்கள், உந்து உறுப்புக்கள், பொறிகள், குழாய்கள், பொறியியற் களஞ்சியங்கள் ஆகியன.

கனடா — செய்தித்தாள், கன்னர்த் தும்பு, கோதுமை மா ஆகியன.

சீன மக்கட் குடியரசு — அரிசி.

இத்தாலி — உரங்களும் உந்து உறுப்புக்களும்.

1969/70 நிதியாண்டின் இறுதியில் திட்டமல்லா (பண்ட)க் கடன்களின் பேரில் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களின் தொகை ரூ. 9.860 இலட்சமாகும். முந்திய நிதியாண்டின் இறுதியில் இத்தொகை ரூ. 7,850 இலட்சமாகும். திட்டமல்லா (பண்ட)க் கடன்களின் பேரில் ஏற்பட்ட வெளி நாட்டுப் பொறுப்புக்களின் ரூ. 2,010 இலட்ச அதிகரிப்பு, கடன்பாட்டை ரூ. 100 இலட்சத்தால் அதிகரித்த டொச் மார்க்கின் மதிப்பேற்றத்தையும் உள்ளடக்குகின்றது.

ஆய்வுக்குரிய ஆண்டில் இலங்கை அரசாங்க வெளிநாட்டு உதவி இணைக் கிணை நிதிக்கு[1] ரூ. 2,690 இலட்சம் வரவு வைக்கப்பட்டு ரூ. 2,710 இலட்சம் எடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இதனுல இந்நிதியாண்டில் நிதியின் வெளி நின்ற நிலுவை ரூ. 20 இலட்சத்தாற் குறைவுற்றது. முந்திய நிதியாண்டுக் குரிய தொடர்பான எண்தொகைகள், வரவுகள் ரூ. 2,820 இலட்சம் எடுப் பனவுகள் ரூ. 3,670 இலட்சம் நிதி நிலுவையின் வீழ்ச்சி ரூ. 850 இலட்சம் ஆகியன. திட்டமல்லா (பண்ட)க் கடன்களின் கீழ்ப் பெறப்பட்ட இறக்குமதி களின் பேரில் உண்டாக்கப்பட்ட ரூபா நிதிகளின் தரவுகளும் வரவுசெலவு நோக்கங்களுக்காக அவற்றிலிருந்து செய்த பயன்பாடும் பின்னிணைப்பு II இன் அட்டவணை 42 இற்றரப்பட்டுள்ளன.

**கடன்கரைப்பு நிதியம்**

1970 செத்தெம்பர் இறுதியில் ஸ்டேர்லிங் கடன், கடன்கரைப்பு நிதியத் தினதும், ரூபாக் கடன்கரைப்பு நிதியத்தினதும் ஏறக்குறைய சந்தைப் பெறு மதி முறையே ரூ. 280 இலட்சமும், ரூ. 6,090 இலட்சமுமாகும். முந்திய நிதியாண்டில் இவை முறையே ரூ. 380 இலட்சமும் ரூ. 6,110 இலட்சமு மாகவிருந்தன.

ரூ. 170 இலட்சங்கொண்ட 1960 — 70, 5 சதவீத இலங்கைப் பங்குகளை மீளக் கொடுப்பனவு செய்ததன் விளைவாக ஸ்டேர்லிங் கடன், கடன்கரைப்பு நிதியங்களின் சந்தைப் பெறுமதி ரூ. 110 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இப்பெறுமதி வீழ்ச்சி, புதிய உதவுதொகைகளை (ரூ. 10 இலட்சம்) முதலீட் டம் செய்ததனுலும் முந்திய முதலீட்டங்களிலிருந்து பெற்ற வட்டி வருவா யாலும் (ரூ. 10 இலட்சம்) முந்திய முதலீட்டங்களின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பாலும் (ரூ. 30 இலட்சம்) ஓரளவு ஈடுசெய்யப்பட்டது.

1. பின்னிணைப்பு II இன் அட்டவணை 42 உக்குரிய அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

இதே காலப் பகுதியில் ரூபாக் கடன், கடன் கரைப்பு நிதியத்தின் சந்தைப் பெறுமதி கடன்களின் மீளக் கொடுப்பனவுகளாலும்,[1] (ரூ. 370 இலட்சம்) முந்திய முதலீட்டங்களின் தேய்வுகளினாலும் (ரூ. 910 இலட்சம்) ரூ. 30 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி புதிய உதவுதொகைகளின் முதலீட்டங்களினாலும் (ரூ. 930 இலட்சம்) முந்திய முதலீட்டங்களிலிருந்து பெற்ற வட்டி வருவாய்களாலும் (ரூ. 320 இலட்சம்) ஓரளவு ஈடு செய்யப்பட்டது.

## 9. அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களிற் பெறப்பட்ட கடன்பாடு

### தேசிய வீடமைப்பு நிதி

1969/70 இலே தேசிய வீடமைப்பு முறிகளினால் எதுவித கடன்பாடும் இருக்கவில்லை. இந்நிதியாண்டில் வெளியிடப்பட்டு வெளிநின்ற மொத்தத் தேசிய வீடமைப்பு முறிகளின் தொகை ரூ. 1,160 இலட்சமாகும். முறிகளின் அனுமதிக்கப்பட்ட வெளியீட்டெல்லையாகிய ரூ. 2,200 இலட்சம் மாற்றமுறாதிருந்தது. தேசிய வீடமைப்பு முறிகளை மீட்பதற்காகத் தொடக்கப்பட்ட கடன் கரைப்பு நிதியங்களின் சந்தைப் பெறுமதி ஓரளவு குறைவுற்று, ஆண்டு இறுதியில் ரூ. 450 இலட்சமாக விளங்கிற்று.

1969/70 நிதியாண்டில் அரசாங்கம் தேசிய வீடமைப்புத் திணைக்களத்துக்கு ரூ. 260 இலட்சத்தை நேரடிக் கடனாக வழங்கிற்று. இதனால் இவ்வாண்டு இறுதியில் இத்தகைய கடன்களின் தொகை ரூ. 1810 இலட்சமாக விளங்கிற்று.

### அரச ஈட்டு வங்கி

1969/70 நிதியாண்டில் அரசு ஈட்டு வங்கி முறிகளின் வெளியீடொன்றும் இருக்கவில்லை. இதனால் வெளியிடப்பட்டு வெளிநின்ற முறிகளின் தொகை ரூ. 320 இலட்சமாகவிருந்தது.

இந்நிதியாண்டில் வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற மேலதிக எடுப்பனவுகள்[2] ரூ. 424 இலட்சத்திலிருந்து ரூ. 425 இலட்சத்துக்குச் சிறிதளவால் அதிகரித்தன. இத்தொகை வெளிநின்ற முறிகளின் தொகையாகிய ரூ. 320 இலட்சத்துடன் சேர்ந்து 1970 செத்தெம்பர் இறுதியில் அரசு ஈட்டு வங்கியின் கடன்பாட்டை ரூ. 750 இலட்சத்துக்குக் கொண்டுவந்தது. இதனால் இவ்வாண்டு முழுவதும் மாற்றமுறாதிருந்த கடன்பாட்டு எல்லையாகிய ரூ. 760 இலட்சத்தில் ரூ. 10 இலட்சம் பயன்படுத்தப்படாத தொகையாக விளங்கிற்று.

---

1. குறிப்பிடப்பட்ட கடன்களாவன, (I) 1967 – 70 3 சதவீத வெற்றிக் கடனும் (ரூ. 230 இலட்சம்) பின் வருவனவற்றின் மாற்றப்படாத பங்குகளும் (II) 1967 - 69 3½ சதவீதக் கடன் (ரூ. 30 இலட்சம்) (III) 1967 - 69 'பீ' தொடர் 3½ சதவீதக் கடன் (ரூ. 60 இலட்சம்) (IV) 1968 - 70 3½ சதவீதக் கடன் (ரூ. 50 இலட்சம்).

2. அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 73ஆம் பிரிவின் கீழ் எல்லா மேலதிகப் பற்றுக்களும் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன.

## 10. வரவுசெலவுத்திட்டம் 1970/71

நிதியாண்டு 1970/71இற்குரிய வரவுசெலவுத்திட்டம், 1970 ஒற்ரோபர் 25இல் நாடாளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு 1970 திசெம்பர் 31இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சென்ருண்டுபோலில்லாமல் 1970 ஒற்ரோபர் 1இல் தொடங்கும் நிதியாண்டிற்குரிய வரவுசெலவுத்திட்டம் குறித்த நிதியாண்டு தொடங்கிய பின்பே ஒப்படைக்கப்பட்டது. 1970, மேயில் ஆட்சியை ஏற்ற புதிய அரசாங்கம் தனது வரவுசெலவுத்திட்டத்தை உருவாக்கக்கூடிய காலந் தேவைப்பட்டதே இதற்குக் காரணமாகும். ஒற்ரோபரில் தொடங்கித் திசெம்பர் வரைக்குமான காலப்பகுதியின் செலவு கணக்கின்மீதான வாக்கினுல் அனுமதிக்கப்பட்டு நாடாளுமன்றத்தினுல் நிறைவேற்றப்பட்டது.

வரவுசெலவுதிட்டத்திற் கூறப்பட்ட புதிய விதந்துரைகளையும் நினைவிற் கொண்டு, வரவுசெலவுத்திட்டத்தின் முதன்மைப் பண்புகள் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 19இற் சுருக்கித்தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஊ) 19**

**மூல வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் — 1970/71**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு முந்தியது | மூல வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|
| **1. மீண்டெழுஞ் செலவு** (வாக்குகள் 1,2,4, உம் 6 உம்) ... | **2,823** | **2,913** |
| கழிவு செலவின் கீழ் 2½% சதவீதம் ... | 71 | 73 |
| | 2,752 | 2,840 |
| **2. மூலதனச் செலவு** ... | **1,379** | **1,389** |
| (வாக்குகள் 3, 5, உம் 7உம்) | | |
| கழிவு. மதிப்பிடப்பட்ட செலவிற்கு 15 சதவீதங் குறைவு ... | 169 | 171 |
| | 1,290 | 1,218 |
| **3. மொத்தச் செலவு** ... | **3,962** | **4,058** |
| **4. மொத்த வருவாய்** ... | **2,520** | **2,878** |
| **5. வரவு செலவுத்திட்டக் குறைவு** ... | **1,442** | **1,180** |
| கழிவு. கடன்கரைப்பு நிதியம் மற்றும் இன்னோரன்னவைக்குரிய செலுத்துதொகை .. | 249 | 249 |
| **6. தேறிய பணக் குறை** ... | **1,193** | **932** |
| **7. வரவு செலவுத்திட்டக் குறைவிற்கு நிதியீட்டம் செய்தல்** | | |
| 7.1 வங்கிகளில்லாத மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | | 445 |
| 7.2 வெளிநாட்டு நிதி .. | | 638 |
| 7.2.1 திட்டக் கடன்கள் ... | | 113 |
| 7.2.2 திட்டமல்லா (பண்ட)க் கடன்கள் ... | | 525 |
| 7.3 நிரப்பமுடியா இடைவெளி (வங்கிக் கடன்பாடு ... | | 97 |
| **8. தேறிய பணக்குறையை நிதியீட்டஞ் செய்தல்** | | |
| 8.1 வங்கியல்லாத மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | | 343 |
| 8.2. வெளிநாடு நிதி ... | | 491 |
| 8.2.1. திட்டக் கடன்கள் ... | | 29 |
| 8.2.2. திட்டமல்லா (பண்ட)க் கடன்கள் ... | | 465 |
| 8.3 நிரப்பமுடியாத இடைவெளி (வங்கிக் கடன்பாடு) ... | | 97 (ஆ) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) கடன்கரைப்பு நிதிச் செலுத்துதொகைகள் கழிக்கப்பட்டு பொதுப்படுகடனில் நேரடி மீளக் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட மூலதனச் செலவிலேயே மதிப்பிடப்பட்ட செலவின் குறைவு கணக்கிடப்படுகிறது.

(ஆ) குழுநிலையிலேற்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கும்.

மேலேயுள்ள அட்டவணையின் 'வரவுசெலவுத்திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகளின்' பத்தி நிரல், வரவுசெலவுத்திட்ட உரைக்கு முன் நாடாளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட மாதிரி மதிப்பீடுகளில் உள்ள வருவாய் செலவு விதந்துரைகளைச் சுருக்கித் தருகின்றது. இன்றைய வரியிறுப்பு வீதங்களால் கிடைக்கக்கூடிய மொத்த வருவாயை இது காட்டுகின்றது. அதேவேளையில் புதிய மூலதனத் திட்டங்களை உள்ளடக்கிய, புதிய நிதியாண்டிற்குரிய அரசாங்கத்தின் ஏறக்குறைய முழுமையான செலவுத்திட்டத்தைச் செலவு எண்தொகைகள் பிரதிபலிக்கின்றன.

'மூல வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின்' அடைப்புக்கோடு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி மதிப்பீடுகளில் உள்ள வருவாய், செலவையும் நிதியீட்ட விதந்துரைகள் ஆகியவற்றையும் காட்டுகிறது. வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய வருவாய் ஏற்பாடுகளையும் வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ்த் திட்டத்தின் கீழ்ச் சீனியை இறக்குமதி செய்ய அரசாங்கம் செய்த முடிவினால் ஏற்பட்ட மொத்தச் செலவையும் கணக்கிலெடுத்த மொத்த வருவாயை இது தருகின்றது. அத்துடன் வரவுசெலவுத்திட்டத்தின் குழுநிலையில் செலவு மதிப்பீடுகளில் செய்யப்பட்ட திருத்தங்களையும் இது உள்ளடக்குகின்றது. இந்த அடைப்புக்கோடு பணக்குறையை நிதியீடு செய்ய அரசாங்கம் பயன்படுத்த வேண்டிய மூலவளங்களையும் காட்டுகின்றது.

புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கிய 1970/71இற்குரிய வருவாய் ரூ. 28,780 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மூல வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலும் பார்க்க ரூ. 440 இலட்சம் அதிகரிப்பையும், சென்ற நிதியாண்டின் உண்மை வருவாயிலும் பார்க்க ரூ. 1,420 இலட்சம் அதிகரிப்பையும் எடுத்துக்காட்டுகிறது. அதேவேளையில் எதிர்பார்க்கப்பட்ட குறைச்செலவிற்கெனச் சீராக்கஞ்செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூ. 40,580 இலட்சமாக விளங்கியது. இது மூல வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலும்பார்க்க ரூ. 2,650 இலட்சம் அதிகரிப்பையும், சென்ற நிதியாண்டின் உண்மைச் செலவு எண்தொகையிலும் பார்க்க ரூ. 1,720 இலட்சம் அதிகரிப்பையும்காட்டிற்று.

1970/71இற்குறிய ரூ. 11,800 இலட்சங்கொண்ட வரவுசெலவுத்திட்டப் பணக்குறை, மூலமதிப்பீடுகளிலும்பார்க்க ரூ. 2,210 இலட்சம் அதிகரிப்பையும் சென்ற நிதியாண்டின் உண்மைப் பணக்குறையிலும்பார்க்க ரூ. 300 இலட்சம் அதிகரிப்பையும் காட்டிற்று. வரவுசெலவுத்திட்டத்திலுள்ள ரூ. 11,800 இலட்சங்கொண்ட பணக்குறை, உள்நாட்டு வங்கியல்லாத சந்தைக் கடன்பாட்டினால் ரூ. 4,450 இலட்சம், திட்டமல்லா (பண்ட)க் கடன்களால் ரூ 5,250 இலட்சத்தினாலும், திட்ட உதவியினால் ரூ. 1,130 இலட்சத்தினாலும் நிதியீட்டஞ் செய்யப்படும். நிரப்பப்படாத இடைவெளியான ரூ. 970 இலட்சம் உள்நாட்டு வங்கிகள் வாயிலாகப் பெற்ற கடன்பாடுகளை இறைசேரி உண்டியல்கள் வழங்குவதினால் நிரப்பப்படும்.

வரவுசெலவுத்திட்டத்திலேற்பட்ட பணக்குறையை நிதியீட்டஞ்செய்ய உள்நாட்டு வங்கிகளல்லாத அங்காடி மூலங்களிலிருந்து பெறப்படவிருக்கும் ரூ.4,450 இலட்சத்தில் வரவுசெலவுத்திட்டத்திற் குறிக்கப்பட்ட சில ஏற்பாட்டு வழிவகைகளால் ரூ. 1,700 இலட்சத்தைப் பெறவேண்டியிருக்கிறது. அவை யாவன கட்டாய சேமிப்புத்திட்டமும், ஊழியர் சேமநிதிச் சட்டத்திற்குத் திருத்தங்களும், அரசாங்கப் பிணைகளில் ஒரு வட்டி வீத அதிகரிப்புமேயாகும். மதிப்பிடப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன்பாடாகிய ரூ. 6,380 இலட்சமே எந்தவோராண்டிற்கும் பயன்படுத்தப்பட்ட மிக உயர்ந்த வெளிநாட்டு உதவியாக விளங்குகிறது.

**(அ) புதிய வருவாய் ஏற்பாடுகள்**

1970/71இற்குரிய அரசாங்க மதிப்பீடுகள் (வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு முந்தியது) சென்ற நிதியாண்டிலும்பார்க்க இன்றுள்ள வரிகளின் வீதங்களிலேற்பட்ட வருவாயின் பல அதிகரிப்புகளை உள்ளடக்குகின்றன.

அத்தகைய அதிகரிப்புகளுக்கு மேலாக ஏனைய புதிய வருவாய் வழிவகைகளும் வரவுசெலவுத்திட்ட உரையில் குறிக்கப்பட்டது. முழு நிதியாண்டிற்கு ரூ. 3,280 இலட்சம் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய இப்புதிய வழிமுறைகள் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 20இற் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஊ) 20

### புதிய வருவாய் வழிமுறைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| அட்டவணை II (ஊ) 3 தொடர்பாக | விடயங்கள் | எதிர்பார்க்கப்பட்ட வருவாய் (முழுவாண்டு) | எதிர்பார்க்கப்பட்ட வருவாய் 1970/71 |
|---|---|---|---|
| 1.1.1 | நாணயமதிப்பு நீக்கத்தினுற் பெற்ற வரிகள் ... | 100.00 | 100.00 |
| 1.2.1 | மொத்த விற்பனை வரி .. | 29 00 | 21 75 |
| 1.2.1 | வங்கிப் பணக்குறை வரி ... | 20.00 | 15.00 |
| 1.2.2 | தீர்வை வரிகள் (சிகரெட்டு, பியர், போத்தலிலடைக்கப்பட்டவைகள்) ... | 35.00 | 26.25 |
| 1.2.3 | இறக்குமதி வரி அமைப்பைச் சீர்ப்படுத்தல் ... | 60.00 | 45.00 |
| 1.2.5 | கனிப்பொருள் வகையில் ஏற்றுமதி வரியில் அதிகரிப்பு | 1.00 | 0.75 |
| 1.2.6 | உந்து ஊர்திகளின் கட்டணம் ... | 7.00 | 5.25 |
| 1.3.1 | கூட்டுத்தாபனங்களிற் சிறப்பு வரி விதிப்பு ... | 45.00 | 33.75 |
| 1.4.3 | அஞ்சல், தந்தி, தொலைபன்னிக் கட்டணங்களில் மாற்றல்கள் ... | 15.00 | 11.25 |
| 1.4.4 | துறைமுகக் கட்டணங்கள் உயர்வு ... | 7.00 | 5.25 |
| 1.5 | தற்காலிக வதிவிற்குரிய அனுமதிச்சீட்டு வரி ... | 4.00 | 3.00 |
| 2.1.2 | மூலதன வரிவிதிப்பு .. | 5.00(அ) | 3.75 |
| | மொத்த வருவாய் ... | **328.00** | **271.00** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இந்த மூலதன அறவீடு மூன்று வருடங்களுக்குள் பெறப்படவேண்டும். முதல் ஆண்டில் ரூ. 50 இலட்சம் இதிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

நிதியாண்டு தொடங்கிய பின்பே வரவுசெலவுத்திட்டம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதனுல் நிதியாண்டின் முக்காற் பகுதிக்கே பெரும்பான்மையான வருவாய் வழிமுறைகள் நடைமுறையில் இருக்கும். ஆகவே நாணய மதிப்பு நீக்கம் காரணமாகப் பெற்ற கொடுபடாத முந்திய வரிகள் தவிர்த்து, வருவாயில் காற்பங்கை இழப்பிற்கென விடுவதாக வரவுசெலவுத்திட்ட உரையிற் குறிக்கப்பட்டது. வருவாயில் இந்த இழப்பை நீக்கியபின், புதிய வருவாய் வழிமுறையினுல் இந்நிதியாண்டிற்குப் பெறக்கூடுமென எதிர்பார்க்கப்படும் தொகையை அட்டவணை II (ஊ) 20இன் கடைசி அடைப்புக் கோடு காட்டுகின்றது. மேலும் வரவுசெலவுத்திட்ட உரையில் வரி நிவாரணங்களுக்கும், புற நடைகளுக்கும் செய்யப்பட்ட ஏற்பாடுகளை இவ்வட்டவணை கணக்கிலெடுக்கவில்லை. காரணம், இவற்றினுல் பெறும் வருவாய் முக்கியத்துவம் வாய்ந்ததல்லாததேயாகும்.

*(i) நாணய மதிப்புநீக்கத்தினுற் பெற்ற வரி*

பதுக்கி வைத்திருக்கப்பட்ட பணம் குறிப்பிடத்தக்க தொகையாக இருக்குமென்று நம்பப்பட்டதனுல் அவற்றை வெளிக்கொணரும் நோக்கத்துடன் 1970 நவெம்பர் 31 தொடங்கி[1], ரூ. 100, ரூ. 50 நாணயத்தாள்கள் சட்டப்படி செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டது. இந்த இன நாணயத் தாள்களை வைத்திருக்கும் ஒவ்வோராளும் 1970 ஒற்ருேபர் 27இற்கும் 1970 நவெம்பர் 2இற்கும் (இவ்விரண்டு நாட்களுமுட்பட) இடையில் ரூ. 1,000இற்கு மேற்படாத தொகையை எந்தவொரு வங்கியிடமும் ஒப்படைத்து இதே இனத்தாளுடைய புதிய நாணயத்தாள்களைப் பெறும் உரிமை வழங்கப்பட்டது

1. 1970இற்குரிய எண் 26 தாங்கிய வரிச் சட்டத்திலிருந்து தப்புவதைத் தடுத்தல்.

(இந்த வரையறை முறையே ரூ. 250 ஆகவும் ரூ. 100 ஆகவும் பின்பு குறைக்கப்பட்டது). மேற்குறித்த தொகைக்கு மேலாக வைத்திருந்தோர் தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் ஒப்படைக்கும் உரிமையும், வங்கியிற் கணக்கு வைத்திராதோர் தாம் விரும்பிய வங்கியில் ஒப்படைக்கும் உரிமையும் வழங்கப்பட்டது. இந்த இன நாணயத்தாள்களை வைத்திருப்போர் 1970 நவெம்பர் 3 தொடங்கி, 1970 நவெம்பர் 25 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கி) தம் கையிருப்புக்களை வர்த்தக வங்கியில் அல்லது அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியில் வைக்கும் உரிமை வழங்கப்பட்டது (முடிவுறும் இத்திகதி பின்பு 1970 நவெம்பர் 15இற்கென முன்கொண்டுவரப்பட்டது). அத்துடன் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு இத்தகைய வைப்புக்கள் பற்றித் தகவல்கள் கொடுக்கவேண்டுமென சட்டப்படி கடப்பாடுடையவர்களாக வங்கிகளும், மற்றும் எல்லா அரசாங்க, அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களும் ஆக்கப்பட்டன. எந்தவொரு சென்ற ஆறு வரி ஆண்டுகளுக்கு வரி செலுத்தத் தவறிய வைப்பாளர்களுக்கு அக்காலப்பகுதியின் முழு வருவாயில் செலுத்தவேண்டிய வரிகளை $33\frac{1}{3}$ சதவீத அடிப்படையில் அல்லது தம் வைப்புக்களில் 50 சதவீதத்தை இவற்றில் எது கூடிய தொகையோ அவற்றைச் செலுத்தும் உரிமை வழங்கப்படும். பணப்பதுக்கல்களுக்குமாறாக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை மேலதிக வரிச்சேர்ப்பனவுகளாக ரூ. 1,000 இலட்சம் வருவாயைத் தருமென எதிர்பார்க்கப்பட்டது.

(ii) தயாரிப்புக் கைத்தொழில்களில் மொத்த விற்பனவுவரி

தயாரிப்புக் கைத்தொழில்களின் மொத்த விற்பனை வரி பற்றிப் பின்வரும் மாற்றங்கள்[1] எடுத்து மொழியப்பட்டன.

(அ) மேம்பட்டதும் வழக்கத்திலுள்ளதுமான பெற்ரேலில் இன்றுள்ள 32சதவீதத்தை 37 சதவீதத்திற்கு உயர்த்தல்;

(ஆ) வண்ணப் பொருட்களிலும், காற்றைச் சீராக்கும் கருவிகளிலும், கத்தி, முள்வகை, அடுக்களை உணவுப் பாத்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். கறையற்ற இரும்புப் பொருட்களிலும், குளிரேற்றிகளிலும், வானெலிகளிலும், மைப் பூச்சு வகைகளிலும் உள்ள விலை வீதத்தை 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்த்தல்;

(இ) இனிப்புப் பொருட்களிலும், நகைகளிலும், அருங்கற்கள், அருங்கற்கள் சார்பானவையிலும், உடனணி உடைகள் தயாரிப்பாளரால் தூயபருத்திச் சீலைகள் தவிர்த்து, ஏனைய துணிகளாற் செய்யப்பட்ட உடனணி உடைகளிலும், மற்றும் அணிகளிலும், அடுக்களை உணவு மேசைப் பாத்திரங்களை உள்ளடக்கிய அலுமினியப் பித்தளைப் பூச்சுப் பாத்திரங்களிலுமுள்ள விலை வீதத்தைப் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு உயர்த்துவதென்றும்;

(ஈ) சொக்கிலேற், கொக்கோ மா, பிரண்டி ஜின், ரம், விஸ்கி, வைன், தூய்மையாக்கப்பட்ட ஸ்பிரிட், தனியே ஆட் கூலியினுல் தயாரிக்கப்படாத விசுக்கோத்து, வாயுப் பானம், கன்னர் உற்பத்திகள், அத்துடன் உடனணி உடைகளைத் தயாரிப்பவரால் தூய பருத்தித் துணிகளாற் செய்யப்பட்ட உடனணி உடைகளிலும் மற்றும் ஏனைய உடைகளிலும் உள்ள விலை வீதத்தைப் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்துவதென்றும்;

(உ) தகரத்திலடைக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட அல்லது பதனிடப்பட்ட பழங்கள், மரக்கறிகள், உணவும் குடிவகையும், நிலக்கரிவாயு, சுருட்டுக்கள், பேழைகள் அடங்கிய மரத் தளவாடங்கள், பாதுகாப்புப் பெட்டிகள் அலுவலகத் தளபாடங்கள், மின்சார

1. 1970 ஒற்ரோபர் 26இல் வந்த எண் 14,929/10 தாங்கிய இலங்கை அரசாங்கச் சிறப்புச் செய்திமடல்.

எந்திரங்கள், துணைக்கருவிகள் கருவிகள், ஏனைய மின்சாரப் பொருட்கள், உறுதிப்பெட்டிகள், உடைப்பெட்டிகள், பயணப் பைகள், பிற பைகள் ஆகியவற்றின் விலை வீதத்தை 6 சதவீதத்திலிருந்து 10சத வீதத்திற்கு உயர்த்துவதென்றும்;

(ஊ) சுமையுந்துவண்டிகளை (லொறிகளை)த் தயாரிப்பதில் அல்லது இணைப்பதில் ஏற்படும் செலவு வீதத்தை 25 சதவீதத்திலிருந்து 5 சத வீதத்திற்குக் குறைப்பதென்றும்;

(எ) தனியே உடல் உழைப்பினால் தயாரிக்கப்பட்ட அலுமினியம், பித்தளை, இனாமல், குவளைகளின் விலை வீதத்தை 15 சதவீதத்தில் இருந்து 3 சதவீதத்திற்குக் குறைப்பதென்றும்;

(ஏ) கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்களாற் தயாரிக்கப்பட்ட ஆடைகள், கைத்தறிகளின் வீதத்தை 5 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்குக் குறைப்பதென்றும்;

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலே தயாரிக்கப்பட்ட மேல் நிலை (சுப்பர்) பெற்றோலிலும், வழக்கிலுள்ள (சாதாரண) பெற்றோலிலும் விதிக்கப்பட்ட மொத்த விற்பனை வரியின் அதிகரிப்பு, நுகர்வோரைச் சாரும் முறையில் இவ்விரண்டு தரப் பெற்றோலின் கலனின் விலை 25 சதத்தால் உயர்த்தப்பட்டது.

மொத்த விற்பனை வரி வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் சாதாரணமாக, தேறிய மேலதிக வருவாய் ரூ. 290 இலட்சமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவற்றுள் ரூ. 217.5 இலட்சம் நடைமுறை நிதியாண்டிற் சேர்க்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### (iii) வங்கிப் பற்று வரி

முதலில் 1957இல் கொண்டுவரப்பட்ட இவ்வரி, 1965இல் நீக்கப்பட்டு மீண்டும் புகுத்தப்படவேண்டியிருந்தது. இந்த வரியை நீக்கியதனால் வழக்கிலிருந்த காசோலைகளின் அளவு எதுவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. ஆகவே, இந்தக் காசோலை வழக்கிற்குத் திருப்பிக்கொண்டுவரப்படும். இவ்வரி எதுவித பாதக விளைவையும் ஏற்படுத்தாதென்பது அவதானிக்கத்தக்கதாயிருந்தது. ஒவ்வொரு கலண்டர் மாதத்தின்[1] ஒவ்வொரு நடைமுறைக்கணக்கினது மொத்தப்பற்றின் ஒரு சதவீதத்தின் பத்திலொரு பங்காகவே இவ்வரியிருக்கும். பற்றுக்களின் சில பற்றுக்களை இதிலிருந்து விலக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டது. இந்தவரி ஒரு முழு ஆண்டிற்கு ரூ. 200 இலட்சத்தையும், நடைமுறை நிதியாண்டிற்குப் பார்க்கும்போது ரூ. 150 இலட்சத்தையும் மேலதிக வருவாயாகக் கொண்டுவரும்.

### (iv) உள்நாட்டுப் பொருள் வரிகள்

புகையிலை, பியர், போத்தலிலடைக்கப்பட்ட கள் ஆகியனபற்றி உள் நாட்டு வரிகளிற் பின்வரும் மாற்றங்கள்[2] கொண்டுவருவதென எடுத்துரைக்கப்பட்டது.

(அ) புகையிலையின் பொருள்வரியை இறுத்தலுக்கு ரூ. 5இலிருந்து இறுத்தலுக்கு ரூ. 42/50உக்கு உயர்த்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இது ஒரு சிகரட்டின் சில்லறை விலையை ஒரு சதத்தால் உயர்த்தும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

1. 1970இற்குரிய எண் 27 தாங்கிய வங்கிப்பற்று வரிச்சட்டம்.
2. 1970 ஒற்றோபர் 25இல் வெளிவந்த 14,929/5 எண் தாங்கிய இலங்கை அரசாங்கச் சிறப்புச் செய்திமடல்.

(ஆ) பத்தாண்டுகளாக மாற்றமடையாதிருந்த பியரின் உள்நாட்டுப் பொருள் வரியை கலனுக்கு ரூ. 2.50 சதத்தால் உயர்த்துவ தெனத் தீர்மானிக்கப்பட்டது. இது, ஒரு போத்தலின் சில்லறை விலையில் 42 சதங்கொண்டவோர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.

(இ) போத்தலிலடைக்கப்பட்ட கள்ளின் உள்நாட்டுப் பொருள்வரியை ஒரு போத்தலுக்கு, 10 சதத்தால் உயர்த்துவதெனத் தீர்மானிக் கப்பட்டது.

(v) இறக்குமதி வரியமைப்பைச் செம்மைப்படுத்தல்

இன்று கையாளுவதற்குக் கடினமான பிழைகள் மிக்க இறக்குமதி இறுப்பைச் செம்மைப்படுத்தி எளிதாக்குவதன்நோக்கம், இறக்குமதி இறுப்பை ஆறு அடிப்படை வரிசைகளாக வகுத்து எளிதாக்குவதேயாகும்.[1] வாழ்க்கைச் செலவுகள் அடங்கும் அடிப்படை நுகர்வோர் விடயங்களுக்கும், அடிப்படைக் கைத்தொழில் மூலப் பொருட்களுக்கும், கமத்தொழிலுக்கும், கைத்தொழிலுக்கும் தேவையான முக்கிய எந்திரங்களுக்கும் வரிவிலக்குவது அல்லது பெயரளவில் வீதங்கள் செலுத்தச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வீத வரிசைகளுக்கு மேல் 60சதவீத ''வரையளவு'' வீதம் இருக்கும். இலவசமாகப் பெயரளவில் அல்லது சலுகை வீத வரிசையில் அல்லாவிடின் பாதுகாக்கும் அல்லது உச்சவீத வரிசைக்கு மாற்றுவதற்குச் சிறப்புக் காரணங்கள் இல்லாதுவிடின் இந்த வரிவீத வரிசைக்கே இந்த இறக்குமதி விடயத்தை இணைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. உள்ளூர் உற்பத்திக்குப் பாதுகாப்பளிப்பதற்கும், உள்ளூரில் உள்ளுறுப்புக்களைப் படிப்படியாகத் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்கும், வருங்கால அபிவிருத்திக்கு வலுவூட்டத்தக்க துறைகளில் புதிய முயற்சிகளை மேற்கொள்ள உதவவும் வரையறை வீதத்திற்கு மேலாக வீத வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்றியமையாததல்லாத போகப் பொருட்களையே ஏறக்குறைய முழுமையாக அடக்கும் பண்டங்களின் மிகுதித் தொகுதிகள் உச்ச வீத வரிசைகளில் சேர்க்கப்படும்.

இந்தப் புதிய இறக்குமதி இறுப்புக்கள் அமைப்பு ஒரு முழு ஆண்டிற்கு ரூ. 600 இலட்சத்தையும் நடைமுறை நிதியாண்டிற்குப் பார்க்கும்போது ரூ. 450 இலட்சத்தையும், மேலதிக வருவாயாகத் தருமென எதிர்பார்க்கப் பட்டுள்ளது. இந்தக் கூட்டுத்தொகையான ரூ. 450 இலட்சம் பின்வரும் முறையில்

(அ) பீடி இலைகளின் இறக்குமதி வரியை இருத்தலுக்கு 21 சதத்திலிருந்து இருத்தலுக்கு ரூ. 5/– ஆக உயர்த்துவதால்;

(ஆ) ஆடை இறக்குமதி செய்வதற்கு வரையறுக்கப்பட்ட துணிச்சாலை (சலுசல) நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட, இறக்குமதி வரி நீக்கப் பட்ட சலுகையைப் பின்வாங்குவதினால்,

(இ) இதுகாலவரை வரியில்லாது இறக்குமதி செய்வதற்குவிடப்பட்ட பெருந்தொகையான மூலப் பொருட்களிலும் மூலதனப் பொருட் களிலும் பெயரளவில் 5 சதவீத வரியை விதிப்பதினாலும்,

சிறப்பாகச் சேர்க்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.[2]

(vi) பென்சிற் கரியின் ஏற்றுமதி வரியை உயர்த்தல்

மரபற்ற ஏற்றுமதிப் பொருளாக பென்சிற்கரி (காரீயம்) விளங்குவதனால் இது வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழுக்கு உட்பட்டது. இது. இன்று 55சதவீத உச்ச வருவாயைப் பெற்றுத் தருகிறது. 1969 ஒகத்தில் இதன்மீது

1. 1970 ஒற்ரோபர் 25இல் வெளிவந்த 14,929 எண் தாங்கிய இலங்கை அரசாங்க சிறப்புச் செய்திமடல்.
2. 1970 ஒற்ரோபர் 26இல் வெளிவந்த 14929/5 எண் தாங்கிய இலங்கை அரசாங்க சிறப்புச் செய்திமடல்.

விதிக்கப்பட்ட 25சதவீத ஏற்றுமதி வரியினுல், பென்சிற் கரியின் ஏற்றுமதியின் தேறிய வருவாய் 30சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. வருவாயைப் பாதிக்கும் அளவிற்கு உற்பத்தியாளர் அளவுகடந்த பெரும் இலாப எல்லையைப் பெறுவதனுல் உள்ளூர் உற்பத்தியாளருக்கு 5சதவீதத் தேறிய வருவாயை மட்டும் கொடுத்து இந்த வரியை 50சதவீதத்திற்கு[1] உயர்த்துவதென்று எடுத்துரைக்கப்பட்டது. முன்பு வழங்கப்பட்ட வருவாய்க்கு இணையாக இலங்கையின் இவ்வேற்றுமதி அளவும், பெறுமதியும் அமையாது இருப்பதாலும், இதற்கான அங்காடி தற்போது நன்ருக இருப்பதாலுமே மேற்கூறிய நடவடிக்கை எடுத்துரைக்கப்பட்டது. இந்த வழிமுறையினுல் முழுவாண்டிற்கு ரூ. 10 இலட்சத்தையும் நடைமுறை நிதியாண்டிற்கு ரூ. 7.5 இலட்சத்தையும் வருவாயாகப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(vii) உந்துவண்டிகளுக்கு உத்தரவுச் சீட்டு

அரசாங்கத்தினுல் அளிக்கப்படும் பணிகளுக்கு ஈடாக, மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களத்தினுல் அறவிடப்படும் கட்டணங்கள் மிகச் சிறியனவாயிருப்பதனுல் உந்துவண்டிகளை, சுமை உந்து வண்டிகளை, மூடு உந்து வண்டிகளை மாற்றல் செய்யும் சேவைகளுக்குப் பெறும் கட்டணங்களையும், வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டுகளாலும் அத்தகைய உத்தரவுச் சீட்டுகளை நீடிப்பதனுலும், மோட்டார் வாகனங்களுக்கு ஆண்டு உத்தரவுச் சீட்டுக்களை வழங்குவதினுலும் பெறும் கட்டணங்களையும் திருத்தி அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வழிமுறைகள் ஒரு முழு நிதியாண்டிற்கு ரூ. 70 இலட்சத்தையும் நடைமுறை நிதியாண்டிற்கு ரூ. 52.5 இலட்சத்தையும் தருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(viii) கூட்டுத்தாபனங்களின் மீது சிறப்பு அறவிடுதல்

பெறுமதியிறக்கச் செலவிற்கும், பின்வரும் தேவைகளுக்குக் கீழே தரப்பட்ட வரிசையில் வரிப்பொறுப்புக்களுக்கும் ஏற்பாடுகள் செய்தபின், தேசிய கூட்டுத்தாபனங்களினது தேறிய ஆண்டு இலாபங்களுக்கு நிதிஉண்டியலில் ஏற்பாடு செய்வதென எடுத்துரைக்கப்பட்டது.

(அ) உரிய அமைச்சரின் ஆலோசனையுடன் நிதியமைச்சராலே திரட்டிய நிதிக்கு எவ்வளவு கொடுப்பனவு செய்யவேண்டும் என்பது தீர்மானிக்கப்படும்.

(ஆ) உரிய அமைச்சரின் உடன்பாட்டுடன் அவையின் தீர்மானத்திற்கமைய நிறுவனத்தின் ஊழியர்களுக்கு மிகை ஊதியம் உட்பட இவை போன்ற ஏனைய தேவைகளுக்குக் கொடுப்பனவை வழங்கல்.

(இ) பொதுச் சிறப்பு ஒதுக்கல்களுக்கு இத்தகைய ஆண்டு இலாபங்களின் நிலுவையை வழங்கல்.

இதனுல் அரசாங்கம் முதலீடு செய்துள்ள சபைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் இருந்து சிறப்பு அறவீடாக முழுவாண்டிற்கு ரூ. 600 இலட்சத்தையும்,[2] நடைமுறை நிதியாண்டிற்கு ரூ. 337.5 இலட்சத்தையும் மேலதிக வருவாயாக அரசாங்கம் பெறுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து திரட்டிய நிதிக்கு வருவாயாக ரூ. 600 இலட்சம் சேர்க்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ்வுதவுதொகைகளை, பல்வேறு நிறுவனங்களின் முக்கிய உதவுநர்களாகிய கூட்டுறவு மொத்த விற்பனை நிறு

1. 1970 ஒற்ரேபர் 25இல் வெளிவந்த 14,929/3 எண் தாங்கிய இலங்கை அரசாங்க சிறப்புச் செய்திமடல்
2. 1970—71 வரவு செலவுத் திட்டத்திற்கு முந்திய வருவாய் மதிப்பீடுகளை ஆயத்தம் செய்கின்றபோது, இத் தொகையில், ரூ. 150 இலட்சம் ஏற்கெனவே கணக்கிலெடுக்கப்பட்டுள்ளது. எனவே, முழு ஆண்டிற்கு முரிய ரூ450 இலட்சம் பணக்குறையை நிதிஉதவிசெய்வதற்கு மேலதிக வருவாய கிடைக்கத்தக்கதாகவிருந்தது.

வனம் (ரூ. 150 இலட்சம்), இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் (ரூ. 100 இலட்சம்). இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் (ரூ. 100 இலட்சம்), இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (ரூ. 50 இலட்சம்), இலங்கை மின்சாரச் சபை (ரூ. 50 இலட்சம்) என்ற அடிப்படையில் வழங்குகின்றன.

(ix) அஞ்சல், தந்தி, தொலைப்பன்னிக் கட்டணங்களிற் சீராக்கம்

உத்தேசிக்கப்பட்ட வீதங்களின் திருத்தம், வெளிநாட்டு அஞ்சல், உள்நாட்டுத் தந்திகள், உள்ளூர் முண்டக் கூவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொலைபன்னிக் கட்டணங்கள், வாடகைகள் ஆகிய அனைத்தையும் அஞ்சற் கட்டணங்களின் அதிகரிப்புகளை உள்ளடக்குகின்றது. கொழும்பிலும், மற்றைய வெளியிடங்களிலும் உள்ளூர்த் தொலைபன்னிக் கூவல்களை 5 சதத்தால் அதிகரிப்பதென்றும் உள்ளூர்த் தந்திகளுக்கு ஒவ்வொரு மேலதிகச் சொல்லுக்கும் 5 சதத்தைக் கூட்டுவதென்றும் மாற்றங்கள் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய தந்திகளின் முதற் பத்து சொற்களின் கட்டணமாகிய 75 சதத்தை மாற்றுவதில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது. வணிகத் தொலைபன்னிகளின் வாடகையை ஆண்டிற்கு ரூ. 100/- ஆல் உயர்த்துவதென்றும் தனியார் தொலைபன்னிகளின் ஆண்டு வாடகையை ரூ.50ஆல் உயர்த்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. மேற்குறித்த மாற்றங்கள் முழுவாண்டிற்கு ரூ. 150 இலட்சத்தையும் நடைமுறை நிதியாண்டிற்கு ரூ. 112.5 இலட்சத்தையும் மேலதிக வருவாயாகக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

(x) துறைமுகக் கட்டணங்களின் அதிகரிப்பு

1967இல் ரூபாய் மதிப்பிறக்கஞ் செய்யப்பட்ட வேளையில் இன்றிருக்கும் துறைமுகக் கட்டணங்கள் திருத்தப்படவில்லை. இதனல் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் நட்டம் ஏற்படாதிருக்கவும், நாணய மதிப்பிறக்கத்திற்கு முன் இருந்த நிலைக்கு வருவாய்களைக் கொண்டுவரவும் ஏறக்குறைய 25 சதவீதத்தால் துறைமுகக் கட்டணங்களை உயர்த்துவதென்று எடுத்துரைக்கப்பட்டது. இதனல், முழுவாண்டிற்கும் ரூ. 70 இலட்சமும், நடைமுறைநிதியாண்டிற்கு ரூ. 52.5 இலட்சமும் மேலதிக வருவாயாக வருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(xi) தற்காலிக வதிவு அனுமதிச்சீட்டு வரி

முன்பு நடைமுறையிலிருந்த தற்காலிக வதிவு அனுமதிச்சீட்டு வரியை மீண்டும் கொண்டுவருவதென எடுத்துரைக்கப்பட்டது. இலாபந்தரும் தொழில்களில் அல்லது இலங்கையில் ஏதாவதொரு வணிகத்தில் ஈடுபட்டிக்கும் குடிமக்கள் அல்லாதோர் தாம் அல்லது தம்மில் தங்கியிருப்போர் அரிசி மானியம், இலவசக் கல்வி, மருத்துவப் பணிகள் ஆகிய துறைகளில் பெரும் நன்மைகளின் செலவின் ஒரு பகுதியை மீளப்பெறுவதற்கு இவ்வரி துணைசெய்கின்றது. அத்துடன் விசா வைத்திருப்போர் கூடியளவு பெரும் எண்ணிக்கையில் தாமாகவே இலங்கையை விட்டுச் செல்வதற்கும் இதுவொரு தூண்டுகோலாக அமையுமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், 1964ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அடங்கும் ஆட்கள் உட்பட சில பகுப்புகளுள் அடங்கும் ஆட்களுக்கும் விதிவிலக்கு வழங்குவதற்கு ஏற்பாடுசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆண்டிற்கு இவ்வரி தனியாளுக்கு ரூ. 500 ஆக விளங்குவதோடு முழு ஆண்டிற்கு ரூ. 40 இலட்சத்தையும் தருமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், நடைமுறை நிதியாண்டிற்கு இவ்வரியிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 30 இலட்சமேயாகும்.

(xii) மூலதன அறவிடல்

1970 மாச்சு 31இல் இருந்த நிலையில் தனியாளின் தேறிய செல்வத்திலும் ஒரு குடும்பத்தின் தேறிய செல்வத்திலும் கூட்டுத் தொகையிலும் நிலையான மூலதன அறவிடுதலைச் செய்வதென முடிவுசெய்யப்பட்டது. உயர்ந்த வருவாய்ப் பிரிவினருக்குரிய இவ்வறவிடுதல் ரூ. 2,00,000உக்கு மேற்பட்ட தேறிய செல்

வத்திலேயே இயங்குகின்றது. ஒரு குடும்பம் அல்லது ஒரு தனியாள் ஒரு வீட்டைச் சொந்தமாக வைத்திருப்பின் புறநடையெல்லை ரூ. 2,50,000 எனத் தீர்க்கப்பட்டுள்ளது. இன்றுள்ள செல்வவரி அடிப்படையிலேயே தேறிய செல்வ வரியும் கணக்கிடப்படும்.

விருத்தி முறை வீதப் பட்டோலையிலே கட்டணத்தை அறவிடுவதென்றும் ரூ. 2,00,000யைத் தனித்தனியே கொண்ட முதல் நான்கு துண்டுகளிலும் முறையே 3 சதவீதம் 5 சதவீதம், 10 சதவீதம், 15 சதவீதம் வரியை விதிப்பதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மிகுதிக்கு 25 சதவீத வரி விதிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அறவிடப்பட்ட இத்தொகையைப் பணமாகக் கட்டமுடியாத செல்வவரி கொடுப்போருக்குத் தம் சொத்தில் ஒரு பகுதியை வரியாக வழங்கி, வரிப்பொறுப்பில் இருந்து விடுபடுவதற்கு ஏற்பாடு செய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது. இந்த வழி முறை முழுவாண்டிற்கு ரூ. 50 இலட்சத்தையும் நடைமுறை நிதியாண்டுக்கு[1] ரூ. 37.5 இலட்சத்தையும் கொடுக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(xiii) ஏனைய வழிமுறைகள்

மேலே குறிக்கப்பட்ட புதிய வருவாய் வழிமுறைகள் தவிர்ந்த ஏனைய சில வரித்திருத்தங்களும் வரவுசெலவுத்திட்டத்தில் இடம்பெற்றன. இவற்றிலிருந்துவரும் வருவாய் முக்கியத்துவம் அற்றவையெனக் கருதப்பட்டது.

**அவையாவன பின்வருமாறு:**

(அ) தனியாட்களின் வருமான வரி வீதங்களில் சீராக்கம்:

ரூ. 50,000 வரை தனியாட்களின் வரி விதிக்கத்தக்க வருவாய் படிப்படியாக முன்னேறும் முறையில் வருமான வரி வீதங்களைத் திருத்துவதென்றும், இத்தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு உச்ச வீத 65 சத வீதத்தை அறவிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. 17½ சதவீதத்திலும் 20 சதவீதத்திலும் தனித்தனியே ரூ. 3,600 கொண்டுள்ள தனித்தனி ரூ. 2,400 கொண்ட இரு பிரிவுகளாக ஆக்குவதென முடிவு செய்யப்பட்டது. 40 சதவீதத்தில் வரிவிதிக்கத்தக்க பிரிவுகளை அதிகரிப்பதும் கொண்டுவரப்பட்ட மற்றைய திருத்தமாகும். ரூ. 7,200 கொண்ட பிரிவிற்கு 40சதவீத வரி விதிப்பதென்றும் தனித்தனியே ரூ. 10,000 கொண்ட இரு துண்டுகளுக்கு முறையே 50 சதவீத 60 சதவீத வரிகள் விதிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

(ஆ) அரிசிமானிய வரி:

1970 ஒற்ரோபர் ஒன்று தொடங்கி அரிசிமானிய வரியை இல்லாமற் செய்வதென்று வரவுசெலவுத்திட்ட உரையில் குறிக்கப்பட்டது. ஓராண்டிற்கு மதிப்பிடத்தக்க வருவாய் ரூ. 12,000 அல்லது அதற்கு மேலாகப்பெறுபவரிடம் இவ்வரி அறவிடப்படுகிறது. இவ்வரி ஒவ்வொரு கூப்பனில் ஒரு கிழமைக்கு 4 இருத்தல் அரிசி அல்லது 8 இருத்தல் நெல்லும் பெறும் ஒவ்வொரு கூப்பன் புத்தக உடைமையாளரிடமும் ரூ. 1/25 சதவீதம் அறவிடப்பட்டது. இந்த வரி, வரி செலுத்துவோர்க்கும் இறைவரித் திணைக்களத்திற்கும் தேவைபற்ற தொல்லை கொடுத்ததென்பது அவதானிக்கத்தக்கதாயிருந்தது. அத்துடன் இவ்வரியில் இருந்து சேர்ந்த தொகைகள் இவ்வரியை அறவிடுவதில் ஏற்படும் நிருவாகச் சிக்கல்களுக்கும் வசதியீனங்களுக்கும் ஈடுசெய்வதாக அமையவில்லையென்பதும் கவனிக்கத்தக்கதாய் இருந்தது.

1. மூன்றுண்டு காலப் பிரிவில் இம்மூலதனத்தை அறவிடுவதென்றும், முதல் முழு ஆண்டில் ரூ. 50 இலட்சத்தை அறவிட முடியுமென்றும் எதிர்பார்க்கப்படடுள்ளது.

(இ) வெ. செ. உ. சான்றிதழின் கீழ் இறக்குமதிகள் :

வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களில் இருந்து நூல்கள், சஞ்சிகைகள், ஈருருளி, இழுபொறிகள், கருவிகள், துணைக்கருவிகள், பருத்தி நூல், பதனிடாத பருத்தி ஆகியவற்றிற்கு விலக்கு அளிப்பதெனக் கூறப்பட்டது. அதேவேளையில் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்களிலிருந்து பெற்ற வருவாயில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் முறையில் சீனி, சோளம் இறக்குமதியையும் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தினதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினதும் இலங்கை மின்சாரச் சபையினதும் இறக்குமதிகள் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் ஒப்படைப்பிற்கு உட்படுத்தப்பட்டன.

(ஈ) முயலுவோர் நிலை

கைத்தொழில் அமைச்சினுல் முயல்வோர் நிலையிலுள்ள கைத்தொழில்களுக்கு வரி நிவாரணம் அளிப்பது நடைமுறை வழக்கமாய் இருந்தது. அரசாங்கத்தின் கைத்தொழிற் கொள்கைகளில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்துவதையொட்டி எந்த அடிப்படையில் ''முயல்வோர் நிலை''யை வழங்குவது என்பது திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்ததென்றும் கூறப்பட்டது. கைத்தொழிலில் விரிந்த அடிப்படையில் உடைமையும் வழங்கத்தக்க இலங்கையின் கட்டுப்பாடும், பணிப்பாளரையும் அவர்களால் நியமிக்கப்பட்டோர்க்கும் சேரும் இலாபங்களின் ஆண்டு விவரக் கூற்றையும் வெளியிடும் ''முயல்வோர் நிலை'' என்ற தகுதியைப் பெறுவதற்கு ஏனையவற்ருேடு தேவைப்படும் பண்புகளாகும். கீழே குறிக்கப்படும் ஏதாவதொரு நிபந்தனையை நிறைவேற்றினுல் தான் ''முயல்வோர் நிலை'' என்ற தகுதியை ஒரு கைத்தொழில் பெறமுடியும். அவையாவன உற்பத்தியில் ஏறக்குறைய 50 சதவீதம் ஏற்றுமதிக்கு உரியதாக்கப்படவேண்டும். நாட்டின் அபிவிருத்தி அடையாத அல்லது கைத்தொழில்கள் இல்லாத பகுதியில் நிறுவப்படவேண்டும். இதுவரையில் குறிப்பிடத்தக்களவு உற்பத்தி செய்யப்படாத இன்றியமையாத நுகர்வோர் பொருளாகவும் அது இருக்கவேண்டும். அல்லது ஊக்குவிப்பதற்குரிய அங்கீகாரம் பெற்ற உறுதியாக முயல்வோர் தன்மையுடைய ஏதாவது ஒரு துறையாக அமையவேண்டும். ஏற்கெனவே குறிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்று ''முயல்வோர் நிலை'' என்ற தகுதி பெற்ற ஒரு கைத்தொழிலாளர் முந்திய நிபந்தனைகளுக்கு விலக்களிக்கும் முறையில் பின்பு ஒரு நிலையில் பிறிதொருதுறைக்கு தகவுத்திறனை வேண்டிநிற்க முடியாது.

(ஆ) செலவு வழிமுறைகள்

வரவுசெலவுத்திட்ட உரைக்கு முன் நாடாளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட மாதிரி மதிப்பீடுகளில் நிதியாண்டு 1970/71 இற்குரிய அரசாங்கச் செலவினங்கள்பற்றிய கருத்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் செலவாணிச் சான்றிதழ்த்திட்டத்தின் கீழ்ச் சீனி இறக்குமதியைக்கொண்டு வருவதுபற்றி எடுத்துரைக்கப்பட்ட கருத்துத் தவிர்த்து ஏனைய முக்கியமானது ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. மேற்குறித்த சீனி இறக்குமதிபற்றிய திட்டம் சீனியின் மொத்த இறக்குமதி விலையில் ரூ. 870 இலட்சத்தை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. எண்ணமிடப்பட்டிருக்கும் வரவுசெலவுத் திட்டக் குழு நிலையிற் செய்யப்பட்ட திருத்தங்களுள் எண்ணமிடப்பட்ட அரசாங்கத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தை உருவாக்க ரூ. 100 இலட்சத்தை ஒதுக்கிய ஏற்பாடும் ஒன்ருகும்.

எனினும், அரசாங்க மூலதனச் செலவு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்ட குறிப்பிடத்தக்க விடயம் வேலையில்லா உடனடி அமுக்கத்தை எதிர்நோக்கும்

முறையில் துரிதப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு ரூ. 2,000 இலட்சத்தை ஒதுக்கியதேயாகும். திட்ட வேலைவாய்ப்பு அமைச்சினால் உருவாக்கப்பட்ட விரிவான அபிவிருத்தித் திட்டத்தின் முதற்படியே இந்தக் குறுகிய கால வேலைவாய்ப்புத் திட்டமாகும். இந்தத்திட்டம் ஏறக்குறைய 1,00,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் முறையில் 16 திட்டங்களையும், கிராம அபிவிருத்தித் திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் இது புதிய நிருவாக முகாமைக் கோப்புகளையும், கைத்தொழில் வணிகம் ஆகியவற்றிற் பயில்வோரையும் உள்ளடக்கும் பரந்த அடிப்படையிலே தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு விரிவான தேசிய அடிப்படையில் கிராம அபிவிருத்திகளையும் விவசாயத்தில் தெரிந்தெடுத்த திட்டங்களையும் தன்னுள் அடங்கியுள்ளது,

**(இ) வரவுசெலவுத்திட்டத்தின் பணக்குறையை நிதியீட்டம் செய்ய வளங்களைத் திரட்டும் வழிமுறைகள்**

புதிய வருவாய் ஏற்பாடுகளைக் கொண்ட வரவுசெலவுத்திட்ட உரை முழுமையான வரவுசெலவுத்திட்டத்தில் பணக்குறை நிதியீட்டம் செய்ய வரி அறவிடாத சில ஏற்பாடுகளையும் கொண்டிருந்தது.

அவையாவன பின்வருமாறு:

(i) கட்டாய சேமிப்புத்திட்டம்

1971 சனவரி 1ஆந் திகதி தொடங்கித் தனியாட்களுக்கும் கூட்டு நிலையங்களுக்கும் கட்டாய சேமிப்புத் திட்டத்தை நடைமுறைக்குக்கொண்டு வருவதென்றும் அதுவொரு கலண்டர் ஆண்டிற்கு மட்டுமே நடைமுறையில் இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது[1] அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் அறநிறுவனங்களுக்கும் மற்றும் அவையொத்த தனியார் சபைகளுக்கும் விதிவிலக்கு அளிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

ஊழியர் சேமநிதிக்கு 2 சதவீதத்தை மேலதிகமாகச் செலுத்தும் ரூ. 6,000 தொடங்கி ரூ. 12,000 வரை ஆண்டு வருமானம் பெறுவோரைத் தவிர்த்து ஆண்டிற்கு ரூ. 6,000 மேலாக வருவாய் பெறும் எல்லாருக்கும் இத்திட்டம் பொருந்துவதாகும். வருமான வரிகொடுத்த பின்பும் கட்டாய சேமிப்புகளாகப் பங்குகளை வழங்கியபின்பும் தம்மிடமுள்ள இலாபத்தில் 50 சதவீதத்தைக் கொடுக்க வேண்டும். எல்லாக் கூட்டுநிலையங்களின் பங்குகளிலும் 12 சதவீத உச்ச வரம்பு இடப்பட்டது. அத்துடன் 12 சதவீதத்திற்கு மேலாகப் பங்குகள் உண்டென்று பிரகடனஞ் செய்யும் கூட்டுநிலையங்கள் மேலதிகமாகவுள்ள அந்தத் தொகை அனைத்தையும் கட்டாய சேமிப்பிற் கட்டவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அரசாங்கத்தில் வைக்கப்படும் இந்தச் சேமிப்பு வைப்புக்களுக்கு 5 சதவீதவட்டி வழங்கப்படும்.

பின்வரும் முறையிற் கட்டாய சேமிப்பு வீதங்கள் கழிபடும்

| | | |
|---|---|---|
| 1. | ரூ. 6,000 உக்கும் ரூ. 12,000 உக்குமிடையில் மொத்த வருவாய் பெறும் வரி செலுத்துவோர் (ஊ. சே. நி. உதவுதொகை வழங்குவோர் தவிர்த்து). | மொத்த வருவாயில் 2 சதவீதம் |
| 2. | ரூ. 12,000 உக்கும் ரூ. 25,000உக்குமிடையில் மொத்த வருவாய் பெறும் வரிசெலுத்துவோர். | மொத்த வருவாயில் 5 சதவீதம் |
| 3. | ரூ. 25,000 உக்கும் ரூ. 60,000 உக்குமிடையில் மொத்த வருவாய் பெறும் வரிசெலுத்துவோர். | மொத்த வருவாயில் 10சதவீதம் |

1. 1971இல் வெளிவந்த 6ஆம் எண் தாங்கிய கட்டாயச் சேமிப்புச் சட்டம்.

| | | |
|---|---|---|
| 4. | ரூ. 60,000உக்கும் 1,40,000உக்கும் இடையில் மொத்த வருவாய் பெறும் வரிசெலுத்துவோர். | மொத்த வருவாயில் 15சதவீதம் |
| 5. | ரூ. 1,40,000உக்கும் மேலாக மொத்த வருவாய் பெறும் வரி செலுத்துவோர். | மொத்த வருவாயில் 20சதவீதம் |
| 6. | இறைவரியையும் பங்கு இலாபங்களையும் செலுத்தியபின் இலாபங்களை வைத்திருக்கும் கூட்டு நிலையங்கள். | மொத்த வருவாயில் 50சதவீதம் |

மேற்குறித்த வீதங்கள் தனியார் வருவாய்களில் ரூ. 3,500 உச்ச வரம்பு எல்லையையும், எல்லாக் கூட்டு நிலையங்களின் பங்குகளில் 12 சதவீத உச்ச வரம்பு எல்லையையும் வைப்பதற்குத் துணை நிற்கின்றன. வரி செலுத்துவதில் இடர்ப்பாட்டிலுள்ள சில செல்வ வரி செலுத்துவோருக்கு ஓரளவு சுமைத் தணிவு அளிக்கும் முறையில் கட்டாய சேமிப்புகளிலிருந்து மதிப்பிடப்பட்ட 1971/72ஆம் ஆண்டுக்குரிய செல்வ வரிப்பொறுப்பைக் கட்டுவதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த வரியில்லா ஏற்பாடு ரூ, 1050 இலட்ச வருவாயைத் தரக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் இதை அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது (கூட்டுநிலையங்களைப்பற்றிய இந்தக் கட்டாய சேமிப்புத் திட்ட ஏற்பாடு பின்பு மீளப்பெறப்பட்டது). அத்துடன் கூட்டு நிலையங்களில் விதிக்கப்பட்ட இன்றுள்ள வருமான வரி வீதங்களைக் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(ii) ஊழியர் சேமநிதி

வரவுசெலவுத்திட்டப் பணக்குறை[1] நிதியீட்டஞ்செய்து மேலதிக வளங்களைத் திரட்டுவதற்கு ஊழியர் சேமநிதிச் சட்டத்தை நடைமுறையிற் கொண்டு வருவதில் விரிந்த மாற்றங்களைக் கொண்டுவருவதென எடுத்துரைக்கப்பட்டது. இவை வீதங்களில் அதிகரிப்பையும், விரிந்த அடிப்படையில் நிலுவைகளைச் சேர்ப்பதையும் உள்ளடக்கும்.

(அ) இன்றிருக்கும் 4 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் மாறாக ஊழியர் சேமநிதி செலுத்து தொகைகளின் வீதங்களை முறையே ஊழியரின் வீதத்தை 6 சதவீதத்திற்கும் தொழில் வழங்குவோரின் வீதத்தை 9 சதவீதத்திற்கும் உயர்த்துவதென்று முடிவுசெய்யப்யப்பட்டது.

(ஆ) தனியாட்களையும் அமயத்தொழிலாளிகளையும் கொண்ட நிறுவனங்களையும் உள்ளடக்கும். முறையில் எண்ணிக்கை வரையறை எல்லை குறைத்து ஊ. சே. நி. சட்டத்தின் எல்லைப்பரப்பை விரிவுபடுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

(இ) இறைவரி ஆணையாளர் பெற்றுள்ள அதிகாரங்களுடன் ஒப்பிடும் முறையில் தொழில் ஆணையாளருக்கு அதிகாரங்கள் வழங்கும் முறையில் ஊ. சே. நி. சட்டத்தைதிருத்தித் தொழிற்றிணைக்களமும், மத்திய வங்கியும், நிலுவைகளைச் சேர்ப்பதற்கு வாய்ப்புகளை வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. அத்துடன் உதவுதொகைகளை வழங்காது விடுவதைத் தடுப்பதற்கு இன்றுள்ள சதவீதத்திற்குப் பதில் நிலுவைகளில் தரப்படுத்தப்பட்ட வீத மேலதிகக் கட்டணங்களை ஏற்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

1. 1971இன் 8ஆம் எண்தாங்கிய ஊழியர் சேமநிதி (திருத்தச்) சட்டம்.

இந்த ஏற்பாடுகள் முழுவாண்டில் ரூ. 700 இலட்சம் அதிகரித்த சேகரிப்பை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையுள் நிகழும் நிதியாண்டின் முழுமையான வரவுசெலவுத்திட்டப் பணக்குறையை நிதியீட்டஞ் செய்ய அரசாங்கப் பிணைகளில் ரூ. 350 இலட்சத்தை அல்லது அரையாண்டில் சேர்ந்தவற்றை முதலீடு செய்து அவற்றினூடாகக் கிடைக்கத்தக்கதாய் செய்வதென முடிவுசெய்யப்பட்டது.

**(iii)** வட்டி வீதங்கள்

அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியில் வைக்கப்படும் சேமிப்பு வைப்புக்களின் வட்டி வீதத்தை ஆண்டிற்கு 3.6 சதவீதத்திலிருந்து 7.2 சதவீதத்திற்கு உயர்த்துவதென முடிவுசெய்யப்பட்டது. 1971 சனவரி 1 இலிருந்து இப்புதிய வட்டி வீதம் நடைமுறைக்கு வரும். அத்துடன் 5 தொடங்கி 7 ஆண்டு வரையுள்ள அரசாங்கப் பிணைகளுக்குக் கொடுக்கவேண்டிய வட்டி வீதத்தை 6 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு உயர்த்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. நிகழ் நிதியாண்டில் இவ்வட்டி வீதத் திருத்தங்களுக்குப் பின் அரசாங்கப் பிணைகளின் வைப்புக்கள் ரூ. 3000 இலட்சத்தால் அதிகரித்ததென மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே நடைமுறை நிதியாண்டின் முழுமை வரவுசெலவுத்திட்டப் பணக்குறையை நிதியீட்டஞ் செய்ய இந்த 3 வரியல்லா ஏற்பாடுகளிலிருந்து ரூ. 1,700 இலட்சந் தேறிய தொகையைப் பெறலாமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

| | பத்து இலட்சம் ரூபாய்களில். |
|---|---|
| கட்டாய சேமிப்புத் திட்டத்தின் விளைவாக அரசாங்கப் பிணைகளின் வைப்புக்களில் அதிகரிப்பு | 105.0 |
| ஊ. சே. நி. வீதங்களில் அதிகரிப்பு உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதும் நிலுவைகளைச் சேர்ப்பதும் | 35.0 |
| வட்டி வீதங்களைத் திருத்தியதன் விளைவாக அரசாங்கப் பிணைகளில் வைப்புக்களின் அதிகரிப்பு | 30.0 |
| | 170.0 |

**(ஈ) வரவுசெலவுத்திட்ட உரையிற் கூறப்பட்ட ஏனைய வழிமுறைகள்**

(i) உழைக்கும்போது கொடுக்கும் திட்டம்

1971 ஒற்ரோபர் ஒன்றுதொடங்கி வருமானவரிக்கு உழைக்கும்போது கொடுக்கும் திட்டங்கொண்டு வரப்படவிருக்கிறது. இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வரி கழிப்பிற்குரிய எல்லா வரி கட்டுவோரையும் பதிவுசெய்ய வேண்டியிருப்பதால் (இதுவரை பதிவுசெய்யப்பட்ட வரி கட்டுவோருடன் மேலும் 25,000 பேர்கள் பதிவுசெய்யப்பட்டு மதிப்பிடப்படவிருப்பதால்) 1969–70 / 1970–71 ஆகிய ஆண்டுகளுக்குரிய ரூ. 6,000உக்குக் குறைய மதிப்பிடப்பட்ட வருமானம் பெறுவோர் அனைவருக்கும் இறைவரியிலிருந்து விதிவிலக்கு அளிப்பதென முடிவுசெய்யப்பட்டது. இந்த மாற்றம் தவிர்த்து 1970–71இற்கும் இதற்கு முந்திய ஆண்டுகளையும் பொறுத்தவரை மதிப்பீடு செய்வதற்கும் வரியை அறவிடுவதற்கும் இன்றுள்ள ஏற்பாடுகள் தொடரும்.

ரூ. 12,000 உக்குக் குறைய மதிப்பிடத்தக்க வருவாய் பெறும் அனைவர்க்கும் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ்க்கழிக்கப்படும் வரியை இறுதிக் கழிப்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஏற்பதற்கு ஏற்பாடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. வரி பற்றிக் கணக்கிடும் முன் சம்பளத்திலிருந்து ஊழியர் சேமநிதி, விதவைகள் அனாதைகள் செலுத்து தொகை ஆகியவற்றிற்கு ஊழியர்கட்கும் முழுத்தொகையை முதலில் கழிக்க வேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டது. ஆண்டிற்கு ரூ. 300வரை வட்டி செலுத்த ரூபாவின் கோரிக்கைகளைக் குறைப்பதற்குக் கொடுப்பனவுத் திட்டத்திற்குரிய வரி அட்டவணைகளை ஆயத்தஞ் செய்யும்போது இவ்வட்டி செலுத்துவோருக்கு வேலை வருவாயில் ஆண்டிற்கு ரூ. 300 கொண்ட மேலும் கூடிய படியை வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. 1972/73 மதிப்பீடு ஆண்டு தொடங்கி எல்லா மூலங்களின் மதிப்பீடும் நடைமுறையாண்டு அடிப்படையிலேயே அமையும். இந்த ஒழுங்கின்படி தம் தொழிலல்லாத ஏனைய மூலங்களிலிருந்து வருவாய் பெறுவோர் செலுத்தும் வரி, ஏற்கெனவே தாமாக மதிப்பிட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே கணிக்கப்படும்.

### (ii) பொதுத்துறைக்கு ஒருங்குபடுத்தப்பட்ட கணக்கிடும் காலம்

இன்னுமொரு குறிப்பிடத்தக்க மாற்றம் யாதெனில் 1972 சனவரி 1 தொடக்கம் அரசாங்க (பொதுத்துறை முழுதிற்கும் தரப்படுத்தப்பட்ட கணக்கிடும் ஆண்டாக கலண்டர் ஆண்டை ஏற்பதென்பதேயாகும்) இந்த மாற்றம் அரசாங்கத்தையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் நியதிச்சட்ட சபைகளையும் உள்ளடக்கும். இது மேற்குறித்த நிறுவனங்களில் வெவ்வேறு காலத்தில் கணக்கிடுவதனால் விளைவுகளையும் சிக்கல்களையும் ஒப்பிடுவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கும் தேவையற்ற எழுத்து வேலை, பிழைகள், முரண்பாடுகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கும் துணைசெய்கிறது.

### (iii) உள்நாட்டு இறைவரிச்சட்டத்திற்குத் திருத்தங்கள்

வரியிலிருந்து தப்புவதைத் தடுப்பது இதனில் ஒரு நோக்கமாய் இருப்பதனாற் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் சுங்கத் திணைக்களத்திற்கும், காவற்றுறை (பொலிசு) மேற்பார்வை நாயகத்தினால் நியமிக்கப்பட்ட சில அலுவலர்களுக்குமிடையில் இருவயினொத்த தகவல் பரிமாறல் இருக்கும் முறையில் உள்நாட்டு இறைவரிச் சட்டம் இரகசிய ஏற்பாடுகள் மாற்றப்படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த வழிமுறை குறித்த திணைக்களங்களில் புலனாய்வு செய்வதற்கும் இவற்றிடை பெறும் தகவல்களை ஒப்புநோக்குதற்கும் துணைசெய்கிறது. அரசாங்க ஊழியர் தவிர்த்து தகவல் தரும் ஏனையோர் பெறும் வெகுமதிகளுக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கும் முறையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

### (iv) வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்பு

செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் உத்தரவின்றி வெளிநாட்டில் நிதி வைத்திருக்கும் இலங்கையருக்கு வெளிநாட்டுச் செலாவணி வருமான வரி மன்னிப்பு வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.[1] குறித்தவொரு காலத்திற்கிடையில் இலங்கையருக்கு தம் பணத்தை மீண்டும் பெறின் அத்தகையோருக்கு, வெளிநாட்டிலிருக்கும் பணங்கள் எந்த முறையில் எந்தச் சூழ்நிலையிற் சேர்க்கப்பட்டவென்று செலாவணிக் கட்டுப்பாட்டு விசாரணைகளுமின்றி வருமான வரி கட்டவேண்டிய நிபந்தனையுமின்றி விதிவிலக்கு அளிக்கப்படும். இந்த மன்னிப்பு 1971 சனவரி 31வரை செல்லுபடியாகுமென்று இருந்தது. (இந்தத் தற்காலிகத் திகதி 1971 மாச்சு 31வரை பின்பு நீடிக்கப்பட்டது) எனினும், வெளிநாட்டுச் செலாவணியை தப்பாகக் கையாண்டோரென்று குற்றஞ் சுமத்தப்பட்டவர்களும் புலனாய்விற்கு உட்பட்ட செலாவணி விடய நடவடிக்கைகளிலீடுபட்டோரும் இந்த மன்னிப்பிற்கு உரிமையுடையவர்களல்லர்.

1. 1971இன் 1ஆம் எண் தாங்கிய வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்.

அத்துடன் ஒரு சிறப்பு நிதியை ஏற்படுத்தி அதற்கு வெளிநாட்டிற் பணி புரியும் இலங்கையர் ஒழுங்கான இடைவேளைகளில் ஒரு குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்யப் பட்டது. இவ்விதம் அனுப்பப்படும் பணம் வெ. செ. உ. சா. வீதத்தில் அதிகரிக்கவும், நிலையான வைப்புக்களுக்குள்ள வர்த்தக வங்கி வீத வட்டியுடன் ஒப்பிடத்தக்களவு வட்டி பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விதம் அனுப் பப்படும் பணத்திற்கு வருமானவரி விதிவிலக்கு அளிக்கப்பட்டு இப்பணத்தை அனுப்பியவர் இலங்கை வரும்போது தம் தேவைக்குப் பயன்படுத்தும் முறையில் கிடைக்கத்தக்கதாய்ச் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(v) இரத்தினக் கற் கூட்டுத்தாபனம்

இரத்தினக் கைத்தொழிலின் எல்லாப் பண்புகளையும் உள்ளடக்கும் முறையில் இரத்தினக் கற் கூட்டுத்தாபன உருவில் சட்ட நியதி நிறுவனமொன்றை நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது. இதுகாலவரை இரத்தினக் கைத்தொழிலின் ஊடாக வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதை இந்நாடு இழந்திருந்தது. ஆண்டொன்றுக்கு இந்த இழப்பு ரூ. 1,000 இலட்சமென மதிப் பிடப்பட்டுள்ளது. இரத்தினச் சுரங்க வேலையில் தனியாட்கள் ஈடுபடும் வாய்ப்புக்களை வழங்குவதோடு இரத்தினக் கற்களை வெட்டுவதிலும், மினுக்குவதிலும் தற்கால முறையிற் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

## 11. ஏனைய நிதி வழி முறைகள்

1970இல் எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க ஏனைய நிதி வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 1970 நவம்பர் 3 தொடக்கம் வர்த்தக மொத்த விற்பனை வரியி வரியிலிருந்து இதுவரை 3 சதவீத வரிக்கு உட்படுத்தப்பட்ட முட் கம்பி தயாரிப்பிற்கு விதிவிலக்கு[1] அதிகரிக்கப்பட்டது.

(ஆ) 1970 யூலை 1 தொடங்கி 15 சதவீத உற்பத்தி வரிக்கு இதுவரை உட்படுத்தப்பட்ட தீப்பெட்டியின் தயாரிப்பு வரி 3 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.[2]

(இ) 1970 யூன் 30 தொடங்கி 25 சதவீத [3] வியாபார மொத்த வரிக்குப் பின்வருபவை உட்படுத்தப்பட்டன.

(i) உந்து ஊர்திகளை (உந்து ஈருருளிகள் ஸ்கூட்டர் தவிர்த்து)த் தயாரிப்பதற்கு அல்லது ஒன்று சேர்ப்பதற்குரிய துணைக் கருவிகள், உட்கருவிகள் துணை உறுப்புக்களை விற்கும் வியாபாரம் ஆகியவை.

(ii) உந்து ஊர்திகளை (உந்து ஈருருளிகள் ஸ்கூட்டர் தவிர்த்து) உந்து ஊர்திகளை ஒன்று சேர்க்கும் அல்லது தயாரிக்கும் வியாபாரமும் இவற்றை ஒன்று சேர்ப்பதிலும் தயாரிப்பதிலும் ஏற்படும். சேவைகளும் இவற்றுள் அடங்கும்.

(iii) உந்து ஈருருளிகள் ஸ்கூட்டர் தவிர்த்து இலங்கையில் ஒன்று சேர்க்கப்பட்ட அல்லது இலங்கையில் தயாரிக்கப்பட்ட உந்து ஊர்திகளை விற்கும் வியாபாரமும் ஆகியவை.

---

1. 1970, நவெம்பர் 3ஆந் திகதிய 14,896/3 எண்தாங்கிய இலங்கை அரசாங்கச் செய்திமடல்.
2. 1970, மே 22ஆந் திகதிய 14,907 எண் தாங்கிய இலங்கை அரசாங்கச் செய்திமடல்.
3. 1970, யூன் 20ஆந் திகதிய 14,912/5 எண்தாங்கிய இலங்கை அசசாங்கச் செய்திமடல்.